படைப்பு
சமூகத்தின் இணைப்பு
ஊற்று-7 | நதி-11 | மார்ச் 2025 | திங்களிதழ்
ISSN: 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



# நானும் என் எழுத்தும்..

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்

ஊற்று-7 | நதி-11 | மார்ச் 2025

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர்:
**ஜின்னா அஸ்மி**

ஆசிரியர்:
**ஆசியாதாரா**

நிர்வாகக் குழு:
**சகா (சலீம் கான்)**
**ஜெ. ராஜா ஜெயகரன்**

தலைமை நிருபர்:
**க.சோ.திருமாவளவன்**

நிருபர்கள் குழு:
**முனைவர் கோ.நித்தியா**

முதன்மை வடிவமைப்பாளர்:
**கமல் காளிதாஸ்**

வடிவமைப்பு:
**தேவம்.ஆரோன்**

ஓவியக் கலைஞர்கள்:
**திண்டுக்கல் தமிழ்ப்பித்தன்**
**அழ.ரஜினிகாந்தன்**

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி:
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி:
படைப்பு குழுமம்
அரசு பதிவெண்: 521/2018
#8, மதுரை வீரன் நகர், கூத்தப்பாக்கம்,
கடலூர், தமிழ்நாடு - 607002.
**admin@padaippu.com**
***73388 97788 / 73388 47788***

நேர்காணல்கள் மற்றும்
கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர்
கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின்
கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு
மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...

- **தலையங்கம்** ........ ப.4
- **நானும் என் எழுத்தும்** ........ ப.5
  - கோ.லீலா ........ ப.6
  - அன்புச்செல்வி சுப்புராஜு ........ ப. 10
  - நித்யா ராமதாஸ் ........ ப. 13
  - காதம்பரி ........ ப. 15
  - பிரவந்திகா ........ ப. 18
  - ஜபினத் ........ ப. 20
  - உமா ........ ப. 22
- **கட்டில்: பரிணாமங்களும் பரிமாணங்களும்...**
  - முனைவர் நா.சுலோசனா ........ ப. 23
- **சமூகச் சிந்தனையாளர் ஸ்ரீ நாராயண குரு**
  - முனைவர் பொ. திராவிடமணி........ ப. 33
- **நடனமாடும் தெய்யம்**
  - நெல்லை க.சோமசுந்தரி........ ப. 40
- **பெண் குழந்தைகளும் பெண்களுமே சமூகத்தின் எதிர்காலம்!**
  - நந்தினி ஜெயபாரதி ........ ப. 49
- **நினைவுகளை மீட்கும் கவிதைகள்**
  - விஜயராணி மீனாட்சி........ ப. 58
- **அடுத்து என்ன?**
  - கனி விஜய் ........ ப. 61

## சிறுகதைகள்


- **பண்ணை வீட்டு மனோரா**
  - குடந்தை அனிதா ................................ ப. 29
- **இரும்பு மரம்**
  - பாண்டிச்செல்வி விஸ்வநாதன்..................... ப. 42
- **பயணம்**
  - உமா ஷக்தி.................................. ப. 53


## கவிதைகள்


சரண்யா சத்தியநாராயணன் ............ ப. 48

ஷெண்பா ................................ ப. 48

ஜே.மஞ்சுளாதேவி ...................... ப. 48

லக்ஷ்மி .................................. ப. 57

மதுரா.................................... ப. 57





**Facilities**

- Capacity 90 - 100 (Persons)
- AC Hall with Audio system
- POP with Profile lights
- Tea / Coffee snacks place
- Projector

**படைப்பு அரங்கம்**
**# 3, தரைத்தளம், அஜந்தா டவர்ஸ்,**
**கார்ப்பரேஷன் காலனி தெரு,**
**கோடம்பாக்கம்,**
**சென்னை - 600 024**
**+91 73388 97788**

## தலையங்கம்

வணக்கம். படைப்பு ‘தகவு’ எண்பத்துமூன்றாவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

மார்ச் மாதத் தகவு இதழ் பெண்களின் படைப்புகளைச் சுமந்து வந்திருக்கிறது. படைப்புப் பதிப்பகம் வழியாகத் தம் படைப்புகளை வெளிக்கொணர்ந்து இலக்கிய வெளியில் தனித்துவத்துடன் இயங்கிக்கொண்டிருக்கும் பெண் படைப்பாளர்களின் எழுத்துப் பயணம் குறித்த பகிர்வுகள் இதழில் வெளியாகியுள்ளன.

கட்டில் என்பது காலங்காலமாய் மக்கள் புழக்கத்தில் உள்ள ஒரு பொருள். அப்பொருள் இலக்கியத்தில் எத்தகைய சொற்களால் கையாளப்பட்டுள்ளது, நடைமுறையில் எத்தனை வகையான கட்டில்கள் பயன்படுத்தப்படுகின்றன என்பன கட்டில் குறித்த கட்டுரையில் விரிவாகப் பேசப்பட்டுள்ளன.

ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையை உரைக்கும் கட்டுரை இதழில் வெளியாகியுள்ளது. அவரது தொடக்ககால வாழ்வு, சீர்திருத்தச் சிந்தனைகள், செயல்பாடுகள், படைப்புகள் குறித்துத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. சமூகத்திற்காகச் செயலாற்றியோர் பற்றியும் செய்யப்பட்ட சீர்திருத்தங்கள் பற்றியும் தொடர்ச்சியாக நினைவுபடுத்திக்கொண்டே இருக்க வேண்டியது இலக்கியத்தின் கடமையாகிறது. அதன்வழிதான் இச்சமூகத்தின் முந்தைய நிலை, தற்போதைய மாற்ற நிலை குறித்துச் சமூகம் ஒரு புரிதலைப் பெற முடியும். தெய்யம் என்னும் கலை வடிவம் குறித்த கட்டுரை இடம்பெற்றுள்ளது. தெய்யம் ஆடும் முறைகள், சமூகத்தில் அதன் நிலைப்பாடு ஆகியன எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

தற்காலச் சமூகத்தில் பெண்களின் நிலை எவ்வாறு இருக்கிறது, பெண்களின் உயர்வுக்காக இச்சமூகத்தால் மேற்கொள்ளப்படும் முன்னெடுப்புகள், பெண்கள் கொண்டிருக்க வேண்டிய விழிப்புணர்வு ஆகியன குறித்து விரிவான ஒரு கட்டுரை வெளியாகியுள்ளது. கடிதம் எழுதுதலின் இனிமை பேசும் கட்டுரையும் கவிதை நூல் விமர்சனமும் வெளியாகியுள்ளன.

பெண் எழுத்தாளர்களின் மூன்று சிறுகதைகளாக, ஒரு பெண்ணின் உறுதிமிக்க வாழ்வைப் பேசும் ‘பண்ணை வீட்டு மனோரா’, மரத்துடனான பெண்ணின் பிணைப்பினைப் பேசும் ‘இரும்பு மரம்’, பிற மனிதர்களைப் பற்றிய நமது பார்வை உருவாகும் முறை குறித்துப் பேசும் ‘பயணம்’ ஆகியன இடம்பெற்றுள்ளன.

கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள் என நிறைந்திருக்கும் இந்த மாதத் தகவின் அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

– ஆசிரியர்

## படைப்புக் குழுமம்

















# நானும் என் எழுத்தும்..






தமிழ் இலக்கிய உலகின் மிக முக்கியமான நூல்களைப் பதிப்பித்துவரும் படைப்பு பதிப்பகம், பெண் எழுத்துக்களை முக்கியத்துவப்படுத்தும் வகையில் வருடந்தோறும் பெண் எழுத்தாளர்களின் நூல்களை வெளிக்கொணர்கிறது. சமீபத்தில் படைப்பு பதிப்பகத்தில் மிகச் சிறந்த நூல்களை வெளியிட்ட பெண் எழுத்தாளர்கள் தங்களது எழுத்துப் பயணம் குறித்துப் பகிர்ந்துகொள்கிறார்கள்..



# நானும் என் எழுத்தும்..

## கோ. லீலா

நான் திருவாரூரில் பிறந்தேன். அப்பாவின் மூலம்தான் பல்வேறு புத்தகங்கள் அறிமுகமாயின. அம்மாவும் வாசிப்பாளர். தம்பியின் மூலம் ஓஷோ புத்தகம் அறிமுகமானது. அதற்கு பிறகு வாழ்வின் புரிதல் எளிதானது.

சிறுவயதில் யாருடனும் அதிகம் பேசாத பெண்ணாக இருந்தேன். எங்கள் ஊரில் எப்போதும் ஏதாவது ஓரிடத்தில் தமிழ் அறிஞர்கள் சொற்பொழிவு ஆற்றிக்கொண்டே இருப்பார்கள். தமிழறிஞர்களின் உரைகளும் வீட்டிற்குச் செல்லும்போது நடக்கும் உரையாடல்களும் தமிழ் மொழியின் மீதான மோகமும், மயக்கமும் மேலும் பண்பட்ட அறிதலாக மாறுவதற்குக் காரணமாக அமைந்தன.

திருவாரூர் என்பது லெபனான் போன்றொரு இடம். கோயில்களில் அமர்ந்து பகுத்தறிவு உரையைக் கேட்கவும், பகுத்தறிவு உரையைக் கேட்டுக்கொண்டு கோயில் சிற்பங்களை ரசிக்கவும் வாய்த்தது எனக்கு.

இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் அய்யாவின் மகளும், நாங்களும் அருகருகே வசிக்கும் வாய்ப்பு கிடைத்தது பெரும்பேறு. அய்யாவின் பேத்தியும், நானும் தோழிகள் என்பதால் அய்யாவிடம் கதை கேட்ட அனுபவமும் நிறைந்தது என் இளமைக்காலம். கல்லூரியில் உரைகளைத் தொடர்ந்து கேட்டு, விடுதலை, பெரியாரியக் கொள்கை மீது இயல்பாகவே எனக்கு ஈர்ப்பு ஏற்பட்டது.

இப்படி மொழி, சிற்பம், ஓவியம், பேச்சு, நாடகம், இசை, நாட்டியம், இயற்கை, சூழலியல், பகுத்தறிவு, ஓஷோ, பெரியார் என ஒரு பரந்து விரிந்த களத்தில் வளர்ந்தது என் இளமைக்காலம்.

ஒரு பூ மலரும் தருணத்தை எப்படி கண்டு சொல்ல முடியாதோ, அப்படித்தான், என்னுள் இலக்கியம் முகிழ்த்த தருணமும்... சொல்லத் தெரியவில்லை. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போதே ரசனையோடும், கலையுணர்வோடும்தான் பிறக்கிறான்... அப்போதே இலக்கியமும் வந்துவிடுகிறது.

வாசிப்பாளனே சிறந்த இலக்கியவாதி என்பது என் கருத்து. அவர்களால்தான் உலகை உற்று நோக்க முடியும். எதொன்றையும் அவதானிப்பவரே சிறப்பான, நுட்பமான படைப்புகளைத் தர இயலும் என்பதும் என்னுடைய அசைக்க முடியாத நம்பிக்கை.

இலக்கியம் என்பது பண்பட்ட மனதும், மானிடரின் மீதான அன்பும் என உணர்கிறேன். இலக்கியங்களுடன்தான் பிறந்திருக்கிறேன். அதுவே என்னுள் இலக்கியம் முகிழ்த்த தருணம் என்றும் கொள்ளலாம்.

இதுவரை மறைநீர், ஹைக்கூ தூண்டிலில் ஜென், வரையாட்டின் குளம்படிகள், Water and Virtual Water, ஷின்டோ, சுகிமி, கறுப்பு எழுத்து, மணிச்சிரல், ஹைக்கூ தூண்டிலில் ஜென் 2, அம்பேத்கரும் சூழலியலும் என்ற என்னுடைய பத்து நூல்கள் வெளியாகியுள்ளன. அனைத்தும் படைப்பு பதிப்பக வெளியீடுகள். சோறு-உணவு அரசியல் நூல் வெளிவர இருக்கிறது.

மறைநீர் நூல் சூழலியல் இலக்கிய வகைமையில் தண்ணீர் மேலாண்மை, மறைநீர், கடலுக்குத் தண்ணீர் சேர்வது சரியா?, பழந்தமிழர் பாசன மேலாண்மை, மழைக்காடுகள் எனத் தண்ணீரோடு தொடர்புடைய பல்வேறு கட்டுரைகள் மற்றும் தீர்வுகளை உள்ளடக்கிய எளிய மொழி நடையிலான நூல். மாணவர்களுக்கான பாடப்புத்தகமாக வைக்க வேண்டுமெனப் பல்வேறு தரப்பினரும் கோரிக்கை வைத்திருக்கின்றனர் என்பதும் இந்நூலின் சிறப்பு ஆகும். 2000-2020 வரையிலான புத்தகங்களில் புத்தியைத் துலக்கிய புத்தகமென விகடனால் அறிவிக்கப்பட்டுள்ளது. பல்வேறு விருதுகளைப் பெற்றிருப்பதோடு 5000க்கும் மேலான பிரதிகள் விற்பனை ஆகியுள்ளன.

இந்நூலின் நான்காவது கட்டுரை திருச்சி பிஷப் ஹீபர் கல்லூரிப் பாடத்திட்டத்தில் வைக்கப்பட்டுள்ளது. ஒன்பதாவது கட்டுரை கோழிக்கோடு பல்கலைக்கழகப் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.

ஹைக்கூ தூண்டிலில் ஜென் நூலானது திரைப்பட இயக்குநர், வசனகர்த்தா, கவிஞர் பிருந்தா சாரதி அவர்களின் ஹைக்கூ மீதான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல். பாஷோ, ஓஷோ, ஆண்டன் செக்காவ், தாகூர் ஆகியோர் பற்றிய சுவாரசிய செய்திகளுடன் வந்துள்ள இந்நூல் ஹைக்கூ பற்றிய புரிதலைத் தரக்கூடிய நூலாகும். தமிழ்நாட்டில் ஹைக்கூ மீதான ஆய்வுக்கட்டுரை எழுதிய நான்காவது பெண் என இந்நூல் மூலம் வரிசைப்படுத்தப்படுகிறேன். மேலும், சென்ற சென்னை புத்தகக் கண்காட்சியில் விற்பனையில் 23வது இடத்தைப் பிடித்துள்ளது.



மறைநீர் நூலின் ஆங்கில மொழியாக்கமாக Water and Virtual Water நூல் வெளிவந்துள்ளது.

வரையாட்டின் குளம்படிகள் நூல் சூழலியல் வகைமையில் பதினாறு கட்டுரைகளை உள்ளடக்கியது. சங்க இலக்கியப் பாடல்களில் கானுயிர்கள் பற்றியும் சொல்கிறது. கானுயிர்களைக் காப்பதற்கான வழிமுறைகளையும் (தீர்வு) கூறும் இந்நூல் படிப்பதற்கு மிக எளிய நடையில் இருக்கிறது.

தமிழ்நாட்டில் ஹைக்கூ வந்த காலந்தொட்டு வந்துள்ள ஹைக்கூக்களில், சூழலியல் சார்ந்து விளைந்த 18 ஹைக்கூக்களைத் தேர்ந்து, சூழலியல் பார்வையில் ஆய்வு செய்து எழுதப்பட்ட ஆய்வுக்கட்டுரை நூல், ஷின்டோ.

சுகிமி என்பது குறுங்கவிதை நூல். இவற்றில் இருக்கும் முவ்வரி கவிதைகள் ஹைக்கூ அன்று, ஆனால் ஹைக்கூ தன்மையுடையவை. காடு, கானுயிர், வாழ்வியல், சூழலியல் எனப் பல நுட்பமான பொருண்மையுடையவை.

கறுப்பு எழுத்து நூலானது, கலை விமர்சகர், கவிஞர், ஆவணப்பட இயக்குநர், சாகித்ய அகாடமி விருதாளர் இந்திரன் ராஜேந்திரன் அவர்களின் அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம் நூலின் உணர்வுகள் குறித்த மதிப்புரை.



கறுப்பின எழுத்தாளர்களின் கவிஞர்களின் படைப்புகளை மொழிபெயர்ப்பு செய்து, தமிழ்நாட்டில் முதன்முதலாகத் தலித் இலக்கியத்திற்கு வழி வகுத்த நூல்தான் அறைக்குள் வந்த ஆப்பிரிக்க வானம்.

மணிச்சிரல் என்ற ஹைக்கூ நூல், எண்பது ஹைக்கூக்களுடன் இருபது இணை படைப்பாக ஓவியங்களையும் உள்ளடக்கிய நூல்.

ஹைக்கூ தூண்டிலில் ஜென்-2 என்பது திரைப்பட இயக்குநர், வசனகர்த்தா, கவிஞர் பிருந்தா சாரதி அவர்களின் ஹைக்கூ மீதான ஆய்வுக் கட்டுரைகள் அடங்கிய நூல்.

தமிழகத்தில் இதுவரை யாரும் காணாத கோணத்தில் அம்பேத்கரைக் கண்டுணரச் செய்யும் நூலே அம்பேத்கரும் சூழலியமும் நூல்.

கவிதையைத் தவிர சூழலியல் நூல்கள், ஹைக்கூ ஆய்வு நூல்கள், குறுங்கவிதை, நூல் விமர்சனம், சூழலியல் கட்டுரைகள் ஆகிய வகைமைகளில் எனது நூல்கள் இதுவரை வெளியாகியுள்ளன. இனி வெவ்வேறு வகைமைகளிலும் வெளிவரும்.

மின்னிதழ்கள் உட்பட கணையாழி, படைப்பு தகவு, படைப்பு கல்வெட்டு, இனிய உதயம், குறிஞ்சிப்பெண், சொல்நதி, தமிழ்நெஞ்சம், மகாகவி, காற்றுவெளி, கல்வெட்டு, கனலி, கொலுசு, தீக்கதிர், குமுதம் சிநேகிதி போன்ற இதழ்களில் எனது படைப்புகள் வெளிவந்துள்ளன.

கண்ணதாசன் விருது, படைப்பு இலக்கியச் சுடர் விருது, சிகரம் சிறந்த கட்டுரை நூலுக்கான விருது, காற்றுவெளி பூலோக கங்கை விருது, சக்தி விருது 2023, தாரகை விருது 2023 உள்ளிட்ட பல விருதுகளைப் பெற்றுள்ளேன்.

நான் வேறு இயற்கை வேறல்ல... இயற்கையின் ஒரு துகள்தான் நான். இயற்கையை நான் ரகசியா என்றே அழைக்கிறேன். ரகசியா என்பது பொதுப் பெயர். ரகசியா என் தோழி, தோழன், காதலி, காதலன், தாய், தந்தை, குரு, சேய், சகோதரன், சகோதரி என எல்லாமுமாக இருக்கிறார். இயற்கை இல்லையென்றால் நானில்லை.

தினமும் வாசிப்பதை வழக்கமாக வைத்திருக்கிறேன். தமிழ், ஆங்கிலம் இருமொழி நூல்களையும் வாசிப்பேன். என்னைப் பொறுத்தவரை உலகமே பெரிய புத்தகம், அதை தினந்தோறும் வாசிக்கவும் சுவாசிக்கவும் வேண்டும். உலகப் புத்தகத்தின் கிளைக்கதைகள் தாங்கிய புத்தகங்கள் மனிதர்கள்.

வாசிப்பு என்பது நுட்பமாகவும், ஆழ்ந்து அகழ்ந்தும் இருக்க வேண்டும். வாழ்நாள் குறைவு, அதனால் படிக்க வேண்டியவற்றைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டும். வாழ்வியல், தத்துவம் கொண்டு வாழ்வைச் செம்மைப்படுத்திக்கொள்ள, பரந்த மனநிலையுடன் எல்லோரையும் நேசிக்க ஓஷோவை வாசிக்கிறேன்.

வருங்காலச் சந்ததியினருக்கு, தூய நீரும், சோறும், காற்றும் கிடைக்கும் நல்லதொரு பூமியைக் கையளிக்க சூழலியல் மற்றும் தண்ணீர் சார்ந்த புத்தகங்களை வாசிக்கிறேன். மன மகிழ்ச்சிக்காகக் கவிதைகள், கதைகள் வாசிக்கிறேன். ஹைக்கூ மற்றும் கஸல் கவிதைகள் என் பெருவிருப்பம். கதைகள் எனில் சமூக அவலங்களைச் சொல்லும் கதைகளை, காடு, கடல் பற்றி விவரிக்கும் புத்தகங்களை வாசிப்பேன்.

உண்மையைச் சொல்ல வேண்டுமெனில் தமிழ் ஆங்கிலம் ஆகியவற்றில் கண்டதையும் வாசிப்பேன். வாசிப்பே என் சுவாசம்... அதனை இயற்கையை வாசித்தல், மனிதர்களைப் படித்தல், புத்தகங்களைப் படித்தல் என வகைப்படுத்திக் கொள்கிறேன்.

வாசித்தலும் எழுதுதலுமாக என் இலக்கியப் பயணம் சிறப்பாகச் சென்றுகொண்டிருக்கிறது. ■



# நானும் என் எழுத்தும்..

அன்புச்செல்வி சுப்புராஜ்

எனது எழுத்துப்பயணம் நான் எழுதுவதோடு பிறர் எழுதுவதை ஊக்கப்படுத்துவதாகவும் அமைந்திருக்கிறது.

அன்பின் சங்கமம் சிறுவர் உலகம், தன்முனைக் கவிதைப் படைப்பாளர்கள் பேரவை, தமிழ்த் துளிப்பா பேரியக்கம் என்று மூன்று அமைப்புகளை நிறுவி நடத்திவருகிறேன். தன்முனைக் கவிதைப் படைப்பாளர்கள் பேரவை வழியாக தன்முனைக் கவிதை வகைமையை உலகளாவிய வகையில் கொண்டு சேர்ப்பதற்கான பலவிதமான முன்னெடுப்புகளை எடுத்துவருகிறேன். தன்முனைக் கவிதை, ஹைக்கூ, ஹைபுன் எழுதும் ஆர்வம் உள்ளவர்களுக்கு இலவசமாகப் பயிற்சி அளித்தல், இக்கவிதை வகைமைகளில் தேர்ந்த தகைசான்றோர்களை அழைத்துப் பயிற்சிப் பட்டறை நடத்துதல், காணொளி வழியாகப் போட்டிகள் நடத்திப் புத்தகங்கள் பரிசு தந்து வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுதல் முதலியனவற்றைச் செய்துள்ளேன்.

தமிழ்த் துளிப்பா பேரியக்கம் வழியாக இயற்கை சார்ந்த இடங்களில் மாதம் ஒரு கூட்டம் நடத்தி, நடைப்பயிற்சியுடன் கூடிய ஹைக்கூ கலந்துரையாடல் மற்றும் ஹைக்கூ நூல்கள் அறிமுகம் போன்றவைகளை நடத்திவருகிறோம். 12.02.2025இல் மாதனாங்குப்பம் சோகா இகதா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடத்திய ஹைக்கூ பயிலரங்கில் பங்கேற்ற மாணவிகள் எழுதிய ஹைக்கூ கவிதைகள் நூலாக வெளிவந்துள்ளது மகிழ்வான விடயமாகும்.

அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் அமைப்பில் இணைந்துள்ள பன்னாட்டுக் குழந்தைகளுக்கு மட்டுமல்ல புதிதாக எழுதும் ஆர்வம் உள்ள அவர்தம் பெற்றோர்களுக்கும் சேர்த்து சிறார் கதைகள், தன்முனைக் கவிதைகள், சிறுகதைகள் எழுதப் பயிற்சி தருதல், கதை சொல்லும் ஆர்வத்தைத் தூண்டுதல், செய்திகள் வாசிக்கப் பயிற்சி தருதல் முதலிய செயல்பாடுகளைச் செய்துவருகிறேன்.

இவர்களின் திறமை அமைப்புக்குள் மட்டும் முடங்கிவிடாமல் தமிழாழிப் பேரவை, கனடா அமைப்புடன் இணைந்து இதுவரை 175க்கும் மேற்பட்ட பல்சுவைக்களம் சிறார்

நிகழ்ச்சி நடத்தி உலகளவில் அவர்களின் திறனை வெளிப்படுத்தச் செய்கிறேன். குழந்தைகள் எழுதும் கதை, கவிதைகளை பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் தமிழ்நெஞ்சம் மின்னிதழில் இடம்பெறச் செய்கிறேன். இத்துடன் திருக்குறளைக் குழந்தைகள் அனைவரும் நன்கு கற்று உணர வேண்டும் என்பதற்காக ஆவடி 'திருக்குறளும், பொருளும்' என்ற தலைப்பில் காணொளிப் போட்டி நடத்தி வெற்றி பெற்றவர்களுக்குப் புத்தகங்கள் பரிசாக அனுப்பித் தந்துவருகிறேன்.

மேலும் பல தனியார் பள்ளிகளில் குழந்தைகளுடனான கலந்துரையாடல் நிகழ்வுகளில் சிறப்பு அழைப்பாளராகப் பங்குகொண்டு குழந்தைகளுக்கு வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்த்தியும், கதை மற்றும் கவிதைகள் எழுதவும் தூண்டிவருகிறேன்.

தமிழ் இலக்கிய உலகில் தன்முனைக் கவிதையின் கிளை வடிவமாக 'தன்முனையியைபுக் கவிதை' வகைமையை அறிமுகம் செய்துள்ளேன்.

புதிதாக எழுதும் ஆர்வமுள்ள பெண்கள் மற்றும் குழந்தைகளை ஊக்குவித்து அவர்களின் படைப்புகளை வெளிவரச் செய்வதை நோக்கமாகக் கொண்டு செயல்பட்டுவருகிறேன்.

இதுவரை 29 நூல்கள் வெளியிட்டுள்ளேன். நான் தனித்து எழுதிய நூல்கள் "அன்பின் கவிதைகள்" (புதுக்கவிதை), "நிலவோடு நான்" (குறுங்கவிதை), "துளிர்க்கும் மரம்" (ஹைக்கூ), "மகரந்தத்தின் தேடல்கள்" (புதுக்கவிதை), "லாந்தர் விளக்கின் வெளிச்ச சிதறல்கள்" (தன்முனைக் கவிதை), "ஆண்டிபட்டி ஆச்சி சொன்ன விடுகதைகள்" (பாகம் 1), ஆண்டிபட்டி ஆச்சி சொன்ன விடுகதைகள் (பாகம் 2), 'டோடோ' (சிறார் கதைகள்), குட்டி யானை அப்பு (சிறார் பாடல்கள்), காலத்தூரிகை (தன்முனைக் கவிதை நூல்), மோதிரம் வரையும் நிலா (ஹைக்கூ), அன்பு ஆச்சியின் தாலாட்டுப் பாடல்கள் ஆகியன. இதில் மகரந்தத்தின் தேடல்கள் நூல் வல்லினச் சிறகுகள் மின்னிதழ் நடத்திய அமரர் மருத்துவர் ஜெ. அம்பிகாதேவி நினைவுப் பரிசுப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்றது.

தொகுப்பு நூலாக உலகளாவிய பெண் படைப்பாளர்களின் முதல் தன்முனைக் கவிதைகள் தொகுப்பு "மகரந்தம் தூவும் மலர்கள்" வெளிவந்துள்ளது.

இணையவழியில் நேரலை ஒளிபரப்பு நடைபெறும்பொழுதே மார்ச் 5, 2021 மாலை ஆறு மணிக்குப் பன்னாட்டுப் பெண்கள் இணைந்து நான் சூழல் சொன்னதும் உடனே அவர்கள் அதற்கேற்ற தன்முனைக் கவிதைகள்





எழுதியதுடன், எழுதிய கவிதைகளை வாசித்தார்கள். அக்கவிதைகளைப் புலனம் வழியாக உடனே தொகுத்து நூலாக்கம் செய்து மார்ச் 8, 2021 பெண்கள் தினத்தன்று வெளியிட்ட "மலர்கள் தீட்டிய வரைவுகள்" (தன்முனைக் கவிதைகள்) "புக் ஆஃப் வேர்ல்ட் ரிக்கார்ட்" உலக சாதனை நூல். இந்நூலில் தன்முனைக் கவிதை எழுதிய முதல் இளங்கவிஞர் என்னும் சிறப்புடைய சிறுமி சு. பிரவந்திகா அவர்களின் கவிதையும் இடம்பெற்றுள்ளது சிறப்பு.

தமிழ்ப் பெண் படைப்பாளர்களின் முதல் லிமரைக்கூ தொகுப்பு நூல் 'இமயம் தொடும் இயைபுகள்', குழந்தைகள் குறித்த முதல் தன்முனைக் கவிதைகள் தொகுப்பு நூல் 'இங்காவின் ஆலாபனைகள்', 25 குழந்தைகள் எழுதிய முதல் தன்முனைக் கவிதைகள் நூல் ''அ' ~ அன்பின் அரிச்சுவடி', பெண்கள் எழுதிய சிறுகதைத் தொகுப்பு 'நறுமுகை யாளிகள்', உலகளாவிய பெண்கள் எழுதிய முதல் சென்றியு நூல் 'தேனீக்கள் சேகரித்த சென்றியு', தன்முனையியைபுக் கவிதைகள், ஹைபுன் முதல் பெண்கள் தொகுப்பு நூல் 'யாழ்கள் மீட்டிய உரைத் துளிப்பாக்கள்', 100 படைப்பாளர்கள் எழுதிய தன்னம்பிக்கை கட்டுரை நூல் 'வலிமைமிகு எண்ணங்கள்', 'குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள்', 'வாண்டுகள் சொன்ன கதைகள்' போன்ற நூல்களின் தொகுப்பாசிரியர்களில் ஒருவராக இருக்கிறேன்.

எனது எழுத்துப் பணிக்காகப் பல விருதுகளைப் பெற்றுள்ளேன். கவியுலகப் பூஞ்சோலை குழுமம் வாயிலாகப் பெற்ற "கவி வேந்தர்" விருதே நான் பெற்ற முதல் விருது. கம்போடிய அரசுடன் இணைந்து அங்கோர்வாட் தமிழ்ச்சங்கம் அளித்த சர்வதேச பாரதியார் விருது, கனடா தமிழாழிப் பேரவை வழங்கிய கலையாழி விருது, பன்னாட்டுப் பெண்கள் அமைப்பு வழங்கிய தேன்மொழி விருது, தென்னிந்தியக் கலை மற்றும் கலாச்சார மையம் வழங்கிய கவிதைக்கலை வித்தகி, தமிழ்நாடு முற்போக்கு கலை இலக்கிய மேடை வழங்கிய அசோகமித்திரன் நினைவு படைப்பூக்க விருது உள்ளிட்ட விருதுகளைப் பெற்றுள்ளேன்.

எனது முதல் சிறார் கதைகள் புத்தகம் 'டோடோ' படைப்பு பதிப்பகத்தின் வழியாக வெளியானது. கதைகளுக்கு ஏற்ற படங்களுடன் வெளிவந்த 'டோடோ' புத்தகம் குழந்தைகளிடையே பெரும் வரவேற்பைப் பெற்றது. பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் 'தமிழ் நெஞ்சம்' இதழ் இந்நூலின் மதிப்புரையை வெளியிட்டுச் சிறப்பு செய்தது. கனடா நாட்டின் 'தமிழாழிக் காட்சி' டோடோ நூல் அறிமுகம் நிகழ்வு நடத்திப் பாராட்டியது. இதனால் உலகளவில் பரவலாக தமிழில் புத்தகம் வாசிக்க விரும்பிய குழந்தைகளிடையே 'டோடோ' புத்தகம் சேர்ந்தது என்பதில் மனம் நிறைவாக உள்ளது. இதுபோல் இன்னும் பல புத்தகங்கள் வெளிவர வேண்டும் என்பதே என் ஆவல்.



# நானும் என் எழுத்தும்..

## நித்யா ராமதாஸ்

கன்னியாகுமரி மாவட்டம் பைங்குளம் கிராமத்தில் பிறந்த நான், படித்தது வளர்ந்தது எல்லாம் சென்னையில்தான். பொறியியல் பட்டம் பெற்று மென்பொருள் துறையில் ஓரிரு ஆண்டுகள் பணிபுரிந்தேன். பின்னர் அந்தப் பணியை ராஜினாமா செய்துவிட்டு, அரசுப் பணிக்கான தேர்வுகள் எழுதி தமிழ்நாடு ஆவணக்காப்பகம் மற்றும் வரலாற்று ஆராய்ச்சித் துறையின் சார்நிலை அலுவலகமான திருச்சி மாவட்ட ஆவணக்காப்பகத்தில் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்தேன். தற்போது மதுரை மாவட்ட ஆவணக் காப்பகத்தில் ஆராய்ச்சி உதவியாளராகப் பணிபுரிகிறேன்.

2013ஆம் ஆண்டு திருச்சியில் ஒரு விடுதியில் தங்கியிருந்தபோது, அந்த விடுதிக்கு அருகில் இருந்த பள்ளியின் மாணவியர் விடுதி ஒன்றில் வார விடுமுறை நாட்களில் குழந்தைகளுக்குக் கதை சொல்லத் தொடங்கினேன். குழந்தைகள் "கதை சொல்ற அக்கா" என்று அழைத்தார்கள். அப்போது ஒருநாள் எங்கள் விடுதியில் இருந்த வார இதழ் ஒன்றில் நான் வாசித்த சீதா ராமர் பற்றிய காதல் கதை ஒன்று வெகுவாகக் கவர்ந்ததால், புதிதாக நான் வாங்கியிருந்த ஸ்மார்ட் போனில் அக்கதையை ஆடியோவாக ரெக்கார்டு செய்து கேட்டுப் பார்த்தேன். கேட்க அழகாக இருந்ததால் சில நாட்கள் கழித்து, அதை எனது தம்பி வசந்துக்கு அனுப்பிவைத்தேன். அவனோ, அக்கா இதை நாம பெருசாக்கலாம் என்று அடுத்த நாளே நித்யாஸ் எஃப்எம் என்ற வாட்ஸ் அப் குழு ஒன்றைத் தொடங்கினான். அந்தக் குழுவில் நான் இரண்டு நிமிட ஆடியோ கதைகள் அனுப்பத் தொடங்கினேன்.

முதல் ஆறு மாதம், அந்தக் குழுவில் நானும் தம்பியும் மட்டுமே இருந்தோம். பின்னர் நட்புகள், நட்புகளின் நட்புகள், அறிமுகமில்லாதவர்கள் எனப் பலர் எங்கள் நித்யாஸ் எஃப்எம் குழுவில் இணைந்தனர்.

சென்னைக்குப் பணி இடமாற்றம் ஆகியிருந்ததால், அலுவலகப் பணி முடிந்து வீடு திரும்பியதும், இரண்டு நிமிடக் கதைக்கான கன்டெண்ட் எழுதி அதை நித்யாஸ் எஃப்எம் குழுவில் ஆடியோவாக அனுப்புவது தொடர்ப் பணியாக மாறியது. இப்படி கடந்த பத்து ஆண்டுகளாக இணைய வழி கதைச் சொல்லியாக இருக்கிறேன்.

எனது இருநூறுக்கும் மேற்பட்ட ஆடியோ கதைகள் www.nithyasfm.com என்ற இணைய தளத்தில் பதிவேற்றப்பட்டுள்ளன. நித்யாஸ் எஃப்எம் யுடியூப் சானல் மற்றும் நித்யாஸ் எஃப்எம் ஸ்பாட்டி ஃபை பாட்காஸ்டிலும் எனது கதைகள் பதிவேற்றப்பட்டுள்ளன.

நாலடியாரும் நந்தினியும் என்ற பெயரில் இருபத்தி இரண்டு நாலடியார் பாடல்களை அடிப்படையாகக் கொண்டு காதல் கதை ஒன்றைத் தொடராக எழுதி அதை ஆடியோ

வடிவில் 25 எபிஸோடுகளாக எனது நித்யாஸ் எஃப்எம் வாட்ஸ் அப் குழுவில் பகிர்ந்தேன். நான் ஆங்கிலத்தில் எழுதிய Arunism என்ற குறுநாவல் ஒன்றையும், Dream Doll என்ற சிறுகதைத் தொகுப்பு ஒன்றையும் அமேசான் கிண்டிலில் சுயமாகப் பதிப்பித்துள்ளேன்.

பின்னர் ஒருநாள், நான் வாசித்த புத்தகங்களில் இருந்த சுவாரஸ்யமான தகவல்களை எனது நித்யாஸ் எஃப்எம் நேயர்களுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மீண்டும் தொடர்கதை ஒன்றை எழுதத் தொடங்கினேன். மூன்று பகுதிகள் மட்டும் எழுதிய நிலையில், மேலும் தொடர முடியாமல் விட்டுவிட்டேன். சில மாதங்கள் கழித்து நண்பர் ஒருவருடன் சவாலாக, ஒருநாள் எட்டுப் பக்கங்கள் என எழுதி இருபத்தியொரு நாட்களில் பாதியில் விட்ட தொடர்கதையை முழுமையாக முடித்தபோது இயல்வாகைப் பூக்கள் நாவல் உருவாகியிருந்தது.

இந்த நாவலைப் புத்தகமாகப் பதிப்பிக்க முடிவு செய்தபோது, தம்பி ஒருவர் அதனைப் படித்துத் திருத்தம் செய்ய உதவினார்.

கலைமாமணி VKT பாலன் அவர்கள் அதற்கான அணிந்துரை வழங்குவதாகத் தெரிவித்தார். ஆனால் சூழ்நிலை காரணமாக அவரால் அணிந்துரை வழங்க இயலாததால் நித்யாஸ் எஃப்எம்மின் நீண்ட கால ரசிகை ஒருவர் அணிந்துரை வழங்கினார். எனது முதல் தமிழ் நாவலான இயல்வாகைப் பூக்கள் படைப்பு பதிப்பகம் மூலம் 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் புத்தகமாக வெளியிடப்பட்டது.

இந்த நாவலை வாசித்த தோழி ஒருவர், "வித்யாவை நினைச்சப்ப ஏனோ அழுகையா வந்துச்சு" என்று கதையோடு ஒன்றி வித்யா கதாபாத்திரத்திற்காக வருந்திக்கொண்டார்.

இன்னொரு தோழரோ, "உங்க இயல்வாகைப் பூக்களை வாசிச்சேன். முற்போக்கு விஷயங்கள ராசாத்தி மூலமா அழகா போற போக்குல விதச்சிருந்தீங்க. உங்க ராசாத்தி நிறைய புத்தகம் வாசிக்கிறா. ராசாத்தி கதாபாத்திரம் மகிழ்ச்சியா இருந்துச்சு. ஆனா வித்யாவைப் பற்றி வாசிச்சப்ப கண்ணு கலங்கிடுச்சு. வித்யாவ தனியா விடாதீங்க. இயல்வாகைப் பூக்களின் அடுத்த பாகம் எப்ப வரும். உங்க கதைய வாசிச்ச பிறகுதான் என் அலுவலகத்தில் இருக்கும் பெருங்கொன்றை மரங்களைக் கவனிக்கிறேன்" என்று விடாமல் பேசினார்.

எனது இயல்வாகைப் பூக்களை ரசித்த இன்னொரு நட்பு எங்கே கொன்றை மலர்கள் பார்த்தாலும் அவற்றைப் புகைப்படம் எடுத்து எனக்கு அனுப்புவதை வழக்கமாக வைத்திருந்தார். இயல்வாகை மரத்தின் கீழ் வாசகர் சந்திப்பு ஒன்று நிகழ்த்த வேண்டும் என்று கூட சிலாகித்தார்.

அறிமுகமில்லா ஒருவர், இயல்வாகைப் பூக்கள் நாவல் திருப்பங்கள் நிறைந்த அழகான காதல் கதை, அதில் எனக்கு ராசாத்தியை ரொம்பப் பிடிக்கும் எனக் காணொலியில் தெரிவித்திருந்தார்.

ஒருவர் இக்கதையை வாசித்துவிட்டு, "வட்டார வழக்குடன் சமூக நாவலாக மிளிர்ந்திருக்க வேண்டிய கதை, சாதியை வெளிப்படையாகச் சொல்லாதது போன்ற சில காரணங்களால் ஒரு குடும்ப நாவலாக மாறிப்போனது. கதைசொல்லியிடம் இருந்து ஒரு காத்திரமான படைப்பை எதிர்பார்க்கிறோம்," என்றார்.

நட்பு ஒருவர், "பன்னிரெண்டாம் வகுப்பு படிச்ச ராசாத்தி, தான் வாசித்த புத்தகங்கள், தனக்குத் தெரிந்த செய்திகள் ஆகியவற்றைக் கொண்டு தன் கதையைத் தானே எழுதியது போல் இருந்தது இந்த நாவல்" என்றார்.

இப்படி பலரின் பாராட்டுடன் விமர்சனங்களையும் சேர்த்தே பெற்று வருகிறது இயல்வாகைப் பூக்கள்.

# நானும் என் எழுத்தும்..

## காதம்பரி



தென்காசி மாவட்டத்தில் உள்ள ராயகிரியைச் சேர்ந்த நான் தற்சமயம் சுவீடன் நாட்டில் வசித்துவருகின்றேன். முழுநேர எழுத்தாளராக இருக்கின்றேன். புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், மொழிபெயர்ப்பு போன்ற துறைகளில் படைப்புகளை எழுதிவருகின்றேன்.

எழுதுவது என்பது சிறுவயதிலிருந்து எனக்குப் பிடித்தமான ஒன்று. பள்ளிப் பருவத்திலே கவிதைகள் எழுதும் வழக்கம் இருந்தது. கவிதைப் போட்டிகளில் பங்கெடுத்துக்கொண்டு பரிசு வென்ற அனுபவமும் நிரம்ப உண்டு. கல்லூரிக் காலகட்டத்திலும் அது தொடர்ந்தது.

கூடவே வாசிப்பும் சேர்ந்துகொண்டது. பெரும்பாலான நேரத்தை நூலகத்தில் செலவிட்டிருக்கின்றேன். தேடித் தேடிக் கவிதைகள் வாசிப்பேன். கட்டுரைகள் வாசிப்பதிலும் எனக்கு ஆர்வம் உண்டு.

கல்லூரிப் படிப்பை முடித்தபின், தொடர்ந்து என்னால் எழுத முடியவில்லை. எழுத்திற்கும் எனக்கும் மிகப் பெரிய இடைவெளி வந்தது. வேலை, திருமணம் என்றானதில், எழுத நேரம் ஒதுக்க இயலவில்லை என்றாலும், அதன்பின்னுமே எழுத்தைப் பற்றி யோசிக்க முடியாதளவுதான் என் நாட்கள் நகர்ந்தன.

இடைவெளிக்கு ஒரு இடைவேளை தந்துவிட்டு, மீண்டும் 2019இல் எழுதுவதைத் தொடர ஆரம்பித்தேன். இம்முறை கவிதைகள் மட்டுமல்லாமல், புதினங்களும், சிறுகதைகளும் எழுதினேன். புத்தகமாக அவை வெளிவந்து, வாசகர்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றன.

இதில் குறிப்பிட்டு இரண்டு நூல்கள் பற்றிச் சொல்ல நினைக்கின்றேன். ஒன்று, என் முதல் நூலான, 'கற்புநிலை யாதெனில்' என்ற புதினம். இதன் தனித்துவம், இதில் எந்தவொரு கதாபாத்திரப் பெயரும் சொல்லப்பட்டிருக்காது. கதை மாந்தர்கள் பெயரே இல்லாமல் எழுதப்பட்ட புதினம்.



இரண்டாவது, 'ஜீவனின் துணையெழுத்து' என்ற புத்தகம். இதன் தனித்துவம், வாசகர்களையும் கதாபாத்திரங்களாக உலா வரும்படி, அவர்களுக்கும் வசனங்கள் இருக்கும்படி எழுதியிருப்பதுதான்.

புதினங்கள் எழுதுவதில் எனக்கென்று தனி பாணி உண்டென்று வாசகர்கள் சொல்வார்கள். ஒவ்வொரு புதினமும், வாசகர்களுக்கு ஒரு திரைப்படத்தைப் பார்த்த உணர்வைத் தரும்படியாக இருக்க வேண்டுமென்பது என் விருப்பம். அதனாலே ஒளி, ஒலி பற்றிய சிறு வர்ணனைகளுடன் காட்சியமைப்புகளை விவரித்து எழுதுவேன்.

பொதுவாகவே திகில் (thriller) பிரிவிலே என் புதினங்கள் அமைந்திருந்தாலும், எந்தவொரு சிறு வட்டத்திற்குள்ளும் மாட்டிக்கொள்ளக் கூடாது என்பதற்காக, எல்லா வகைப்பாடுகளிலும் எழுதுவேன். காதல், மாயாஜாலப் பிரிவுகளிலும் புதினங்கள் எழுதியிருக்கின்றேன்.

புதினங்கள் படைப்பதில் மும்முரமாக இருந்தாலும், கவிதைகள் எழுதுவதை விட்டுவிடாமல் தொடர்ந்தேன். அது உலகப் பெண்கவிஞர் பேரவையில் ஒரு அங்கமாகும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. அதில் உறுப்பினராகச் சேர்ந்து, சிலபல கவியரங்குகளில் பங்கேற்றுக் கவிதை வாசித்திருக்கிறேன்.

குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், 'எது கவிதை?' என்ற தலைப்பில் பிரித்தானிய இந்தியத் தமிழ் வானொலி, இலண்டன் ஏற்பாடு செய்திருந்த ஈரோடு தமிழன்பன் எழுதிய கவிதைகள் பற்றிய நிகழ்ச்சியில் பங்கேற்றுக் கவிதை வாசித்ததைச் சொல்லலாம்.

இதுதவிர பல கவிதைத் தொகுப்பு நூல்களில் நான் எழுதிய கவிதைகள் இடம்பெற்றிருக்கின்றன. இதில் குறிப்பாக 'ஐந்திணை ஐந்நூறு' என்ற தொகுப்பிற்காக, இலக்கணப் பயிற்சிகள் எடுத்துக்கொண்டு, முதன்முதலாக பா வகையில் நெய்தல் திணை பற்றி எழுதிய கவிதையைச் சொல்லலாம்.

இப்படி நகர்ந்த என் எழுத்துப் பயணத்தில், மொழிபெயர்ப்பு வாய்ப்பு வந்தது. இது நான் நினைத்துப் பார்க்காத ஒன்று. சுவீடன் நாட்டிற்கு இடம் பெயர்ந்த பின், அந்த நாட்டு மொழியை முறைப்படி கற்க ஆரம்பித்திருந்தேன். அதுதான் ஈரோடு தமிழன்பன் அவர்களின் 'இன்னும் சில வினாக்கள்' என்ற கவிதைத் தொகுப்பை சுவீடிஸில் மொழிபெயர்க்கும் வாய்ப்பைப் பெற்றுத் தந்தது.

இது எனக்கு ஒரு வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது. மேலும் இந்தத் தொகுப்பு புதுச்சேரி ஒருதுளிக் கவிதை பதிப்பகத்தின் மூலம் நூலாகவும் வெளிவந்திருக்கிறது.

சமீபத்தில் என் எழுத்திற்காக ஒரு வலைதளத்தை ஆரம்பித்திருக்கின்றேன். இதன் திட்ட அமைப்புகளை நானே செய்தேன்.

படைப்புக் குழுமத்துடனான எனது பயணம் 2023இல் தொடங்கியது. நான்

எழுதிய நிரல்மொழி கதையைப் புத்தமாக வெளியிட படைப்பிற்கு ஒரு விண்ணப்பம் அனுப்பியிருந்தேன். கிட்டத்தட்ட ஐந்து மாதங்கள் கழிந்தபின், அந்தக் கதை புத்தகமாக வெளியிட பரிசீலிக்கப்பட்டிருக்கிறது என்று படைப்புக் குழுமத்திடமிருந்து குறுஞ் செய்தி ஒன்று வந்தது. பின் மளமளவென ஏற்பாடுகள் நடக்க, செப்டம்பர் மாதம் முப்பதாம் தேதி நடைபெற்ற படைப்புச் சங்கமம் விழாவில் நிரல்மொழி என்ற கதை நூலாக வெளியிடப்பட்டது. அப்படியொரு பெரிய மேடையில் சிறப்பு விருந்தினர்கள் முன்னிலையில் என் புத்தகம் வெளியிடப்படுவது அதுதான் முதல்முறை. அந்த நாள் எனக்கு அத்தனை மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தது. கூடுதல் மகிழ்ச்சி அந்தப் புத்தகத்தை என் பெற்றோர் பெற்றுக்கொண்டது.

இந்தப் புத்தகம் இணையக் குற்றம் (cyber crime) பிரிவில் எழுதப்பட்ட ஒரு கதை. ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர் இல்லை என்ற கணினி தொழில்நுட்ப அறிவு கொண்ட இருவருக்கு இடையே நடக்கும் போட்டியில் யார் வென்றார், யார் தோற்றார், எப்படி என்பதைப் பற்றியே இந்தக் கதை!

தொழிற்சாலைகள், புகைவண்டி சமிக்ஞை, மால்வேர் அட்டாக், பிட்காயின், அதனோடு அரசாங்கத் திட்டம் ஒன்றைச் செயல்படுத்தும் வரைமுறை (tender) பற்றி விரிவாக இக்கதையில் சொல்லியிருக்கின்றேன். இதற்காகச் சிற்சில மெனக்கெடல் எடுத்து, விவரங்கள் சேகரித்து எழுதினேன்.

இந்தப் புதினத்துக்குச் சமூக வலைதளத்தில் நிறைய விமர்சனங்கள் வந்தன. அனைத்தும் ஒன்றை மட்டும் அடிக்கோடிட்டுக் காட்டின. அது, ஆங்கிலத்தில் இதுபோன்று எழுதுவது சுலபம், தமிழில் எழுதுவது கடினம். ஆனால் ஆசிரியர் அதைத் திறம்படச் செய்து, தெளிவாகப் புரியவைத்திருக்கிறார் என்பதுதான். மேலும், எந்தவொரு இடத்திலும் பிசிறு தட்டாமல், புரியும்படியும் கோர்வையாகவும் கதையின் போக்கு இருந்ததாகவும் கூறியிருந்தனர்.

இந்தக் கதைக்கு இன்னொரு சிறப்பு என்னவென்றால், இது தமிழக அரசின் சிறந்த வெளிநாட்டுப் படைப்பிலக்கியம் என்ற விருதைப் பெற்றிருக்கிறது.

அடுத்ததாக படைப்புக் குழுமம் மூலம், படைப்புச் சங்கமம் 2024இல் புத்தகமாக வெளிவந்த எனது படைப்பு, நீர் பருகும் தாகங்கள்.

பெண்கள் தினத்தன்று ஒரு வணிக வளாகம் மூன்று முகமூடி நபர்களால் கைப்பற்றப்படுகிறது. யாரிந்த முகமூடி நபர்கள், ஏன் இவர்கள் இப்படிச் செய்ய வேண்டும், உள்ளே மாட்டிக்கொண்டவர்கள் யார், அவர்களுக்கு என்னானது இதைச் சுற்றியே கதையின் நகர்வுகள் இருக்கும்.

வீட்டில், சமூகத்தில் சமகாலத்தில் வாழும் பெண்கள் தினமும் சந்திக்கும் பிரச்சனைகள், அதை அவர்கள் தைரியமாக எதிர்கொண்ட விதங்கள் பற்றிச் சொல்லும் கதை! கூடவே மனிதநேயம் பற்றியும் பேசும் கதை!!

இக்கதையைப் படித்தவர்கள் சொன்னது, மாறுபட்ட வாசிப்பு அனுபவத்தைத் தந்த கதை... வாசித்த பிறகு ஒரு நேர்மறை எண்ணத்தையும் தந்தது என்று. பெரும்பாலும் ஒரு கதை பெண்கள் பிரச்சனைகளைப் பற்றிப் பேசினால், அதில் ஆண்கள் மோசமானவர்களாகச் சித்தரிக்கப்பட்டிருப்பார்கள். ஆனால் இந்தக் கதையில் அப்படிக் கிடையாது என்றும் விமர்சனங்கள் வந்தன.

எழுதுதல் ஒரு பயணம். வாசகர்கள் தந்திட்ட உத்வேகத்தில் இன்று வரை என் பயணம் தொடர்ந்துவருகிறது. வரும்காலம் என்ன வைத்துக் காத்திருக்கிறது என்று கணிப்பது கடினம். ஆனாலும் அதற்காகச் சில கனவுகள் இருக்கின்றன. கனவுகள் நனவாகும் நாளை நோக்கி நகர்ந்துகொண்டிருக்கின்றேன்.




# நானும் என் எழுத்தும்..

**பிரவந்திகா**

மூன்றரை வயதிலேயே எனது கவிப் பயணம் தொடங்கிவிட்டது. ஆச்சி அன்புச்செல்வி சுப்புராஜூ அவர்களுடன் ஸ்ரீகாந்தின் கவிதைப்பட்டறை வாயிலாக நடந்த கவியரங்கிற்குச் சென்றிருந்தேன். அங்கு பெருங்கவிஞர்கள் கவிதை வாசிப்பதைக் கேட்டுக்கொண்டு இருந்தவள் நானும் கவிதை சொல்கிறேன் என்று ஒலிவாங்கியைக் கேட்டு வாங்கி உழவர்கள் குறித்து ஒரு கவிதை சொன்னதே, முதல் கவிதை. அங்கு வரகளகவி என்று பாராட்டும் கிடைக்கப்பெற்றது.

தமிழில் புதுக்கவிதைகளை எழுதிக் கவியரங்குகளில் வாசித்துவந்த எனக்குப் பல அமைப்புகள் பாராட்டும் ஊக்கமும் தந்தன. அவ்வகையில் "கவிமலர்கள் பைந்தமிழ்ச் சங்கம்" வழங்கிய "இளங்கவி"

விருதினைப் பாடலாசிரியர் நிகரன் கரங்களில் பெற்றேன். "கவிமலர்கள் 1130 கவிதைகளின் சங்கமம்" என்ற நூலிலும் எனது கவிதைகள் இடம்பெற்றுள்ளன. சிறுவர் கதைப் புத்தகங்களைத் தொடர்ந்து விமர்சனமும் செய்துவருகிறேன்.

சிறுவர்களுக்கான கதைகளும் எழுதத் துவங்கினேன். அந்தியில் மலரும் மொட்டுகள், சுக்கா...புக்கா...முக்கா..., குட்டி மேகங்கள் தூவிய தூறல்கள், வானவில் தீட்டிய வண்ணக் கோலங்கள் மற்றும் வாண்டுகள் சொன்ன கதைகள் புத்தகங்களில் நான் எழுதிய கதைகள் வெளிவந்துள்ளன.

தன்முனைக் கவிதை வகைமையில் பேரார்வம் கொண்ட நான் எனது ஏழு வயதிலிருந்து பல தன்முனைக் கவிதைகளையும் தொடர்ந்து எழுதிவருகிறேன். மிக இளம் வயதிலேயே தன்முனைக் கவிதைகள் எழுதியவர் என்ற சிறப்பினையும் பெற்றுள்ளேன்.

சிறகடிக்கும் பட்டாம்பூச்சி, சிறுகை முகிழ்த்த அரும்புகள், அம்மு சொன்ன கதைகள், லூபா யானை ஆகிய தனி நூல்கள் வெளிவந்துள்ளன.

பிரான்ஸ் நாட்டிலிருந்து மாதந்தோறும் வெளிவரும் தமிழ்நெஞ்சம், வெட்சி, கொலுசு இலக்கிய இதழ்களில் எனது படைப்புகள் இடம்பெற்றுள்ளன. தன்முனைக் கவிதைக் கவியரங்கம் ஒன்றிற்குத் தலைமை தாங்கி நடத்தியுள்ளேன். கவியரங்கம், கலையரங்கம் நிகழ்வுகளில் இணைத் தொகுப்பாளராகவும் பயணித்துவருகிறேன்.

உலகத்தமிழ் ஹைக்கூ கவிஞர்கள் மன்றம், தன்முனைக் கவிதைகள் குழுமம், கவியுலகப் பூஞ்சோலை குழுமம், சர்வதேசத் தமிழாழி தொலைக்காட்சி _ கனடா, தமிழ் அமெரிக்கப் பேரவை, தன்முனைக் கவிதைகள் படைப்பாளர்கள் பேரவை, புத்தக நண்பன், லாலிபாப் சிறுவர் உலகம், அன்பின் சங்கமம் சிறுவர் உலகம் உள்ளிட்ட உலகளவிலான பல அமைப்புகளின் வாயிலாகக் கதைகள் சொல்லிவருகிறேன்.

கனடா தமிழாழிப் பேரவை வழியாகப் பெற்ற ஆழிமணி, நிகழ் மீடியா அளித்த சிறந்த பெண்மணி விருது, தன்முனைக் கவிதை குழுமம் வழங்கிய தன்முனைச் சுடர் மற்றும் இளங்கவி விருது உள்ளிட்ட விருதுகள் பெற்றுள்ளேன்.

உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வாழ்த்துக்கள் வந்துகொண்டிருக்கின்றன. என்னுடைய லூபா யானை தொகுப்பில், “குழந்தை பருவத்துடனே தங்களுடைய கற்பனைத் திறனை இழந்துவிட்ட பெரியவர்களுக்கு எல்லாவற்றையும் கருத்தாகச் சொல்ல வேண்டும். இல்லை என்றால் அவர்களுக்குப் புரியாது. அதை வெற்றிகரமாகச் செய்திருக்கிறார் குழந்தை பிரவந்திகா. ஆச்சரியமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் 14 கதைகளைக் கொண்ட 'லூபா யானை' என்ற இந்தத் தொகுப்பில் மனிதர்களுக்குத் தேவையான மிக முக்கியமான குணாதிசயம் பற்றிப் பேசுகிறார். அதை அவர் கண்டு சொல்கிற விதம் தேர்ந்த கதையாசிரியராகக் காட்டுகிறது,” என்று எழுத்தாளர் உதயசங்கர் எழுதியுள்ளது பெருமைப்படத்தக்கதாக உள்ளது.

நான் பயிலும் வேலம்மாள் பள்ளி 'லூபா யானை' நூலினைப் பாராட்டி 'சிறந்த சிறார் எழுத்தாளர்' என்ற விருதினை வழங்கிச் சிறப்பித்தது. பிரான்ஸ் நாட்டிலிருந்து வெளிவரும் 'தமிழ் நெஞ்சம்' இதழ் இந்நூலின் மதிப்புரையை வெளியிட்டுச் சிறப்பு செய்தது. கனடா நாட்டின் 'தமிழாழிக் காட்சி' டோரோண்டோ நூல் அறிமுகம் நிகழ்வு நடத்திப் பாராட்டியது. இதனால் உலகளவில் பரவலாக தமிழில் புத்தகம் வாசிக்க விரும்பிய குழந்தைகளிடையே 'லூபா யானை' புத்தகம் சேர்ந்தது. இதுபோல் இன்னும் பல புத்தகங்கள் 'படைப்பின்' வழியாக வெளிவர வேண்டும் என்பதே எனது ஆவல்.

# நானும் என் எழுத்தும்..



## ஜபினத்

2014ஆம் ஆண்டு கட்டான் என்னும் கவிதை நூலோடு இலக்கிய உலகத்தின் ஆத்திசூடி அறியாமல் நுழைந்தவள் நான். எதிர்பட்ட முகங்கள் அனைத்துமே வந்தாரை வாழவைக்கும் ஆளுமைகள்தான் என்ற கட்டமைப்போடு நானும் எழுத்தாளினி ஆகிவிட்டேன் என்ற கர்வத்தில் இருந்தபோது இலக்கிய உலகத்தின் நிறம் கொஞ்சம் கொஞ்சமாக வெளுக்கத் துவங்கியது. இங்கு அத்தனை எளிதானது எதுவும் அல்ல என்ற உண்மை புரிய பன்னிரண்டு ஆண்டுகள் தேவைப்பட்டுள்ளன.

இந்தப் பன்னிரண்டு ஆண்டுகளில் ஒன்பது புத்தகங்கள் என்னால் எழுத முடிந்தது. இவ்வளவுதான் எழுத முடிந்தது என்பதுதான் வருத்தமான விசயம். பிரபஞ்சன் தனக்கான உணவு சரியாகக் கிடைத்திருந்தால் இன்னும் நிறைய எழுதி இருப்பேன் என்று சொன்ன அரங்கத்தில் அமர்ந்திருந்த எத்தனை இலக்கியவாதிகளுக்கு அவருடைய வலி புரிந்தது என்று தெரியவில்லை. எழுத்தாளன் என்பவன் எப்போதும் தன் சுயம் இறங்காமல் காளி தேவியிடம் அரிசிக்கும் பருப்புக்குமா நான் நிற்பது, இதெல்லாம் நீயே பார்த்து செய்யக் கூடாதா? அப்போதுதானே இன்னும் நல்ல நான்கு பாடல்களை எழுத முடியும் என்று சண்டையிட்ட பாரதியின் திமிருடனே இருக்கிறான். அதில் சற்றும் எனக்கும் குறைவில்லை என்பது கர்வம் என்றால் ஆமாம் நான் கர்வம் பிடித்தவள்தான்.

இங்கு மாமியார் மருமகள் பிரச்சனையை விட பெரிய பிரச்சனை உண்டென்றால் அது பதிப்பகத்தாருக்கும் எழுத்தாளருக்குமான பிரச்சனைதான். ஒரு புத்தகத்தை எழுதி வெளியிடுவதற்குள் எழுத்தாளன் முழி பிதுங்கிப் போராட வேண்டியுள்ளது. அதைவிடக் கொடுமை வருடாவருடம் நடக்கும் புத்தகத் திருவிழாவில் சிம் கார்ட் விற்பதைவிடக் கொடுமையாக மார்கெட்டிங் செய்து தன் படைப்பை விற்க அலைவது.

திறமை உள்ள புத்தகம் விற்கப்போகிறது என்ற நக்கல் காதுகளைத் தொடர்ந்துகொண்டே இருப்பது சாபம். எது திறமை? வருடம் முழுக்க வந்தேன் போனேன் என்பதை முக நூலில் பதிவு செய்து அதை வருடக் கடைசியில் காப்பி பேஸ்ட் செய்து தலையணை அளவில் புத்தகம் வெளியிட்டுவிட்டால் ஆகச்சிறந்த படைப்பாகிவிடுமா?

அப்படியானால் மூளையைக் கசக்கிக் கண் முன் நடந்த சம்பவங்களைக் கற்பனைச் சாயத்தில் முக்கி எடுத்து நாள்பட நாள்பட செதுக்கிச் செதுக்கி உண்மைக்குத் தூரமும் இல்லாமல் சான்றுகளையும், வட்டார மொழி வழக்குகளையும் சொற்களையும், கலைகளையும், மண்ணையும் மரபையும் தேடித் தேடிப் பதிவு செய்யும் எழுத்தாளர்கள் அருகிப்போகாமல் என்ன செய்வார்கள்?

குறைந்தபட்சம் நூலை வாசித்து விமர்சனம் செய்யக் கூட இங்கு இலக்கியவாதிகளுக்கு நேரமில்லாமல் போனது வேதனையின் உச்சம். கொண்டாடப்படுபவர்களே தொடர்ந்து கொண்டாடப்படுவதும் அதற்காகச் செய்யப்படும் லாபி வேலைகளும் இலக்கியத்தின் மீதான எரிச்சலைப் பதிவு செய்துகொண்டே இருக்கின்றன. இப்படியானவர்கள் வரும் சந்ததியினரின் மீது இதுதான் இலக்கியம் என்று ஒட்டி வைக்கப்போகும் லேபிள்கள் அச்சத்தை தருகின்றன.

ஒவ்வொரு நாவலையும் எழுதும்போது நான் எழுத்தாளராகவும் எழுதுகிறேன், வாசிப்பாளராகவும் மாறி என்னை நானே விமர்சித்துக்கொள்கின்றேன். சிறந்ததைக் கொடுக்க வேண்டும் என்ற கொள்கையில் அன்றிலிருந்து இன்று வரை எந்தச் சமாதானமும் செய்துகொள்ளாமல் பிடிவாதமாக எழுதுகின்றேன். நாவலை வாசிப்பவர்கள் சொல்வது எடுத்த வேகத்தில் முடித்த பின்தான் கீழே வைத்தேன் என்பது. எழுத்தின் ஓட்டம் அப்படித்தான் இருக்க வேண்டும். நான்காவது பக்கத்துக்குள் வரும்போதே வாசிப்பவரைக் கதைக்குள் இழுத்துப் போட்டுக் கட்டி இருக்க வேண்டும். அதன் பின் அவரும் கதை மாந்தர்களுடன் பயணித்தாக வேண்டும், என்ன இது ரப்பர் மாதிரி இழுக்கிறதே என்ற இழுவைகளை எழுதுவதை விட எழுதாமல் இருப்பது சாலச் சிறந்தது.

மயில் இறகு குட்டி போடுவதைப் போல் நமது புத்தகங்கள் குட்டி போடும் அதிசயமும் இலக்கிய உலகில் நடந்தேறும். சிரிப்பதற்காகச் சொல்லவில்லை, சொந்த அனுபவத்தில் சொல்கிறேன். எனது “ஒடலு” புத்தகம் வெளிவந்த பின் அதன் சாயலில் பல புத்தகங்கள் வெளிவந்துவிட்டன. பெண் வலி, இஸ்லாமியப் பெண்ணிய வலிகள் இஸ்லாமிய வட்டார மொழிகளில் எள்ளல் நடையுடன் சக்கை போடு போடுகின்றன. என்னளவில் அது ஒரு தொடக்கம் என்பது ஒடலுவின் மாபெரும் சாதனையாகக் கருதுகின்றேன். ஆனால் ஒடலு புத்தகத்தை வெளியிட்ட பதிப்பகம் இதுவரை எனக்கு ஒரு ரூபாய் கூடக் கொடுத்ததில்லை. இதைத்தான் எழுத்தாளர்களின் சாபம் என்கிறேன்.

யுக வேட்கை என்னும் நாவலைத் தூக்கம் இல்லாமல் ஆறு மாதம் கடினப்பட்டு எழுதி வெளியிட்டேன். குறைந்தபட்சம் பத்து இலக்கிய நண்பர்கள் கூட அதை வாசிக்கவில்லை. இங்கு நான் தேடுவது கழிவிரக்கம் அல்ல. இது அறச்சீற்றம். தயவுசெய்து வாசியுங்கள் என்றெல்லாம் கெஞ்சப் போவதில்லை. நீங்கள் வாசிக்காததால் என் எழுத்தின் கிரீடம் இறங்கிவிடவில்லை. மாறாக நீங்கள் வாசிக்க அந்த அருதப்பழைய காப்பி பேஸ்ட் முகநூல் கட்டுரைகள் நிறைந்த கட்டுக்கதைகளே போதுமானதாக இருக்கிறது. நீங்கள் எப்போதுதான் எழுத்தாளனுக்காகப் பேசாமல் எழுதாமல் எழுத்துக்காக எழுதப் போகிறீர்கள் என்று காத்திருப்பதும் சுகம்தான்.

காட்டான், சபராளி அய்யுபு, கட்டா, 45டிகிரி செல்சியஸ் பா, யுகவேட்கை, ஒடலு, தால்ச்சா, தற்போது படைப்பில் வெளியாகி இருக்கும் சீன் டபாக்கு டம் டம் மற்றும் ஹலிமா நாவல் என மொத்தம் ஒன்பது நூல்கள் எனது பன்னிரண்டு வருட உழைப்பு. அவை இன்று தனக்காக இடத்தை அடையாமல் இருக்கலாம், ஆனால் ஒருநாள் ஒவ்வொன்றும் பேசப்படும். அதற்காக முதலில் வாசிக்கப்பட வேண்டும். ■




# நானும் என் எழுத்தும்..

உமா

பள்ளிப்பருவத்திலேயே வாசிக்கும் ஆர்வம் இருந்தது. எனது தந்தை நல்ல புத்தகங்களை வாங்கித் தந்து வாசிக்கும் ஆர்வத்தை வளர்த்துக்கொள்ள உதவினார். கல்லூரியில் படிக்கும்போது கல்லூரியில் நடைபெறும் கவிதைப் போட்டியில் பெரும்பாலும் முதல் பரிசு கிடைத்தது. கட்டுரை, கதைகளில் பரிசு வாங்குதல், சமூக மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகள் ஆற்றுதல் என அந்தப் பருவம் சென்றது.

1993இல் திருமணமாகி, குடும்பம் என்று வந்தபோது ஒரு நீ...ண்...ட இடைவெளி. அப்பாவின் அன்புக் கட்டளையால் 2004இல் நாகர்கோவில் பாலமந்திர் காமராஜ் ட்ரஸ்ட் குழந்தைகள் காப்பகத்தில் உறுப்பினராக இணைந்தபிறகு வெளி உலகுடனான என் தொடர்பு உயிர் பெற ஆரம்பித்தது. தமிழ்க் குழவி ஐயாவின் குறளகம் எனும் இலக்கிய அமைப்பின் கூட்டங்களில் கலந்து பேசும் வாய்ப்பு கிடைத்த பிறகு இலக்கிய உலகில் என் தொடர்பு வளர்ந்தது.

2018இல் மிகுந்த தயக்கத்துடன் முதன்முதலாக "மொழி மறந்த மௌனங்கள்" எனும் கவிதை நூல் வெளியிடப்பட்டது. அது பலராலும் பாராட்டப்பட்டபோது நம்பிக்கை வந்தது.

தினமணி மகளிர் மணியின் 'பெண் சாதனையாளர்' விருது மற்றும் பல விருதுகள் ஊக்கம் தருவதாக அமைந்தன. அடுத்து வந்த கோவிட் தொற்றுக்காலம் மீண்டும் ஒரு இடைவெளி ஏற்படக் காரணம் ஆனது.

இடையிடையே வெவ்வேறு தளங்களில் வெளியான சிறுகதைகளுடன் மேலும் கதைகள் சேர்த்து இருபது சிறுகதைகள் அடங்கிய 'அறுவடை' எனும் சிறுகதைத் தொகுப்பு 2024 நவம்பரில் படைப்பு பதிப்பகம் மூலம் வெளியிடப்பட்டது. கதைகளை வாசித்த பலரும் தம் வாழ்வில் நடந்த சம்பவங்களை வாசிப்பது போல உள்ளது என்றும் சிறப்பாக உள்ளது என்றும் பாராட்டினார்கள். சில கதைகள் தமது குழந்தைப் பருவ வாழ்வை, கிராமிய வாழ்வை மீண்டும் அசைபோட வைத்தது என்று மகிழ்ந்து வாழ்த்தினர். இவை மிகுந்த உற்சாகம் தருவதாக இருந்தன.

அதே வேகத்துடன் டிசம்பர் மாதம் அதே படைப்பு பதிப்பகம் மூலம் "மனமெனும் மாயம்" எனும் கட்டுரை நூல் வெளியிடப்பட்டது. இதுவும் ஆன்மீகத் தளத்தில் ஈர்ப்பு உள்ளவர்களால் பாராட்டுக்கள் பெற்றது.

எழுதும் கனவுகள் இன்னும் வளர்ந்தது போன்ற உணர்வு. அதே சமயம் வாசிக்கும் ஆர்வம் குறைந்து வருவதையும் காணும்போது யாருக்காக எழுதுகிறோம் என்பது போன்ற சில கேள்விகள் மனதில் எழாமலும் இல்லை. நம் திருப்திக்காகவே எழுதுகிறோம் என்று நினைத்துக்கொள்கிறேன்!

வாழ்வில் ஊக்கம் தரும் நல்ல கருத்துக்களை எழுத வேண்டும் என்பது மட்டுமே மனதின் ஆசை.

கட்டுரை

முனைவர் நா.சுலோசனா



# கட்டில்: பரிணாமங்களும் பரிமாணங்களும்...

மானுட வாழ்க்கையில் முக்கிய அங்கம் வகிப்பது கட்டில். நம்முடைய களைப்பைப் போக்குவதற்கும் நல்ல உறக்கம் வருவதற்கும் நாம் தேடுவது கட்டில், கோரைப்பாய், தட்டாந்தரை.. எது நமக்கு வசதியோ அதற்குத் தகுந்தாற்போல் தேர்வு செய்கிறோம். அதிலும் கட்டில் என்றால் வயது முதிர்ந்தவர்களுக்குச் சுகமான ஒன்றாக இருக்கிறது. கட்டில் குறித்தும் இன்றைய பயன்பாடு குறித்தும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

## சொல்லும் பொருளும்:

கட்டிலுக்கு மஞ்சம், அரசுக்கட்டில், அரியணை, பாடை என்று வேறு பெயர்களை அகராதிகள் குறிப்பிடுகின்றன. மஞ்சம் என்பதற்குப் பிங்கல நிகண்டு கட்டில் என்று சுட்டுகிறது. தெலுங்கில் மச்சம் என்று வழங்கப்பெறுகிறது.

தமிழகத்தில் கயிற்றுக்கட்டில் என்று அறியப்படுவது தெற்காசியா முழுவதும் சார்பாய், சர்பயா, சார்பாய், காட், கட்லா, காத், காதியா அல்லது மஞ்சி என்றும் உருது மொழியில் கராஜா, சராய்கி என்றும் பஞ்சாபி மொழியில் மஞ்சா என்றும் அழைக்கப்படுகிறது. பஞ்சாபி மொழியில் சார் என்றால் 'நான்கு' என்று பொருள். பயா, பாய், பாயா என்றால் 'கால்' என்று பொருள். அதாவது நான்கு கால்களைக் கொண்ட கட்டில்கள், படுக்கைகள் வட இந்தியப் பகுதிகளில் 'சார்பாய்' என்று அழைக்கப்படுகின்றன. நான்கு கால்களும் நான்கு சட்டங்களும் இவ்வகைக் கட்டில்களுக்குப் போதுமானது.

இந்தியாவைச் சுற்றிலுமிருக்கும் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான், பர்மா போன்ற நாடுகளில் சார்பாய் புகழ்பெற்றதாக இருக்கிறது. இவ்விதக் கட்டில்கள் பருத்தி நூல் கயிறு, இயற்கை இழைகள் மற்றும் பேரீச்சை இலைகளைக் கொண்டு பின்னப்பட்டிருக்கின்றன என அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## இலக்கியங்களில்:

கட்டில் சங்க காலத்தில் 'பாண்டில்' என்று சொல்லப்படுகிறது. பாண்டில் என்றால் 'அரசுக் கட்டில்' என்று பொருள். அரச குலத்தில் பயன்படுத்துகிற கட்டிலுக்கு அரசக் கட்டில் என்று பெயர் வந்திருக்கலாம். கட்டில் என்ற சொல்லும் இருக்கின்றது. பாண்டிலுக்கும் கட்டிலுக்கும் பல பொருள் இருந்தாலும் பயன்பாட்டு அடிப்படையில் சூழல், இடத்திற்கேற்றாற்போல் பொருள் வேறுபடுகின்றன.

"கன்றுதன் பயமுலை மாந்த முன்றில்
தினைபிடி உண்ணும் பெருங்கல் நாட
கெட்டிடத் துவந்த உதவி கட்டில்
வீறுபெற்று மறந்த மன்னன் போல"

(குறுந்.225:14)

"நல்லகில்விம்முகட்டிற்றவிசொடு நிலைக்கண்ணாடி" (சீவக. 558)

போர்க்களத்தில் சோழன் போர்வைக்கோப் பெருநற்கிள்ளி விரைவாக வாளைச் சுழற்றிப் போரிடும் ஆற்றல் பெற்றவன். அவன் போர்க்களத்தில் வாளைச் சுழற்றும் திறத்தைச் சாத்தந்தையார் என்ற புலவர் பின்வருமாறு கூறுகிறார்.

"சாறுதலைக் கொண்டெனப் பெண்ணீற்று
உற்றெனப்
பட்ட மாரி ஞான்ற ஞாயிற்றுக்
கட்டில் நிணக்கும் இழிசினன் கையது
போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று
மாதோ"

(புறம்.82)

அதாவது ஊரிலே விழா நடைபெற இருக்கிறது. அவ்விழாவிற்குப் போக வேண்டும்; மனைவிக்குப் பிள்ளைப்பேறு. மழை பெய்துகொண்டிருக்கிறது. பிறக்கும் குழந்தையைத் தரையில் போடமுடியாது. அதற்காகக் கட்டில் பின்னுகின்றான் ஓர் தொழிலாளி. இவ்வளவு செயல்களையும் ஒருசேரச் செய்ய மனம் விழையும் நேரத்தில் கை எவ்வளவு வேகமாகக் கட்டில் பிணிக்குமோ அதே வேகத்தில் சோழன் கிள்ளி வாள் சுழற்றுகின்றான் என்கிறார் புலவர். இப்பாடலடிகள் செயலுக்கு ஒப்புமை சொல்லப்பட்டிருக்கின்றன.

தந்தக் கட்டிலில் படுத்துத் துயில் கொள்ளாது, மன்னனைப் பிரிந்த அரசியின் துயர நிலையை நெடுநல்வாடை,

"புடைதிரண்டு இருந்த குடத்த,
இடைதிரண்டு
உள்ளி நோன் முதல் பொருத்திஅடி
அமைத்துப்
பேரளவு எய்திய பெரும்பெயர்ப் பாண்டில்"

(121–123)

என்று படம்பிடித்துக் காட்டுகிறது. அது வட்டமான தந்தக் கட்டில். முதிர்ந்த யானையின் தந்தத்தைச் செதுக்கி நுட்பமான பூ வேலைப்பாட்டுடன் அமைத்தது. நன்றாகக் கடைந்து அமைத்த திரண்ட குடங்களையும், உள்ளிப் பூண்டுபோல விட்டு விட்டுப் புடைத்த கால்களையும் உடையது. சுற்றிலும் முத்து மாலைகளைத் தொங்க விட்டுத் திரை கட்டி நடுநடுவே சாளரம் விட்டிருக்கிறார்கள். கட்டிலின்மேல் மெல்லிய மயிர்களுக்கு நிறமூட்டிப் பரப்பி, சிங்கம் வேட்டையாடுவது போன்ற சித்திரத்தை நடுவிலே அமைத்து, சுற்றிலும் முல்லை முதலிய பல நிறமுள்ள பூக்களை வரிசையாக இட்டிருக்கிறார்கள். இதற்கு மேலே மெல்லிய படுக்கையை விரித்து அன்னத்தின் அடிவயிற்றுத் தூவிகளால் செய்த அணைகளை வைத்திருக்கிறார்கள். அதற்குமேல் கஞ்சியிட்டு நன்றாக வெளுத்த மடியை விரித்திருக்கிறார்கள். அதன்மேல் பாண்டிமா தேவி படுத்திருக்கிறாள். இக்காட்சி கட்டிலின் வேலைப்பாட்டை விவரிக்கிறது.

"இடிக்குரல் முரசம், இழுமென் பாண்டில்,
உயிர்ப்பலி உண்ணும் உருமுக்குரல்
முழக்கத்து
மயிர்க்கண் முரசமொடு, மாதிரம் அதிர"

(சிலப்பதிகாரம், 26:194-196).

சிலப்பதிகாரத்திலும் பாண்டில் என்ற சொல்லை அறியமுடிகிறது. 'பாண்டில்' என்ற சொல் வெண்மை நிறம், வட்டம், இடுப்பில் அணியும் அணிகலன் எனப் பல பொருள்களைக் குறித்தாலும் இப்பாடலடியிலுள்ள பாண்டில் அரச கட்டிலைக் குறிக்கிறது.

"நிலை எழு பாடை கூட்டி விரைய

மயானம் ஏற்றி" (1215:2)

என்று திருப்புகழ் சுட்டுகிறது.

"உன்னைப் பாடையிலே தூக்கிட்டுப் போக" என்று ஏசலின்பொழுது சொல்லுவார்கள். பாடை என்பது பிணக்கட்டில் என்று சொல்லப்படுகிறது. இலக்கியங்களில் பாண்டில், கட்டில் என்ற இரண்டு சொற்கள் இருக்கின்றன.

**பயன்பாட்டில் கட்டில்:**

நார்க்கட்டில், கயிற்றுக்கட்டில், நாடாக்கட்டில், மடக்குக் கட்டில், இரும்புக்கட்டில், மரப்பலகை போட்ட கட்டில் என்று பல வகைகளில் கட்டில்கள் இன்றைய பயன்பாட்டில் இருக்கின்றன.

**நார்க்கட்டில்:**

முன்பெல்லாம் பெரும்பாலான வீடுகளில் நார்க்கட்டில்கள் இருக்கும். இந்த நார்க்கட்டில்கள் பனை நாரினால் பின்னப்பட்டிருக்கும். அது உடலுக்குச் சுகத்தையும் குளிர்ச்சியையும் நல்ல உறக்கத்தையும் கொடுக்கக் கூடியது. காற்று வருகிற இடத்திற்கு எளிதாகத் தூக்கிக்கொண்டு போய்ப் போட்டுப் படுக்கக்கூடிய வகையில் பயன்படுத்தலாம். பெரும்பாலும் வயதானவர்கள் பனைநார் கட்டில்தான் விரும்புவார்கள். மற்ற கட்டில்களை விடவும் பனைநார் கட்டில் உடலுக்குக் குளிர்ச்சியைத் தரக்கூடியது. நோய்நொடியால் படுத்த படுக்கையாக இருப்பவர்களுக்குப் படுக்கைப்புண் வராமல் இருக்க பனைநார் கட்டிலைத்தான் தெரிவு செய்வார்கள்.

பெண்பிள்ளை இருக்கிற வீட்டில் கண்டிப்பாக நார்க்கட்டில் இருக்கும். திருமணம் செய்து கொடுத்த பெண்பிள்ளை கருவுற்றிருந்தால் அடுத்து மகப்பேற்றுக்காக அம்மா வீட்டுக்கு வரும்பொழுது நார்க்கட்டில் இல்லையென்றால் அதற்காகவே நார்க்கட்டில் செய்வார்கள். படுத்து எழுந்தால் தாய்க்கும் சேய்க்கும் சுகமாக இருக்குமென்று சொல்லி ஒவ்வொரு வீட்டிலேயும் அந்த மகப்பேற்றுக்கு முன்பே நார்க்கட்டில் கட்டுவார்கள். குழந்தைக்கும் சிறிய கட்டில் இருக்கும்.

முன்பெல்லாம் தெருக்களில் கட்டில் பின்னலையோ என்று கூவிக்கொண்டே போவார்கள். கட்டிலில் நார் அறுந்து போயிருந்தால் அல்லது படுக்க வசதி, தோது இல்லாமல் குழி விழுந்திருந்தால் புதியதாக நார் கட்டுவதற்குக் கொடுப்பார்கள். பின்னுவது மட்டுமல்லாமல் இன்னும் அந்தக் கட்டில் நன்றாக உழைக்க வேண்டும் ரொம்ப வலுவாக இருக்க வேண்டும் என்பதற்காக நூல் கயிறு வாங்கி அந்தக் கயிற்றைக் கட்டிலுக்கடியில் இறுக்கமாகக் குறுக்கும் நெடுக்குமாகப் பின்னிக் கட்டுவார்கள்.

**கட்டிலின் நன்மை:**

கட்டிலின் பின்னலமைப்பு நாம் படுக்கும்பொழுதும் புரண்டு படுக்கும்பொழுதும் உடலுக்கு ஒருவிதத் தொடு சிகிச்சையை அளிப்பதாகச் சொல்லப்படுகிறது. குருதி ஓட்டத்தைச் சீர் செய்கின்றது. அதனால்தான் நம் முன்னோர்கள் வழிவழியாகப் பனைநார் கட்டில்களை விரும்பியிருக்கின்றனர் என்பதை அறியமுடிகிறது.

**நார்ப் பின்னலில் புதுமை:**

பச்சை பனை ஓலையை வெட்டி, அதன் மட்டையிலிருந்து உரித்தெடுக்கப்பட்ட நாரை நீரில் ஊற வைத்துப் பின்னப்பட்ட கட்டில் முன்பெல்லாம் பல வீடுகளில் காண முடிந்தது. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை புது நார் பின்ன வேண்டும். பல்வேறு கண்ணிகள் கொண்ட கட்டில்கள் இருந்தாலும், தென் தமிழகப் பனைநார் கட்டில்களின் வடிவம் பிற வடிவங்களை விடவும் வேறுபட்டது. இங்கு தலைமுதல் கால்வரை ஒரே பின்னல் ஊடுபாவாகப் பின்னப்பட்டிருக்கும். ஆனால், வட இந்தியப் பகுதிகளிலும், சில வட தமிழகப் பகுதிகளிலும் கயிற்றுக்கட்டில்கள், முக்கால் பங்கு சீரான பின்னல்கள் கொண்டதும் கால் பகுதி மட்டும்

இழுத்துக் கட்டுகின்ற நேர் இழுப்புத் தன்மை கொண்டதுமாக அமைந்திருக்கும். நேர் இழுப்புகள் பின்னல்கள் தொய்யும்பொழுது இழுத்துக் கட்டிச் சீர் செய்யும் வகையில் அமைக்கப்படுகின்றன.

**நார்க்கட்டிலின் முக்கிய விளைவு:**

நார்க்கட்டில் ஒரு பக்கம் சுகம் என்றாலும் அதில் மூட்டைப்பூச்சி தொல்லையும் அதிகமாக இருக்கும். ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் பனைநார் கட்டில்களில் முக்கியப் பிரச்சனையாக மூட்டைப்பூச்சிகள் இருந்தன. கட்டிலில் வந்து சேர்ந்து கொள்ளும். பனைநார்கள் குவிந்திருக்கும் இடுக்குகளுக்குள் மூட்டைப்பூச்சிகள் சென்று ஒளிந்துகொள்ளும். அதிலிருந்து மூட்டைப் பூச்சிகளை நீக்குவது என்பது ஒரு இயலாத செயலாகப் பார்க்கப்பட்டது. ஒவ்வொரு வாரமும் வீடுகளில் ஞாயிற்றுக்கிழமை வந்துவிட்டாலே பெரிய வேலையாக இந்த மூட்டைப்பூச்சியை ஒழிக்கும் வேலை நடக்கும். பெரும்பாலும் மூட்டைப்பூச்சிகளைக் கொல்லுவதற்கென மருந்துகள் அடிக்கப்பட்டன.

பனைநார் கட்டில்களைச் சரித்து வைத்துவிட்டுக் கொதிக்கிற வெந்நீரைக் கட்டிலில் ஊற்றுவார்கள். ஆனாலும், மூட்டைப்பூச்சிகளைக் கொல்லுவது அவ்வளவு எளிதானதல்ல. பனைநார்கள் பெருமளவில் சூடுகடத்தாதவை. ஆதலால், கண்டிப்பாகத் தப்பித்துக்கொள்ளும். ஓரிரு நாட்களிலேயே பெருகி மீண்டும் தொந்தரவு கொடுக்க ஆரம்பிக்கும். இன்றைய காலத்தில் மூட்டைப்பூச்சி என்ற இனமே இல்லை என்றே சொல்லலாம். நார்க்கட்டிலின் பயன்பாடும் குறைந்துவிட்டது. நாகரிகமும் பெருகிவிட்டது.

இப்படிப்பட்ட நார்க்கட்டில் ஒவ்வொரு வீட்டிலேயும் ஒன்று இரண்டு இருக்கும். அதுவும் கோடைக் காலங்களில் அதாவது பங்குனி சித்திரை காலங்களிலெல்லாம் கிராமப்புறங்களில் ஒவ்வொரு வீட்டிலேயும் வெளியில் தாழ்வாரத்திலேயோ இல்லை வாசலிலேயோ வீட்டுக்கு இரண்டு கட்டில் போட்டுப் பெரியவர்கள் அதில் காத்தாடப் படுப்பார்கள். இன்றைக்கெல்லாம் வெளியே படுப்பதே கிடையாது. எப்பொழுதும் கதவை அடைத்து வீட்டுக்குள் இருக்கும் காலமாக மாறிவிட்டது. அதனால்தான் கட்டிலினுடைய பயன்பாடும் குறைந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். நாகரிகம் கருதி நார்க்கட்டில் பயன்படுத்துவோர் இன்றைக்குக் குறைவுதான். இரும்புக் கட்டில் மாறி இப்பொழுதெல்லாம் மரப்பலகை போட்ட விதவிதமான வேலைப்பாடுகளுடன் கூடிய கட்டில்கள்தான் பயன்படுத்துகிறோம். அந்தக் காலத்தில் நார்க்கட்டிலுக்கென்று பெரிய வரவேற்பு இருந்தது. இன்றைக்கு அது காட்சிப் பொருளாகிவிட்ட நிலைதான்.

**வயதானவர்களின் பெரு விருப்பம்:**

அதைப்போல வயதானவர்கள், கட்டிக்கொடுத்த மகள் வீட்டில் இருந்தார்கள் என்றால் அவர்களுடைய இறுதிக் காலம் பையன் வீட்டில்தான் இருக்கவேண்டும் என்று நினைப்பார்கள். அதுவே அவர்களின் இறுதி விருப்பமாகவும் இருக்கும். போக்குவரத்து வசதிகள் இல்லாத காலகட்டங்களில் அதிக வயதானவர்களை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குக் கொண்டு போக வேண்டுமென்றால் கட்டிலில் தூக்கிச் சுமந்து கொண்டுபோய் அடுத்த ஊரிலிருக்கும் பையன் வீட்டில் போய் விட்ட காலங்களெல்லாம் உண்டு. அதைப்போல் அதிக வயதானவர்கள் விரும்புவதும் நார்க்கட்டிலைத்தான். மரணத் தருவாயில் இருக்கிறவர்களைக் கட்டிலிலிருந்து இறக்கிப் போடுறது என்று சொல்வார்கள். கட்டிலிலிருந்து இறக்கிவிடும் வரைக்கும் கட்டிலில் படுத்திருப்பார்கள். உயிர் போகிற நேரத்தில் கீழே இறக்கிப்போடுவார்கள். அந்தக் கட்டில் நார்க்கட்டிலாகத்தான் இருக்கும்.

அதைப்போல இறப்பு வீட்டிலேயும் உயிரிழந்தவர்களை நார்க்கட்டிலில் உட்கார வைத்துக் குளிப்பாட்டி இறப்புச் சடங்குகளைச் செய்வார்கள். அதன் பிறகு அந்தக் கட்டிலை ஒரு ஓரத்தில் வைத்துவிட்டுப் பிறகு

புதியதாக நார் பின்னி அந்தக் கட்டிலுக்கு வண்ணம் பூசி அதற்குப் பிறகு வீட்டிற்குள் கொண்டுபோய் வைப்பார்கள்.

நிறைய வீடுகளில் கட்டிலுக்குச் சண்டை வரும். நான் படுப்பேன் நீ படுப்பேன் என்று ஒரு கட்டிலுக்கு இரண்டு பிள்ளைகள் சண்டை போடுவார்கள். வயதானவர்கள் வீட்டிலிருந்தால் அவர்களுக்குத்தான் முன்னுரிமை கொடுக்கப்படும். வாழ்வாதாரமாக நார்க்கட்டில் பின்னுகிற தொழிலாளர்கள் இருந்தாலும்கூட அதனுடைய பயன்பாடு என்பது மிகக் குறைச்சலாகவே இருக்கிறதைப் பார்க்கிறோம்.

**கல்யாணக் கட்டில்:**

திருமணத்திற்காகச் செய்யும் கட்டில் கல்யாணக் கட்டில் என்று சொல்லப்படுகிறது. கல்யாணக் கட்டில்களின் கால்கள், சட்டங்களைச் செய்ய தேக்கு போன்ற உறுதியான மரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், மேல் பலகைக்குப் பலா மரத்தை மட்டும் பயன்படுத்துகிறார்கள். பனை, வேம்பு, தேக்கு போன்ற மரங்களை வைத்துக் கட்டப்பட்ட படுக்கைகளும் இருக்கின்றன. கட்டிலின் சமதளமான பகுதியானது கயிற்றினாலோ, மரத்தினாலோ அல்லது இரும்பினாலோ செய்யப்பட்டிருக்கலாம்.

**மடக்குக் கட்டில்:**

மடக்குக் கட்டில் என்பது மடித்து வைக்கக்கூடிய கட்டில் ஆகும். இது இடவசதி இல்லாத இடங்களில் பயன்படுத்த வசதியாக இருக்கும். அவை உலோகத்தால் செய்யப்பட்டவை, மரத்தால் செய்யப்பட்டவை அல்லது இரண்டும் கலந்தவையாகக்கூடக் கிடைக்கின்றன. இரும்புக் குழாய்களில் நைலான் பட்டை அல்லது துணிப்பட்டையைக் கொண்டு கோர்த்துப் பின்னப்படும் இக்கட்டில்கள் இடத்தை அடைக்காது. மடக்கி ஒரு ஓரமாக வைத்துவிடலாம்.

**கழுதைக்கால் கட்டில்:**

மடக்குக் கட்டிலின் கால் வளைந்து, ஒன்றோடு ஒன்று பின்னி இருப்பதால் ஒப்புவகைக் கண்டு அதனைக் ‘கழுதைக்கால் கட்டில்’ என்று சொல்லப்படுகிறது. இச்சொல் விருதுநகர் வட்டார வழக்கிலுள்ளது. கோடைக் காலங்களில் கட்டில்களின் தேவைகள் அதிகரிக்கிறதைக் காணமுடிகிறது.

மடக்குக் கட்டிலை மடாக்கட்டில் என்றும் சொல்லுவார்கள். மடக்குக் கட்டிலுக்கு அதிக வலுவான துணியைத் தைத்துக் கொடுப்பார்கள். அந்தத் துணி பருத்தித் துணியாக இருக்கும். ரொம்ப முரடாகவும் இருக்கும். அப்படி இருந்தால்தான் படுத்தால் கிழியாமல் இருக்கும். கட்டிலில் படுப்பவரைத் தாங்கும் அளவு அந்தத் துணி இருக்க வேண்டும். அதனால் அதற்குத் தெலுங்கில் ரெட்டு என்று சொல்லுவார்கள். தொட்டிலில் படுத்த சுகத்தைத் தரும். இரண்டு பக்கம் கட்டை இருக்கும். முரட்டுத் துணியை நல்ல இறுக்கமாகத் தைத்திருப்பார்கள். குழந்தையைப் படுக்க வைத்தால் கீழே விழுந்துவிடுமோ என்ற அச்சம் இருக்கும். அதுவே கொஞ்சம் தொய்வாக இருந்தால் தொட்டில் மாதிரியே இருக்கும். அதைப் படுக்கிற நேரம் பயன்படுத்திவிட்டு மற்ற நேரங்களில் மடக்கி வைத்துவிடலாம். இதை மடக்குக் கட்டில் என்றுதான் சொல்லுவார்கள். அதனால்தான் இன்றைக்கும் துணி மிருதுவாக இல்லாமல் ரொம்ப முரடாக இருந்தால் ரெட்டு போல இருக்கு, சாக்கு போல இருக்கு என்று சொல்லுவது வழக்கு.

**கயிற்றுக்கட்டில்:**

நார்க்கட்டில், மடக்குக் கட்டில் அடுத்ததாக கயிறு, ஞெகிழி வயர் போட்டு பின்னுகிற கட்டில் இன்றைக்கு நிறைய பயன்பாட்டில் இருக்கிறது. எங்க வேண்டுமானாலும் எளிதாகத் தூக்கிக் கொண்டுபோய்ப் பயன்படுத்துமளவு நார்க் கட்டில், மடக்குக்கட்டிலை விட இன்னும் எளிதாக இருக்கும். கயிற்றுக்கட்டில் மரக்கட்டையில்தான் இருக்கும். இரும்புக்குழாயும் பயன்படுத்தப்படுகிறது.

கயிற்றால் பின்னப்பட்டிருக்கும். நூல் கயிறு பட்டையாகவும் இறுக்கமாகவும் கட்டப்பட்டிருக்கும். இப்படியான கட்டில் கயிற்றுக்கட்டில் என்று சொல்லப்படும்.

### இரும்புக்கட்டில்:

அதற்குப் பிறகான காலங்களில் இரும்புக்கட்டிலின் பயன்பாடு வந்தது. இரும்புக்கட்டில் சந்தைக்கு வந்தபிறகு நார்க்கட்டில், மடக்குக் கட்டில் இவையெல்லாம் ஓரங்கட்டப்பட்டன. இவை இன்னும் ஒருசில வீடுகளில் புழக்கத்தில் இருக்கின்றன. மருத்துவமனைகளில் அதிகமாகப் பயன்பாட்டிலுள்ளன. நோய்வாய்ப்பட்டவர்களின் உடல்நலம் பேணுவதற்காக வீடுகளில் நார்க்கட்டிலும் சாதாரண மரக்கட்டிலும் பயன்படுத்தப்படுகின்றன.

### மரக்கட்டில்:

சமீப காலமாக மரப்பலகையில் வேலைப்பாட்டுடன் கூடிய அவரவர் பொருளாதாரத் தேவைக்குத் தகுந்தாற்போல் கட்டில்களை வடிவமைக்கிறதெல்லாம் நிறைய வந்துவிட்டது. அதனாலே எல்லோர் வீட்டிலேயும் நாகரீகம் கருதி அவர்களுடைய பொருளாதார வசதியைக் காட்டுவதற்கு மரப்பலகை போட்ட கட்டில் பல்வேறு வடிவமைப்புடனும் அழகுணர்ச்சியுடனும் இன்றைய பயன்பாட்டில் நிறைய இருக்கின்றன. சங்க காலத்தில் இருந்த கட்டில் வேலைப்பாட்டின் நீட்சியாக இதைப் பார்க்கமுடிகிறது. பெண்ணின் திருமணத்தின்பொழுது சீர் கொடுக்கும் கட்டில் மரக்கட்டில் என்பது வழக்கமாகிவிட்டது. அதுபோல இந்த மரப்பலகை வேலைப்பாட்டுடன் கூடிய கட்டில் வந்த பிறகு இரும்புக் கட்டில் மற்றும் மற்ற கட்டில்களினுடைய பயன்பாடும் அறவே குறைந்துவிட்டது என்றுதான் சொல்லவேண்டும். ஆனாலும் மரப்பலகைக் கட்டில் வாங்க முடியாத வீடுகளில் இரும்புக் கட்டில் இருக்கிறதைக் காணமுடிகிறது. கிராமங்களில் நார்க்கட்டில், கயிற்றுக்கட்டில், ஞெகிழிக் கட்டில், மடக்குக் கட்டில் இவையெலாம் இன்னும் கொஞ்சம் உயிர்ப்புடன் இருக்கின்றன என்றுதான் சொல்ல முடியும்.

### கட்டிலின் நீட்சி:

பெஞ்சுகள் இல்லாத காலத்தில் இறந்தவர்களை நார்க்கட்டிலில் போட்டு அழுவார்கள். பெஞ்சு வந்த பிறகு அதில் கிடத்தினார்கள். பெரும்பாலான வீடுகளில் நார்க்கட்டில் கிடக்கும். தெருவுக்கு ஒன்று இரண்டு வீடுகளில்தான் விசிப்பலகை எனப்படும் பெஞ்சு இருக்கும். ஓதியம் பலகையால் செய்ததில் படுத்தால் குளிர்ச்சியாக இருக்கும் என்று செய்து வைத்திருப்பார்கள். அதைப் போய்த் தூக்கி வருவார்கள் (ஓதிய மரம் என்பது இந்திய சாம்பல் மரம் என்று அழைக்கப்படும் ஒரு வகை மரமாகும். ஓதியான், ஒடியர், உதி, ஒடை, உலவை இவை ஓதிய மரத்தின் பிற பெயர்கள் ஆகும். இதைக் கிராமங்களில் ஒடை மரம், ஒட மரம் என்று சொல்வார்கள்).

காரியம் முடிந்ததும் இனி இறப்பு நேரக்கூடாது என்பதற்குக் குறியீடாக அந்தப் பெஞ்சை உதைத்துச் சாய்த்து விடுவார்கள். ஈரம்பட்ட அது ஒன்று இரண்டு ஆண்டுகளிலேயே சட்டம், கால் கழன்றுவிடும். மனித வாழ்க்கையில் கட்டில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்பட்டது என்பதற்கு இவை சான்றுகளாகும்.

### முடிவாக:

கட்டில் என்பது படுக்கை மட்டுமல்ல; மனித வாழ்வின் ஓர் அங்கமாகத் திகழ்வது. படுத்து உறங்கும் கட்டில் என்பதைத் தாண்டி, வீட்டின் முற்றத்தில் வற்றல், வடகம் போன்றவற்றைக் காய வைக்கக் கட்டில்களை இன்றைக்கும் பயன்படுத்தி வருகின்றனர். கட்டில் எத்தனையோ பரிமாணங்களை அடைந்திருந்தாலும் அதன் பயன்பாடு என்பது பிறப்பு முதல் வாழ்நாள் முழுமையும் மானுட வாழ்வில் மிக முக்கியமானதாகும் என்பதை விளங்கிக்கொள்ள முடிகிறது. ■

குடந்தை அனிதா



# பண்ணை வீட்டு மனோரா

நவம்பர் 2 'கல்லறைத் திருநாள்'.. நாட்காட்டியில் நேற்றைய தேதி கிழித்ததும் இரண்டாம் தேதி பிறந்தது துயரத்துடன். கையிலிருக்கும் கைபேசியைப் பார்த்துப் பெருமூச்சு விட்டாள் ஸ்டெல்லா. தொடுதிரையில் தன் அருகில் இருக்கும் கணவன் அன்புச்செல்வன் கல்லறைக்குச் செல்ல வேண்டும் என்று நினைக்கும்போதே 'தறிகெட்டு ஓடும் எண்ணங்களை ஒரு கட்டுக்குள் நிலைநிறுத்தித் தேவையற்ற ஆசைகளுக்கு ஒரு கடிவாளம் இட்டு இதோ உன் கணவன் இங்குதான் இருக்கிறான் என்று நினைவுபடுத்தும் இந்த நாள்' ஏன் வருகிறது என்று மனம் வெறுத்தது. சற்று முன் மலர்ந்த சந்தன முல்லை போல மணக்க மணக்க அமைதியாகக் கைபேசி கேலரியில் போட்டோ ஒவ்வொன்றாகப் பார்த்து நினைவுகளுக்கு உயிரூட்ட, இன்று வரை தன்னுடனே நினைவில் இருப்பவர், இல்லை என்று சொல்ல வானில் நிலா இல்லாத நாள் அமாவாசை என்று சொல்வது போலத்தான் இந்தக் கல்லறைத் திருநாள்.

சர்ச்சில் மோதிரம் மாற்றி மணமான அன்றே அன்புச்செல்வன் தங்கை இருவரும் ஸ்டெல்லாவின் கைபிடித்து தலைவருடி 'பொட்டு வச்சிக்கிறது எங்க வழக்கமில்லை', 'இனிமேல பொட்டு வைக்காத' என்று சொன்னதும் ஸ்டெல்லாவுக்குக் கடல் நீர் வற்றிப்போன அளவுக்குத் துக்கம் தொண்டையை அடைத்தது. தன் ஆசாபாசங்களைக் கட்டுப்படுத்துவது ஸ்டெல்லாவுக்குப் பிடிக்காத ஒன்று.

ஸ்டெல்லாவின் அம்மா கிறிஸ்தவர், அப்பா இந்து, இருவரும் சர்ச்சுக்கும் கோவிலுக்கும் போவதுண்டு. விவரம் தெரிந்த நாளிலிருந்து இரண்டு புருவங்களுக்கு நடுவில் கேக் மத்தியில் வைக்கும் சிறிய செர்ரி பழம் போலத் தன் பரந்த நெற்றியில் துளியூண்டு ஸ்டிக்கர் பொட்டு எடுத்து நெற்றி வகிடிற்கும் மூக்கிற்கும் சற்று இடைஞ்சலாக (ஆம் அது மற்றவர்களுக்கு இடைஞ்சல்தான்) நெற்றியில் ஒற்றைப் புள்ளி வைத்துக்கொள்வாள். கண்ணாடியில் முகம் பார்க்கையில் தன் கருத்த முகத்தில் சிவந்த பொட்டைத்தான்

பார்ப்பாள். ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த கவிதை வரி ஒன்று அவளுக்கு நினைவில் வந்தது. “இரு புருவங்களுக்கு இடையில் ஒரு புள்ளி கோலம் அது.”

அன்று அப்பாவிடம், ‘இனிமேல் எனக்குப் பிடிச்சது எதுவும் நான் செய்யக்கூடாதா?’ என்று கேட்ட ஸ்டெல்லாவைப் பார்த்து ‘இதுக்கா டா உன்னைப் படிக்க வச்சேன், யார் என்ன சொன்னாலும் உனக்கு சரின்னு தோணுச்சுன்னா அது போல இருடா’ என்று அப்பா கொடுத்த தைரியந்தான் அன்புச்செல்வனுடன் ஸ்டெல்லா வாழ்ந்த வாழ்க்கைக்கு அஸ்திவாரம்.

பொதுவே மதம் மாறியவர்கள் ஏதோ ஜெருசலத்தில் பிறந்த இயேசுவின் பக்கத்து வீடு மாதிரி பேசுவது ஒன்றும் புதிது இல்லை. இதில் படித்தவர்கள் படிக்காதவர்கள் என்ற பேதமெல்லாம் கூட ஒன்றுமில்லை. இருக்கும் இடத்தைத் தக்க வைத்துக்கொள்ள, ஒரு பெயர், பட்டம் தேவைப்படுவதால் ஊர்க் கட்டுப்பாட்டுக்கு, அவர்கள் சார்ந்திருக்கும் சாதி சனத்துக்கு நயந்துபோகிறார்கள். கல்யாணம் என்று வரும்போது மட்டும் அங்காளி பங்காளி ஒண்ணுக்குள்ள ஒண்ணு என்று, இந்து கிறிஸ்டியன் என்று மதம் பார்க்காமல் இங்கிருந்து அங்கு மாறியவர்கள் கலவையாக மணந்துகொண்டு ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாறிவிடுகிறார்கள். இதுவே நதி போல ஓடிக்கொண்டு இருப்பவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொள்ள விரும்புவதில்லை. இப்போது எதில் இருக்கிறோம் என்று அவர்கள் எண்ணுவதில்லை

ஸ்டெல்லா தன் கைபேசியில் அன்புச்செல்வனுடன் தான் எடுத்துக்கொண்ட கடைசிப் படத்தைப் பார்த்து எதுவும் நினைக்கத் தோன்றாதவளாகக் கைபேசியைக் கீழே வைத்தாள். திருமணமான புதிதில் அன்புச்செல்வனிடம் ஸ்டெல்லா பிரியப்பட்டுக் கேட்டதும் பொட்டுதான்.

‘உனக்கு வேணும்னா வச்சிக்க, வேணாமா விட்டுடு, ஜெபம் பண்ண சர்ச்சுக்குப் பிரியப்பட்டா போ, இல்லையினா விடு, எதுன்னாலும் உன் இஷ்டம்.. ஊர் பேச்சுக்கெல்லாம் பயப்படாத’ என்று சொன்ன அன்புச்செல்வன், ‘கடைசி வரைக்கும் இந்தக் கிராமம், என் மண்ணை விட்டு நான் எங்கும் வரமாட்டேன்’ என்று திருமணத்திற்கு முன்னரே சொல்லாமல் இருந்துவிட்டான்.

அரசு பொதுப் பள்ளி அதிகாரியாக இருக்கும் ஸ்டெல்லா ஒவ்வொரு முறை பணி இடம் மாறும்போதும் அன்புச்செல்வனிடம் ‘என் கூட வந்து இருக்கலாம் ல’ என்று கேட்கத் தவறியதில்லை.

‘உனக்குப் பிடிச்ச வேலைய நீ செய்ற.. எனக்குப் பிடிச்ச வாழ்க்கைய நான் வாழறேன்... எனக்கு இந்த மண்தான் எல்லாமும்’ என்று பேசும் விவசாயம் படித்த முரட்டு விவசாயிதான் அன்புச்செல்வன்.. இரண்டாம் சரபோஜி மகாராஜாவுக்குக் கள் இறக்கிக் கொடுத்த பரம்பரை என்று பெருமை பேசியே வீணாய்ப் போன பரம்பரை என்ற பெயரும் உண்டு.

அன்றெல்லாம் மகாராஜாவுக்கு சேவகம் செய்ய உடன் இருந்தவர்கள் எல்லாம் பொன்னும் பொருளும் ஏதேதோ கேட்டு வாங்க.. அன்புச்செல்வன் பூட்டன் ‘உங்க அன்பு போதுமுங்க’ என்று கைகட்டி நின்று ‘கள்’ ஊற்றிக் கொடுத்த பெருமை தவிர வேறு சேமிப்பு இல்லை.

சுத்துப்பட்டு கிராமத்தில் சாதி ஏற்றத்தாழ்வு இருந்தும் என்ன வைராக்கியமோ காணி நிலமாவது சொந்தமாக்கி தாத்தன், பூட்டன் ‘கை கட்டி நின்ற ஊரில் கால் ஊன்றி நிற்க வேண்டும்’ என்ற அப்பாவின் ஆசையை நிறைவேற்ற முனைந்த அன்புச்செல்வன் இன்று தோட்டக்கலை ஆராய்ச்சியில் கைதேர்ந்தவனாகத் தென்னங்கன்றுகளுக்குப் பண்ணை உருவாக்கி ‘அன்புகிட்ட தென்னை வாங்கிட்டுப் போனா, தரமா இருக்கும்’ என்று தேடி வந்து வாங்கிச் செல்லுமளவுக்குப்

பெயர் பெற்றான். கூடவே உதவிக்கு வந்த ஒரு பெண்ணை உரிமையாக்கிக் கொண்ட விவரத்தை வெகு தாமதமாக ஸ்டெல்லா தெரிந்துகொண்டாள்.

கைபேசி அழைத்தது. சர்ச்சிலிருந்து பாதர்தான் அழைத்தார். 'இதோ வந்துவிட்டேன் பாதர்' என்று பதிலளித்துவிட்டுத் தனது ஆடையைச் சரிசெய்துகொண்டு நெற்றிப்பொட்டு சரியாக இருக்கிறதா என்று பார்த்து, மல்லிகைப்பூவைத் தலையில் சூடிக்கொண்டு அன்புச்செல்வனுக்காக வாங்கி வைத்திருந்த மலரை எடுத்துக்கொண்டு தனது வண்டியில் கிளம்பிப் பத்து நிமிடத்தில் தேவாலய மயானத்தில் மண்டியிட்டு அமர்ந்திருந்தாள்.

அன்புச்செல்வன் கல்லறையில் எழுதியிருந்த இந்த வாசகத்தை மீண்டும் படித்துப் பார்க்கிறாள் ஸ்டெல்லா. 'வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள், நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்' (மத்தேயு).

ஸ்டெல்லாவுக்கு எந்த வருத்தமும் இல்லை. கை வலிக்கும்போது தன் வலது கையால் இடது கையையும் கைமாற்றி இடது வலதாக அமுக்கிக்கொண்டவள்தானே.. விக்கல் வந்தபோது தன் தலையைத் தானே தட்டிக்கொண்டு.. நிற்காமல் ஓடும் அவளுக்கு நின்று வருத்தப்பட எல்லாம் நேரமில்லை.

அன்புச்செல்வனை ஒரு மாதம் படுக்கையில் போட்ட விஷக்காய்ச்சல் எந்த மருந்துக்கும் கட்டுப்படாமல் ஸ்டெல்லாவை அருகிலேயே இருக்கச் சொன்னது. உனக்குத் துரோகம் செய்துவிட்டேன், என்னை மன்னித்துவிடு என்று புலம்பவைத்தது. கூடவே இருந்து குழிப்பறித்தவர்களை அடையாளம் காட்டியது. கடைசியாக ஸ்டெல்லாவின் கைப்பிடித்து, 'என் பிள்ளைகள பாத்துக்குவல்ல' என்று கைகாட்டிக் கேட்டது தென்னம்பிள்ளையைத்தான்.

அன்புச்செல்வனைத் தேவாலயத்திற்குக் கொண்டு சென்று இறுதிச் சடங்கு செய்யும் வரை உறவுகள் யாரும் எதுவும் பேசவில்லை. ஸ்டெல்லா தன் பிறந்த உறவுகளுடன் வீட்டிற்கு வந்ததும் அன்புச்செல்வன் உடன்பிறந்தவர்கள் பேசிய பேச்சுதான் அவளை இன்னும் வைராக்கியத்துடன் இங்கு இருக்க வைத்தது. எந்த யுகத்திலும் நல்லவர்கள் மட்டுமே வாழும் பூமி, நாடு, வீடு என்று எதுவுமில்லை.

'ம்ம், ராத்திரி வண்டிக்கே கிளம்பிடுவீங்க இல்ல.. இனிமே பண்ணைய நாங்க பாத்துக்க வேண்டியதுதான்.. நீங்க எல்லாம் டௌன்லயே இருந்தவுங்க, இங்க இருக்க பிடிக்குமா என்ன?' என்றதும்தான் அன்புச்செல்வனின் உடன்பிறந்தவர்கள் தங்களுக்குக் கிடைத்த நிலத்தையெல்லாம் பிளாட் போட்டு விற்றுவிட்ட நிலையில் இங்கு பண்ணையையும் கூறுபோட வந்துவிட்டார்கள் என்று ஸ்டெல்லாவுக்குப் பட்டவர்த்தனமாகப் புரிந்தது. தன்னை எந்தவிதத்திலும் கட்டுப்படுத்தாது அரசுப் பணி பார்க்கச் செய்த அன்புச்செல்வன் கடைசியாகக் கேட்டுக்கொண்டதை நிறைவேற்றியே ஆக வேண்டும் என்று மனதளவில் முடிவு செய்துகொண்டு, அப்போதே யாருக்கோ இரண்டு போன் செய்துவிட்டு அமைதியாக உறங்கிவிட்டாள்.

குழப்பத்தில் அன்புச்செல்வன் உடன் பிறந்தவர்கள் இருவரும் அவரவர் கணவரைப் பார்க்க.. 'விடு காலைல போய்டுவாங்க' என்று கிசுகிசுத்துக்கொண்டார்கள்.

காலை எட்டு மணிக்கெல்லாம் சிசிடிவி கேமரா பொருத்த ஆள் வந்து பண்ணை சுற்றிலும் பொருத்தத் தொடங்க.. நான்கு நாட்டு நாய்களைச் சிலர் வந்து தென்னை மரத்தில் கட்டிச் சென்றார்கள். அன்புச்செல்வனின் தென்னம்பிள்ளைகளைத் தனதாக்கிக்கொண்டாள் ஸ்டெல்லா. குரல் உயர்த்திப் பேசியவர்கள் எல்லாம் வெளியேறி மறைமுகத் தொல்லைகள் தரத் தொடங்கியபோதும் தளராமல்

எதிர்கொள்ளத் தயாராக இருந்தாள். அரசு வேலைதான் ஸ்டெல்லாவின் வாழ்க்கைக்குக் கேடயம். இல்லையென்றால் என்றோ அனாதைப் பிணமாகியிருப்பாள். கணவர் இறந்த காரணம் சொல்லி சொந்த ஊருக்கு வேலை மாற்றல் வாங்கி வந்து வருடம் கடந்தது.

நமக்குச் சொந்தமான வீட்டில் இடித்துத் திருத்தி மாற்றங்களும் சௌகரியங்களும் செய்துகொள்வது போல, நமக்குச் சொந்தமென நாம் நினைக்கும் மனிதரையும் நோக்கிவிட, தன் குற்றம் அறிந்து மன்னிப்பு கேட்டவருக்குப் பாவமன்னிப்பு அளித்த ஸ்டெல்லாவின் கைபேசி அழைத்தது.

“அம்மா! கல்யாண ஆர்டர். 500 தென்னை வேணுமாம்.”

“சரி, ஆர்டர் வாங்கிக்க, நான் வந்து பேசுறேன்” என்ற பண்ணையாரம்மா தென்னம்பிள்ளையுடன் அன்புச்செல்வன் பிள்ளையைத் தன் பிள்ளையாக்கிக் கொண்டிருந்தாள்.

தேவாலயம் சென்று வந்து சற்று கண் அயர்ந்த ஸ்டெல்லா போன் அழைத்ததும்.. டிஸ்ப்ளேயில் ‘கலெக்டர்’ என்று வந்ததைப் பார்த்து அரசு அதிகாரிக்கான தோரணையுடன் குரல் உயர்த்திப் பேசினாள்.

“குட் மார்னிங் சார்” “எஸ் சார்” “எஸ் சார்” “ஓகே சார்” போன் கட் செய்த ஸ்டெல்லா, ஒரு நிமிடம் யோசித்துவிட்டு, போனில் ஒருவரை அழைத்துவிட்டுக் காத்திருந்தாள்.

“ம் ராம்! மனோராராவுக்கு கெஸ்ட் ரெண்டு பேர் வராங்க, நாமதான் போய் ரிசீவ் பண்ணனும், பத்து நிமிஷத்துல வாங்க, நானும் கிளம்பிடுறேன்..”

மறுபக்கம் “ஓகே மேடம்” என்று பணிவாகப் பதில் வந்தது.

பட்டுக்கோட்டையிலிருந்து 20 கி.மீ தூரத்தில் இருக்கும் மனோரா கோட்டை அருகே இவர்கள் செல்வதற்கும் அரசு வாகனம் மற்றொன்று அங்கு வருவதற்கும் கடிகார முள் இரண்டு சந்தித்துக்கொண்டது போலிருந்தது. வெள்ளைக்காரர்கள் இருவருடன் கலெக்டர் வந்திறங்கினார்.


பணி நிமித்தம் மரியாதை நிமித்தம் ஒருவருக்கொருவர் அறிமுகம் முடித்துக்கொண்டு மனோரா கோட்டை நோக்கி நடந்தார்கள்.

மாவட்டக் கலெக்டர் கோட்டை வரலாற்றை ஆங்கிலத்தில் விவரிக்கத் தொடங்கியிருந்தார்..

“மனோரா என்றால் கோபுரம். இது, மினார் என்ற வார்த்தையில் இருந்து உருவானது. இந்தக் கோட்டை அறுகோண வடிவம். எட்டு அடுக்குள்ள இந்தக் கோபுரத்தின் உயரம் 120 அடி. மேலே செல்ல 120 படிகள். மற்றும் ஒரு அகழியால் சூழப்பட்டுள்ளது. வாட்டர்லூ போரில் நெப்போலியன் போனபார்ட் மீது ஆங்கிலேயர்கள் வெற்றிகரமாக முன்னேறியதை நினைவுகூரும் வகையில் தஞ்சாவூர் மராத்தா ஆட்சியர் இரண்டாம் சரபோஜி என்பவரால் இந்தக் கோட்டை கட்டப்பட்டது. இந்தக் கோட்டை அரசக் குடும்பத்தின் வசிப்பிடமாகவும், ஒரு கலங்கரை விளக்கமாகவும் செயல்பட்டதாக, ஒரு கல்வெட்டு இதைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளது” என்று கலெக்டர் வரலாற்றை விவரித்தபடி முன்னே செல்ல..

சரபோஜி மன்னருக்குக் கள் ஊற்றிக் கொடுத்த மனிதர்களைப் பற்றியோ மன்னரின் அந்தப்புரத்து நாயகிகள் எத்தனை பேர் இங்கு வசித்தார்கள் என்பது குறித்தோ பேசப்படவில்லை. மனோராவின் கோபுரத்தின் மேலே படிகளில் ஏறிக்கொண்டிருந்த ஸ்டெல்லாவின் நிழல் உயரமாகத் தெரிந்தது. அருகில் வந்துகொண்டிருந்த ஆங்கிலேயப் பெண்மணி ஸ்டெல்லாவின் நெற்றிப்பொட்டு பார்த்து ‘This is so Cute’ என்று பேசியபடி கோட்டைப் படி ஏறிக்கொண்டிருந்தார். ▪

முனைவர் பொ. திராவிடமணி



# சமூகச் சிந்தனையாளர்
# ஸ்ரீ நாராயண குரு

நாராயண குரு 1855ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 28ஆம் நாள் கேரள மாநிலம் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள செம்பழந்தி எனும் கிராமத்தில் மாடன் ஆசான், குட்டி அம்மாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். இவர் பெற்றோர்களால் நாணு என்று சுருக்கமாகவும் செல்லமாகவும் அழைக்கப்பட்டார். இவர் ஈழவ சமுதாயத்தைச் சேர்ந்தவர். இச்சமூகம் அக்காலத்தில் நெருங்கத்தகாத சமூகமாகப் பார்க்கப்பட்டது. "ஈழவர் வர்ணாஸ்ரம மரபிற்குள் வராததால் சாதி என்ற வட்டத்துக்குள் இல்லாததால், நெருங்கத்தகாத "அவர்ணர்கள்" என்று கருதப்பட்டனர்," (முர்கூட் குன்ஹப்பா, தமிழில் எம்.சேஷன், ஸ்ரீ நாராயண குரு, ப.1) என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. "சவர்ணர்கள் பன்னிரண்டு அடி தூரத்தில் ஈழவர்களோடு தொடர்பு கொண்டால் தீட்டுப்படுவதாக அக்காலத்தில் கருதப்பட்டது. சாதி என்ற அளவுகோலில், சமூகப் பிரிவு உயர உயர, இந்த இடைவெளியின் தூரமும் அதிகரித்துக்கொண்டே போயிற்று. இறுதியில் பிராமணர்களுக்கு முன்னால் இந்த இடைவெளி தூரம் முப்பத்திரண்டு அடியாயிற்று" (மேலது, ப.1).

நாராயண குருவின் தந்தை மாடன் விவசாயம் செய்வதில் ஈடுபட்டிருந்த போதிலும் ஓரளவு சமஸ்கிருதம் படிக்கத் தெரிந்திருந்ததால் இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசக் கதைகளைப் படித்து அந்தக் கிராம மக்களுக்குக் கிராமியக் கதைகளாகச் சொல்லிவந்தார். மேலும் அக்கிராம மக்களுக்கு ஆசிரியரைப் போல அவர் இருந்தார். தந்தை சொல்லும் கதைகளை ஆர்வமுடன் கேட்டு வந்த நாராயணன், தந்தை இல்லாத நேரங்களில் அவரது தந்தையைப் போல அக்கிராம மக்களுக்குக் கதைகளைச் சொல்லி மகிழ்ச்சி அடைந்தார்.

ஆயுர்வேத வழி மருத்துவர், சமஸ்கிருதம் தெரிந்த பண்டிதரும் சமூகச் சீர்திருத்தவாதியுமான இவருடைய மாமா கிருட்டிணன் பரிந்துரையின் பேரில் உள்ளூர் பள்ளி ஆசிரியரும், கிராம அதிகாரியுமாக இருந்த செம்பழந்தி முத்தா பிள்ளை என்பவர் நாராயணனுக்கு வீட்டிலிருந்தபடியே அடிப்படைக் கல்வியைக் கற்றுக்கொடுத்தார். "நாராயண குரு விரைவில் கற்பதோடு, கற்றதை என்றைக்கும் ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஆற்றல் உடையவனாகவும் இருந்தான். அந்த ஆரம்பப் பள்ளியில் சமஸ்கிருதக் கவிதைகள் ஆரம்பப் பாடங்களாகக் கற்றுக் கொடுக்கப்பட்டன," (மேலது, ப.7) என்று அவரது அறிவுக் கூர்மை குறித்து முர்கூட் குன்ஹப்பா குறிப்பிட்டுள்ளார். மேல் படிப்பிற்கு வசதிகள் இருக்கவில்லை, அதனால் மாடுகளை மேய்ப்பவனாக வேலை செய்யத் தொடங்கினார். மாலை நேரங்களில் அவரது தந்தையும், மாமாவும் தமிழ், சமஸ்கிருத மொழிகளின் அடிப்படைகளையும், சிந்தனைகளையும் கற்றுக்கொடுத்தனர். மேலும், அவர்கள் தொழில்முறைப் பாடங்களான சித்தரூபம், பாலபுரோபதனம், அமரகோசம் போன்றவற்றையும் கற்றுக்கொடுத்தனர். தனது 15வது வயதில் தாயை இழந்த நாராயணன் தனது தந்தையின் ஆசிரியப் பணியிலும், மாமாவின் ஆயுர்வேத மருத்துவப் பணியிலும் உதவியாகச் சில பணிகளைச் செய்வதில்

மிகுதியான நேரத்தைச் செலவிட்டார்.

இறைவழிபாட்டிலும் மிகுந்த ஈடுபாடு உடையவராக விளங்கிய இவர் மீதமுள்ள நேரத்தை அருகிலுள்ள கிராமக் கோவில் ஒன்றில் தெய்வ வழிபாடுகளில் செலவிடுவதை விரும்பினார். “மகா பண்டிதரான கிருஷ்ணன் வைத்தியர், முதன்முறையாக சமஸ்கிருதச் செய்யுள் ஒன்றின் கருத்து புரியாமல் தவித்தார். எதற்கும் இந்த இளைஞனைக் கேட்டுப் பார்க்கலாம், ஒருவேளை அவனுக்குப் புரியலாம் என்று எண்ணி அவ்வாறே செயல்பட்டார். நாணு எவ்விதச் சிரமமும் இல்லாமல், அந்தச் செய்யுளின் கருத்தை எளிமையாக விளக்கியபோது கிருஷ்ணன் வைத்தியருக்கு வியப்பாக இருந்தது,” (மேலது, ப.10). 1876இல் நாராயணனின் கூர்மையான அறிவுத்திறனைக் கண்ட அவரது மாமா, அவரை அவரது வீட்டிலிருந்து 50 மைல் தொலைவிலிருந்த கருநாகபள்ளி என்னுமிடத்தில் சிறப்பு பெற்ற பண்டிதராக விளங்கிய கும்மன் பள்ளி ராமன் பிள்ளை ஆசான் என்பவரிடம் கல்வி கற்றுக்கொள்ள அனுப்பினார். அங்கு சமஸ்கிருதத்தை முழுமையாகக் கற்றார். வேதங்களையும், உபநிஷதங்களையும் கற்றுத் தேர்ந்தார். தலைமாணாக்கராக விளங்கியதோடு “சட்டாம்பிள்ளை நாணு” எனும் தகுதியை அடைந்தார்.

கல்வி கற்ற காலத்திலேயே ஹடயோகி என்பவரிடம் யோகமும் கற்றார். இதனால் ஆன்மீகத்தின் மீது இவருக்கு மிகுந்த ஈடுபாடு ஏற்பட்டது. நாராயண குருவின் அறை நண்பனாக இருந்த குன்ஹா பணிக்கர், “தான் இரவில் விழித்தெழும் போதெல்லாம் நாணு பிராத்தனை செய்வதையும், அல்லது கால்களை மடித்து உட்கார்ந்துகொண்டு தியானம் செய்வதையும் பார்த்ததாகக் குறிப்பிட்டுள்ளார்,” (மேலது, ப.13).

நாராயணன் வாரணப்பள்ளியிலிருந்து தனது சொந்த ஊரான செம்பழந்திக்குத் திரும்பி அந்தப் பகுதி சிறுவர்களுக்குக் கல்வி அளிக்க குறுகிய காலத்திற்குள் கடக்காவூரிலும், பின்பு அஞ்சுதெங்குவிலும் பள்ளிகளைத் துவக்கினார். இவருடைய கற்பிக்கும் திறனைக் கண்டு வியந்த அப்பகுதி மக்கள் அவரை "நாணு ஆசான்" என்று அழைத்தனர். அந்தப் பள்ளிகளில் கல்வி கற்றுத்தரும் நேரம் போக மீதி நேரங்களில் கோவிலுக்குச் சென்று அங்கு கவிதைகள் எழுதுவது, கிராம மக்களுக்குத் தத்துவம், நீதிக்கதைகளைச் சொல்வது என ஒரு துறவியைப் போல் தனது வாழ்க்கையைத் தொடர்ந்தார். “அவர் உலக ஆசைகளைத் துறந்தார். இருப்பினும், உலகப் பிறவி பந்தங்கள் அவரைத் தொடர்ந்து தொந்தரவு செய்தன. இவ்வுலகிற்கும் அவ்வுலகிற்கும் இடையே சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் நிலையில், அவர் இந்த உலக மாயையின் வலையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ளச் சிவனிடம் அடைக்கலம் அடைகிறார்.

சிவா சிவா உனக்கு ஒப்பு இணை யாரும்
இல்லை
இவ்வளவு அறிந்திருந்தும்
நான் குழம்புகின்ற எண்ணங்களால்
வழி தவறிச் செல்லுகிறேனே
எங்கு கொண்டுவிடுமோ?” (மேலது, ப.15)

என்று தன்னிலை குறித்து நாராயணன் சிவனிடம் பேசுகிறார்.

### துறவு வாழ்க்கை

நாராயணனின் நடவடிக்கைகள் துறவை நோக்கியதாக இருக்க அவரது குடும்பத்தினர் தொடர்ந்து வற்புறுத்தி தொழில்முறை கிராம மருத்துவர் ஒருவரின் மகளான காளியம்மா என்பவரை எளிமையான முறையில் அவருக்குத் திருமணம் செய்துவைத்தனர். இருப்பினும் நாராயணனுக்கு இல்வாழ்க்கையில் ஈடுபாடு இல்லை. அவர் ஒரு துறவியைப் போல நடந்துகொண்டதால் அவரது மனைவி தன்னுடைய தந்தை வீட்டிற்கே சென்றுவிட்டார். சில ஆண்டுகளுக்குப் பிற்பாடு அவரது தந்தையும் மனைவியும் மரணமடைந்ததை அடுத்து ஆன்மீக சன்னியாசியாகப் பல இடங்களுக்குச் செல்லத் தொடங்கினார்.

திருவனந்தபுரத்திற்குச் சென்ற நாராயணனுக்குப் பிரிட்டிஷ் அரசிடம் பணியாளராகப் பணிபுரிந்த தைக்காடு அய்யாவு என்ற தமிழரின் நட்பு கிடைத்தது. அவர் சிலம்பு, யோகக் கலைகள் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கும் ஆசிரியராகவும் இருந்தார். அவரிடம் நாராயணன் தியானம், யோகா போன்ற கலைகளுடன் தமிழில் ஆழமான அறிவையும் பெற்றார். வேதங்கள், உபநிடதங்கள், புராணங்கள், அறுவகை மந்திரங்கள், பவுத்த, சமண மரபுகள், மூவகை வேதாந்தங்கள், இந்திய, அயல்நாட்டுத் தத்துவங்கள் போன்றவற்றைக் கற்றுத் தேர்ந்தார். தமது 23வது வயதில் துறவறம் மேற்கண்ட நாராயணன் கன்னியாகுமரி மாவட்டம் பொற்றையடி எனும் ஊரின் அருகிலுள்ள மருத்துவமலையில் தனிமையில் தியானங்கள் செய்து எட்டு ஆண்டுகள் வரை இளம் துறவியாக வாழ்ந்தார். மருத்துவமலையில் தியானம், யோகா போன்ற கலைகளின் விளைவால் அவருக்குக் கிடைத்த அனுபவங்களைக் கொண்டு மலையாள மொழியில் "ஆத்மோபதேச சதகம்" எனும் நூறு செய்யுட்களையுடைய நூலை இயற்றினார். இதன் வாயிலாக அவருடைய கவி நயத்துடன் தத்துவார்த்தமான பல கருத்துக்களை அறிய முடிந்தது. தீண்டத்தகாதவர் என்று அன்று சொல்லப்பட்ட சமூகத்தில் பிறந்தவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் மலையாளம், தமிழ், சமஸ்கிருதம் போன்ற மொழிகளில் ஆழ்ந்த புலமை உடையவராக இவர் திகழ்ந்தார்.

### அருவிப்புரம் சிவன் கோவில்

துறவியாகத் திரிந்த நாராயணன் தனது கொள்கைகளை விரும்பும் சிலரைத் தனது சீடர்களாக்கிக் கொண்டார். அதன் பிறகு நாராயண குருவாக உயர்ந்தார். 1888இல் திருவனந்தபுரத்திற்கு அருகிலுள்ள அருவிப்புரம் என்கிற மலைகளும் காடுகளும் சூழ்ந்த, நெய்யாறு ஓடும் இடத்திற்கு அருகில் ஒரு இடத்தைத் தேர்வு செய்தார். அந்த இடத்தில் தனது சீடர்கள் உதவிகளுடன் நெய்யாற்றில் ஒரு கல்லை எடுத்து வந்து வைத்து சிவலிங்கமாகப் பிரதிஷ்டை செய்தார். தென்னை மட்டைகளைக் கொண்டு கூரை வேய்ந்து சிறு கோவிலையும் அங்கு கட்டினார். அக்கோவில் அருவிப்புரம் சிவன் கோவில் என அழைக்கப்பெற்றது.

அந்நிகழ்வு குறித்து, "1888இல் பிப்ரவரி 10ஆம் தேதி, கேரளாவில், அந்த விடியற்காலையில் ஒரு புதிய சகாப்தம் தோன்றியது. அங்கு கருங்கல்லில் ஸ்ரீ நாராயண குருவின் வாழ்க்கையின் செய்தி செதுக்கப்பட்டிருந்தது. இது ஒரு வித்தியாசமான ஸ்தலம், இங்கே மனிதர்கள் ஜாதி மத பேதமில்லாமல், அதனால் உண்டாகும் வெறுப்பும் துவேஷமும் இல்லாமல், சகோதரர்களைப் போல் வாழ்கிறார்கள்" (மேலது, ப.30) என்று குறிப்பிடப்படுகிறது.

கேரளா இம்மாதிரி இருக்கவேண்டும் என்று அவர் விரும்பினார் எனக் குமாரன் ஆசான் தெரிவிக்கிறார்.

கேரள மாநிலத்தில் தீண்டத்தகாதவர்களுக்குக் கடவுள் வழிபாடு மறுக்கப்பட்ட காலகட்டத்தில் இந்த அருவிப்புரம் சிவன் கோவில் அமைக்கப்பட்டது. இது ஒரு புரட்சிகரமான செயலாகப் பார்க்கப்பட்டது. அதே நேரத்தில் உயர் சாதியினர் என்று அடையாளப்படுத்திக் கொண்டவர்களுக்கு இச்செயல் எரிச்சலைத் தந்தது. இந்தக் கோவிலில் தங்கள் தெய்வத்தை எப்படி பிரதிஷ்டை செய்யலாம்? என்ற பிரச்சினையையும் எழுப்பினர். அப்போது நாராயண குரு கடவுள் என்பவர் ஒரு குறிப்பிட்ட ஒரு சமூகத்தினருக்கு மட்டும் சொந்தமானவர் அல்ல என்றார். "நம்பூதிரி இளைஞன் ஒருவன் குருவிடம் ஒரு ஈழவராக இருந்து, சிவனுடைய விக்கிரகத்தைப் புனிதப்படுத்த என்ன உரிமை இருக்கிறது என்று கேட்டான். "நான் ஈழச்சிவனைப் புனிதப்படுத்தினேன்" என்று குரு சலனமில்லாமல் புன்சிரிப்போடு பதிலளித்தார்" (மேலது, பக்.32-33). அந்த இளைஞன் வாயடைத்துப் போனான். நாராயண குருவின் சாதுரியமான பதில்களால் கடுமையான குறை கூற்றுகள் அடங்கிப்போயின. "தீண்டத்தகாத ஒருவரால் ஸ்தாபிக்கப்பட்ட முப்பது

கோயில்கள் யாரும் ஆட்சேபிக்க முடியாத அளவில் விமரிசையாகச் செயல்படுகின்றன" (மேலது, ப.33).

1904இல் தனது துறவு வாழ்க்கையிலிருந்து புனிதமான வாழ்விற்கான பயிற்சிகளை மேற்கொண்டார். இதற்காகத் திருவனந்தபுரத்திற்கு வடக்கே 20 மைல் தொலைவிலிருந்த சிவகிரி என்னுமிடத்தைத் தேர்வு செய்தார். அங்கு அம்பாள் ஆலயம் ஒன்றை அமைத்து அதில் தெய்வ ஆராதனைகளைத் தொடர்ந்தார்.

"வர்க்கலை" எனும் ஊரில் சமஸ்கிருதப் பள்ளி ஒன்றை நிறுவினார். அங்கு சாதிப் பாகுபாடுகளின்றிக் கல்வித் தகுதிகள் எதுவுமின்றிப் பலரும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். ஏழைக் குழந்தைகள், அனாதையாக விடப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு ஆதரவளித்தார். நம்பூதிரிகளுக்கு அடுத்த நிலையிலிருந்த நாயர் வகுப்பினர் கூட கோவில்களின் கருவறைக்குள் நுழைய முடியாத காலக்கட்டத்தில் நாராயண குரு பல கோவில்களைக் கட்டி, கோவிலில் நுழைவதற்குப் புதிய வழிமுறையைக் கொண்டுவந்தார். கேரளாவில் திருச்சூர், கண்ணூர், அஞ்சுதெங்கு, கோழிக்கோடு போன்ற இடங்களில் கோவில்களைக் கட்டினார். கர்நாடகாவில் மங்களூர் பகுதியிலும், தமிழகத்தில் நாகர்கோவிலிலும் இலங்கையில் கொழும்பிலும் சில முக்கியமான கோவில்களைக் கட்டி அங்கு சிவன், விஷ்ணு, தேவி போன்ற தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்தார். இக்கோவில்களில் வழிபாட்டுப் பூஜைகளுக்காக இவரே சமஸ்கிருதம், மலையாளம் போன்ற மொழிகளில் சில மந்திரங்களையும் உருவாக்கிக் கொடுத்தார். இவரது படைப்புகளில் சுப்பிரமணிய சதகம், காளி நாடகம், தெய்வ சதகம், சாரதா தேவி துதி போன்றவை முக்கியமானவையாகக் கருதப்படுகின்றன.

ஈழவ மக்களிடையே இருந்து வந்த சிறுதெய்வ வழிபாடு எனும் குலதெய்வ வழிபாட்டு முறையை ஒழித்துப் பெரும் தெய்வ வழிபாட்டுக்கு வழிவகுத்துக் கொடுத்தார் என்று சொல்லலாம். ஏனெனில், குலதெய்வ வழிபாட்டு முறையில் கள், சாராயம் போன்றவற்றைக் குடிப்பதையும், மிருகங்களைப் பலியிட்டு மாமிசங்களைப் படைத்து அதை அனைவரும் சமைத்துச் சாப்பிட்டு மகிழ்வதையும் வழக்கமாகக் கடைபிடித்தனர். இதனால் சண்டை சச்சரவுகள் ஏற்பட்டு இந்த வழிபாட்டில் குழந்தைகள், பெண்கள் போன்றவர்கள் கலந்துகொள்ள முடியாமல் இருந்தது. இதை மாற்றும் நோக்கத்தில் குலதெய்வ ஒழிப்பு முறையைக் கொண்டு வருவதற்காகச் சிவன், விஷ்ணு போன்ற பெரும் தெய்வங்களை ஸ்ரீ நாராயண குரு பிரதிஷ்டை செய்து புதிய கோவில்களைக் கட்டினார் என்று சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

1913இல் ஆலுவா என்னுமிடத்தில் அத்வைத ஆசிரமம் அமைக்கப்பட்டது. இந்த ஆசிரமத்தின் முக்கியக் கொள்கையாக "கடவுளின் கண்களுக்கு அனைத்து மனிதர்களும் சமம்" (ஓம் சோதர்யம் சர்வத்ர) என்கிற வாசகம் வலியுறுத்தப்பட்டது.

### ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபா

அருவிப்புரத்தில் சிவன் கோவில் அமைத்துப் புதிய புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீ நாராயண குருவின் செயல்பாட்டினால் ஈர்க்கப்பட்ட மைசூரில் மருத்துவராக இருந்த டாக்டர் பல்பு என்பவர் ஸ்ரீ நாராயண குருவைச் சந்தித்தார். கேரளாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அவருடைய உண்மையான பெயர் பத்மநாபன். தீண்டத்தகாத சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்பதால் கடவுள் பெயர் வைத்துக்கொள்ள அந்தப் பகுதியில் உள்ள நில உடைமையாளர்களால் அனுமதி மறுக்கப்பட்டது. அவர்களாலேயே பெயர் மாற்றமும் செய்யப்பட்டது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அவர் மூலம் கேரள மக்களில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் நிலையை மாற்றவும் முன்னேற்றவும் 1903இல் திருவனந்தபுரத்தை மையமாகக் கொண்டு அருவிப்புரத்தில் "ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபா" எனும் அமைப்பு நிறுவப்பட்டது.

இந்த அமைப்பில் ஈழவர்களும், புலையர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். பிற்படுத்தப்பட்டவர்களும், தாழ்த்தப்பட்ட வகுப்பினரும் கல்வி, பொருளாதாரம், இறைவழிபாடு போன்றவற்றில் உயர்சாதியினரைப் போன்ற நெறிமுறைகளைக் கடைபிடித்து உயர்ந்தால், உயர்வு தாழ்வு என்ற பாகுபாடு இல்லாமல் போய்விடும். எனவே, அந்த நிலைக்கு உயர்வதற்கு முதலில் அவர்களிடையே புரையோடிக் கிடக்கும் அறியாமையைப் போக்க வேண்டும் என நாராயண குரு நினைத்தார். அதற்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் சொந்தமானதாக இருக்கும் சிறுதெய்வக் கோவில்களை எல்லாம் இடித்துவிட்டு அந்த இடங்களைப் பலர் ஒன்றுகூடும் பொது இடங்களாகவும், கல்வி வழங்கும் பள்ளிக்கூடங்களாகவும் உருவாக்கத் திட்டமிட்டார். சிறுதெய்வக் கோவில்களை இடித்தால் அந்தத் தெய்வங்களின் கோபத்திற்கு ஆட்பட்டு அதனால் தீய செயலுக்கு உள்ளாகிப் பாதிக்கப்படுவோம் என்று பலரும் பயந்த நிலையில் தானே முன்னின்று அந்தக் கோவில்களை அகற்றி அந்த இடங்களைச் சமூகப் பொது இடங்களாகவும் பள்ளிக்கூடங்களாகவும் அமைக்க முற்பட்டார். இவர் கேரளாவில் மட்டுமின்றித் தமிழகத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திலிருந்து திருவில்லிபுத்தூர் வரை இது போன்ற பல சிறுதெய்வக் கோவில்களை இடித்துப் புதிய இடங்களை முன்னின்று உருவாக்கினார் என அறியமுடிகிறது.

தத்துவார்த்தமான கடவுள் கொள்கைகளைச் சிலர் கடவுளாக வலியுறுத்தியதுண்டு. ஸ்ரீ நாராயண குருவோ தத்துவார்த்தமுடைய சில அடிப்படைகளைக் கொண்டு கோவில்களை அமைத்தார். சிவன், விஷ்ணு, சுப்பிரமணியர் போன்ற முழு முதல் தெய்வங்களைப் பிரதிஷ்டை செய்து கோவில்களை உருவாக்கிய ஸ்ரீ நாராயண குரு அடுத்த கட்டமாக தத்துவார்த்தமான கொள்கைகளை வலியுறுத்தும் வழியில் முதலில் விளக்கைக் கருவறை தெய்வமாகப் பிரதிஷ்டை செய்தார், பிற்பாடு சத்யம் தர்மம் தயை எனும் சொற்களைக் கருவறை தெய்வமாகப் பிரதிஷ்டை செய்து கோவில்களை அமைத்தார். பின்னர் களவங்கோடு எனும் பகுதியில் நிலைக் கண்ணாடியைத் தெய்வமாகப் பிரதிஷ்டை செய்து புதிய கோவில் ஒன்றையும் அமைத்தார்.

இறைவழிபாட்டில் பல புதிய நடைமுறைகளை உருவாக்கிப் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களுக்கு ஒரு புதிய வழியைக் காட்டிய ஸ்ரீ நாராயண குரு “ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபா”வின் மூலம் ஏராளமான பள்ளிகளையும் கல்விக்கூடங்களையும் கட்டினார். ஈழவ சமுதாயத்தினர் செய்து வந்த குலத் தொழிலான ஆயுர்வேத மருத்துவத் தொழிலில் உள்ளவர்கள் ஓரளவு சமஸ்கிருதம் கற்றவர்களாக இருந்தனர். ஆனால் அவர்களுக்கு அதில் முழுமையான அறிவு இல்லாமலே இருந்தது. எனவே பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களும் சமஸ்கிருதத்தை முழுமையாகக் கற்றுக்கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ஆங்கிலத்தையும் உலகம் முழுவதுமுள்ள பொது மொழியாக அவர் கருதியதால் அதையும் அனைவரும் கற்றுக்கொள்ள வேண்டும் என எண்ணினார். அதற்காகத் தனது சீடர்களில் ஒருவரான நடராஜ குரு என்பவரை மேலைநாட்டிற்கு அனுப்பிப் பல விடயங்களைக் கற்றுத் தேர்ந்து வரச் செய்தார்.

கல்வி, சமூக நிறுவனங்களை அதிக அளவில் கொண்ட ஒரு பெரிய அமைப்பாக “ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபா” உருவானது. இதன் மூலம் கேரளாவில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்கள் அனைவரும் கல்வி கற்க முற்பட்டனர். இன்று இந்தியாவில் கேரளா மாநிலம் நூறு விழுக்காடு எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் உள்ள மாநிலமாக, அனைவரும் கல்வி அறிவுடையவர்கள் என்ற முதல் நிலையைப் பெற்றிருப்பதற்கு அடிப்படைக் காரணம் ஸ்ரீ நாராயண தர்ம பரிபாலன சபாவின் கொள்கைகள், கோட்பாடுகள் மற்றும் அதன் செயல்பாடுகளாகும். கேரளாவில் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட வகுப்பு

மக்கள் இறைவழிபாடு, கல்வி போன்றவற்றில் உயர்நிலையை அடைந்ததைத் தொடர்ந்து பொருளாதாரத்திலும் முன்னிலை பெறத் தொடங்கினர். பிற்காலத்தில் இந்தச் சமூகச் சீர்திருத்த அமைப்பின் எல்லை விரிவு அடைய அடைய நிர்வாகச் சீர்கேடுகளும் அரசியல் தலையீடுகளும் உள்ளுக்குள் வரத்தொடங்கின என்பர்.

### ஸ்ரீ நாராயண குருவின் இலக்கியப் படைப்புகள்

ஸ்ரீ நாராயண குரு இந்தியாவின் குறிப்பிடத்தக்க சமூக சீர்திருத்தப் பெரியார்களில் ஒருவராவார். இவர் மலையாளம், சமஸ்கிருதம் மற்றும் தமிழ் மொழிகளில் 30 நூல்களையும் மூன்று மொழிபெயர்ப்பு நூல்களையும் படைத்துள்ளார்.

### மலையாளப் படைப்புகள்

1. ஸ்வனுபவ கீதை 2. ஆத்மோபதேச சதகம் 3. அத்வைத தீபிகா 4. தெய்வ தசகம் 5. ஜீவகாருண்ய பஞ்சகம் 6. அனுகம்ப தசகம் 7. ஜாதி நிர்ணயம் 8. ஜாதி லட்சணம் 9. சிஜ்ஜட சிந்தகம் 10. தெய்வ சிந்தனம் 1 – 2 11. ஆத்ம விலாசம் 12. சிவ சதகம் 13. அறிவு

### சமஸ்கிருதப் படைப்புகள்

1. தர்சன மாலா 2. பிரம்மவித்ய பஞ்சகம் 3. நிர்விருத்தி பஞ்சகம் 4. சுலோகதிரயி 5. வேதாந்த சூத்திரம் 6. ஹோம மந்திரம் 7. முனிசர்ய பஞ்சகம் 8. ஆஸ்ரமம் 9. தர்மம் 10. சரம சுலோகங்கள் 11. சிதம்பர அஷ்டகம் 12. குக அஷ்டகம் 13. பத்ரகாளி அஷ்டகம் 14. விநாயக் அஷ்டகம் 15. ஸ்ரீ வாசுதேவ அஷ்டகம் 16. ஜெனனி நவரத்னமஞ்சரி

### தமிழ்ப் படைப்பு

1. தேவாரப் பதிகங்கள்

### மொழிபெயர்ப்பு படைப்புகள்

1. திருக்குறள் 2. ஈசோவாஸ்யோ உபநிஷத் 3. ஒழிவில் ஒடுக்கம்

### ஸ்ரீ நாராயண குரு மறைவு

இந்தியச் சமூகச் சீர்திருத்தப் பெரியார்களில் ஒருவராகவும், இறைவழிபாட்டில் பல புதுமைகளைக் கொண்டுவந்தவராகவும், சிறந்த இலக்கியப் படைப்பாளியாகவும் அறியப்பட்டுத் தத்துவ ஞானியாகவும் உயர்ந்த ஸ்ரீ நாராயண குரு 1928ஆம் ஆண்டில் செப்டம்பர் திங்கள் தனது சிவகிரி மடத்தில் உடல்நிலை சரியின்றி இருந்துவந்தார். அந்த ஆண்டில் செப்டம்பர் திங்கள் 20ஆம் நாள் மகாசமாதி எனும் நிலையில் அடக்கமானார். ஸ்ரீ நாராயண குருவின் உயிர் பிரிந்த அறையில் அவர் பயன்படுத்திய கட்டிலும், நாற்காலியும், தலையணைகளும் அப்படியே இருக்கின்றன. அங்கு ஒரு விளக்கு அணையா விளக்காய் எக்காலமும் எரிந்துகொண்டிருக்கிறது.

### ஸ்ரீ நாராயண குருவின் தத்துவங்கள்

ஸ்ரீ நாராயண குரு, "நான் தத்துவத்தில் ஆதி சங்கரரைப் பின்பற்றுகிறேன். ஆனால் சாதிப்பிரிவினை சம்பந்தமாக நான் அவருடன் ஒத்துப்போகமாட்டேன்" என அவரே குறிப்பிட்டு இருக்கிறார். மதங்கள் வெவ்வேறு அல்ல. அனைத்தும் அந்த ஒரே சத்தியத்தை நோக்கியே இட்டுச்செல்கின்றன எனக் கூறியதுடன் "ஒரு ஜாதி, ஒரு மதம், ஒரு தெய்வம் மனிதர்களுக்கு" என்று பறைசாற்றினார்.

ஸ்ரீ நாராயண குருவின் தீண்டாமை ஒழிப்புக் கொள்கைகள் முக்கியத்துவமுடையன என்றாலும் அதற்குப் பின்பு அவர் எடுத்துச் சொன்ன "அனைத்தும் ஒன்றே" என்பதுதான் முக்கியமானதாக வலியுறுத்தப்பட்டது. நாராயண குருவின் வழிமுறை எதையும் நிராகரிப்பது அல்ல. அவர் அனைத்தையும் கற்று உள்ளடக்கித் தனக்கென ஒரு நோக்கை உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்றார். அனைத்தையுமே கற்றுக்கொள்ள வேண்டும் என்றார். அறிவு ஒன்றுதான் மனித குலத்துக்கு உரியது என்றும் அதைக் கொண்டு முன்னேற்றம் காண்பதுதான் வாழ்க்கை என்றும் அறிவுறுத்தினார். இந்த அறிவுக்குக் குறுக்கு வழிகள் எதுவும் இல்லை

என்ற அவரது அறிவுரை முக்கியமானது.

தன்னைப் பின்பற்றியவர்களிடம் வேதங்கள், உபநிடதங்கள், இந்திய மற்றும் மேலை நாட்டுத் தத்துவங்கள், சமஸ்கிருத மலையாளக் காவியங்கள், தமிழிலக்கிய மரபுகள் அனைத்தையுமே கற்றுத் தேர்ந்து தெரிவு செய்தவற்றை மறு ஆக்கம் செய்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று வலியுறுத்தினார்.

நாராயண குருவின் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் செய்திகளையும் உலகம் முழுவதும் கொண்டு சென்றவர்களில் அவரது சீடரான நடராஜ குரு முக்கியமானவர். இவர் நாராயண குருகுலம் எனும் ஒரு அமைப்பை நிறுவி அவருடைய தத்துவங்களையும், நூல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து ஐரோப்பிய நாடுகளுக்குக் கொண்டு சென்றதுடன் அங்கும் நாராயண குருகுலத்தின் கிளை அமைப்புகளைத் தொடங்கினார். உலகத் தத்துவ ஞானிகளில் ஒருவராக அவரைப் பரிணமிக்கவும் செய்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீ நாராயண குருவின் கொள்கைகள், கோட்பாடுகள், செயல்பாடுகள் என்று பல விடயங்கள் கேரளாவில் உள்ள பல பல்கலைக்கழகங்களிலும் வேறு சில பல்கலைக்கழகங்களிலும் ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டு பல மாணவர்கள் முனைவர் (Ph.D.,) பட்டமும், ஆய்வியல் நிறைஞர் (M.Phil.,) பட்டங்களும் பெற்றுள்ளனர். கேரளாவில் ஒரு பல்கலைக்கழகத்தில் ஸ்ரீ நாராயண குரு கருத்துக்கள் தனித்துறையாகவே இடம்பெற்றிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீ நாராயண குருவின் சிறப்புகள்

- 1901இல் வெளியிடப்பட்ட திருவாங்கூர் மாநில மக்கள் தொகை கணக்கெடுப்பு புத்தகத்தில் ஸ்ரீ நாராயணா "குரு" எனும் அடைமொழியுடன் சமஸ்கிருதப் பண்டிதராகவும் குறிப்பிடப்பட்டுள்ளார்.
- சாமியார்களைச் சந்திக்கவே விரும்பாத மகாத்மா காந்தி 1925இல் கேரளாவில் இவரைப் பல எதிர்ப்புகளுக்கிடையே சந்தித்ததுடன் "அவதார புருஷர்" என்றும் பாராட்டினார்.
- தமிழகத்தின் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் இவருடைய சமூகச் சீர்திருத்தக் கொள்கைகளைப் பாராட்டி எழுதியிருப்பதுடன் இவருடைய சமஸ்கிருத நூல்களையும் கருத்துக்களையும் பாராட்டியிருக்கிறார்.
- கேரளத்தின் மகாகவி ஜி.சங்கரகுருப் எழுதிய செய்யுளில் ஸ்ரீ நாராயண குருவை "இரண்டாம் புத்தர்" என்று குறிப்பிட்டுள்ளார்.
- கேரளாவில் ஸ்ரீ நாராயண குருவின் பிறந்த நாள் மற்றும் அடக்கமான நாள் ஆகியவை கேரள அரசால் அரசு விடுமுறை நாள்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன.
- 2006ஆம் ஆண்டில் ஸ்ரீ நாராயண குருவின் 150வது பிறந்த நாளின் போது இந்திய அரசு ரிசர்வ் வங்கி மூலமாகச் சிறப்பு நாணயங்களை வெளியிட்டுச் சிறப்பித்தது.

### ஸ்ரீ நாராயண குரு பெயரிலான அமைப்புகள்

தமிழ்நாட்டில் ஸ்ரீ நாராயண குருவின் பெயரில் பல சமூக சேவை அமைப்புகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இவை ஸ்ரீ நாராயண குருவின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்புவதற்கு உறுதுணையாக இருந்துவருகின்றன.

- ஸ்ரீ நாராயண குரு பண்பாட்டுப் பேரவை (SNPP)
- ஸ்ரீ நாராயண குருகுலம்

SREE NARAYANA DHARMAPARIPALANA YOGAM (SNDP) – நாராயண குருவின் முதன்மைச்சீடர் நடராஜகுருவால் உருவாக்கப்பட்ட அமைப்பு. இதன் தலைமைப்பீடம் வர்கலாவில் உள்ளது. முதன்மைக்கிளை ஊட்டியில் உள்ளது [நாராயண குருகுலம், மஞ்சணகொரே, ஃபெர்ன் ஹில், ஊட்டி]. ■

கட்டுரை

நெல்லை க.சோமசுந்தரி



# நடனமாடும் தெய்வம்

ஒரு குறிப்பிட்ட பிராந்திய மக்களின் மன நம்பிக்கைகளின் அடிப்படையில் ஒரு கலையானது மொழி, கலாச்சாரம், பண்பாடு, புவியியல் ரீதியாகப் பழங்காலம் தொட்டே மக்களிடையே உருவாகி, சமுதாயத்தில் தொன்றுதொட்டு இன்றளவும் தொடர்கிறது. அப்படிப்பட்ட ஒரு கலையாக, "கடவுளின் தேசம்" என வழங்கப்படும் கேரளாவில் வடக்கு மலபார் பகுதிகளில் 'தெய்யம்' என்ற ஒரு நடனக் கலையானது மிகவும் பிரசித்தி பெற்று இன்றும் விளங்குகிறது. "தெய்வம்" என்ற சொல்லிலிருந்து 'தெய்யம்' எனும் சொல் மருவிப் பிறந்திருக்கக்கூடும். 'தெய்யம் நடனம்' என்பது "கடவுளின் நடனம்"எனும் பொருளாக நம்மிடையே அது பரிணமிக்கிறது.

இப்பெருவெளியில் இயற்கையோ அல்லது கோவில் கருவறையில் வசிக்கும் கண்ணிற்குத் தெரியாத ஒரு சக்தியோ அல்லது அந்த சக்தியைத் தாண்டிய ஏதோ ஒன்றோ, மக்களிடையே இறங்கி வந்து, அவர்களின் துயரங்களை நேரடியாகக் கேட்டு, அந்நிலத்தையும், அதன் மக்களையும், தொடர்ந்து பாதுகாத்து வருவதாக அப்பூகோளப் பரப்பில் வாழும் மக்களின் நம்பிக்கையாகப் பார்க்கப்படுகிறது. அந்த வகையில், மனிதர்கள் நினைக்கும் வேண்டுதல்கள் நிறைவேற்றப்பட்டவுடன் தெய்வங்களுக்கு நன்றி செலுத்தும் விதமாகவும் தொடர்ந்து அவற்றின் அருள் பெறுவதற்காகவும், அதன் முன் ஆடப்படும் இந்த நடன வகை அவ்விடத்தில் வாழும் மக்களின் கலாச்சார நடனமாக உள்ளது என்பதை வாசிக்கும்போது நமக்கு ஆச்சரியமாக உள்ளதல்லவா?

தெய்யம் நடனமானது ஒரு தெய்வத்தின் தோற்றத்தை முன்வைத்து, அந்தத் தெய்வத்தின் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்காக அரங்கேற்றப்படுகிறது. தெய்யம் நடனத்தின் மூலம் என்பது தெய்வங்கள் மற்றும் பழம்பெரும் மூதாதையர்கள், மடிந்த போர் வீரர்களை உள்ளடக்கிய கதைகளைக் கொண்ட பாட்டு வடிவ வழிபாடு ஆகும். ஒவ்வொரு ஆண்டும் தெய்யம் பருவம் என்பது துலாம் பத்தாம் நாளில் தொடங்கி ஏடவம் மாதத்தின் நடுப்பகுதி வரை நீடிக்கிறது. அதாவது, ஒரு வருடத்தில் அக்டோபர் முதல் மே மாதம் இறுதி வரையில் கொண்டாடப்படும் பராம்பரிய விழாவாகும்.

தெய்யம் நடனம் என்பது கேரளாவில் வடக்கு மலபார் பகுதிகள் மட்டுமின்றிக் கர்நாடகாவில் சில பகுதிகளிலும், தமிழ்நாட்டின் சில பகுதிகளிலும், ஆதிகாலம் தொட்டு, இன்றளவும் ஒரு குறிப்பிட்ட பருவ காலத்தில் கடைபிடிக்கப்பட்டு, வணங்கப்படும் கடவுளுக்கு நன்றி செலுத்தும் நடன முறையாக உள்ளது. இந்நடனமானது, மரியாதைக்குரிய தெய்வத்தின் கதைகளை விவரிக்கும், ஒரு நாட்டுப்புறக் கலை வடிவத்தையும் தாண்டி, கலாச்சாரச் சின்னமாகவும், அவ்விடங்களின் பெருமைகளையும், மகத்துவத்தையும், தொடர்ந்து பறைசாற்றும் பண்டைய கலை மரபுகளில் ஒன்றாகவும் கருதப்படுகிறது.

இந்நடனத்தில், 'தெய்யம்' என்பது ஒரு கதாபாத்திரத்தைக் குறிக்கிறது. அப்பாத்திரத்திற்கு உயிர் கொடுக்கக்கூடிய கலைஞர் "கோலம்" என்று அழைக்கப்படுகிறார். தெய்வத் தோற்றம் தரித்தவரின் உடலில் வணங்கப்படும் தெய்வமோ அல்லது அவ்வட்டார வீரனோ பிரவேசிப்பதற்காகச் செய்யப்படும் வேண்டுதலாக அதன் கதைப்பாடல்களை உள்வாங்கி நடனக்

கலைஞர்கள் ஆடுவார்கள். இந்த ஆட்டக் கலை 'தெய்யாட்டம்' எனவும், தெய்யத்தின் வேடத்தை 'தெய்யக் கோலம்' என்றும் வழங்குகிறார்கள்.

தெய்யம் நடனத்தை ஆண்களே, பெண்களின் வேடமிட்டு ஆடுகின்றனர். இதனைத் தொடர்ந்து கலைஞர்கள் கனமான, விரிவான வண்ணமயமான ஒப்பனை மற்றும் அழகான வண்ணங்கள் கொண்ட ஆடைகளை அணிகின்றனர். சில நேரங்களில் பச்சை பனை ஓலைகளை ஆடையாக உடுத்தியும், பித்தளை ஆபரணங்களை உடலெங்கும் அணிந்தும், அச்சமூட்டும் வகையில் முகமூடிகளும் மிகக் கம்பீரமாகப் பெரிய கிரீடம் சுமந்த தலைக் கவசங்களும் பொருத்திக்கொண்டும் ஆடும் இந்நடனத்தைக் காணும் ஒருவருக்கு, பிரமிப்பாகவும் திகில் மற்றும் ஆச்சரிய உணர்வை வெளிப்படுத்தும் விதமாகவும் இருக்கிறது. இவ்வித ஒப்பனைகளை முடிக்கக் குறைந்தது நான்கு மணி நேரம் இந்நிகழ்வுக்காகச் செலவிடப்படுகிறது.

தெய்யம் சடங்கின்போது நடனக் கலைஞர்கள் கடவுள் அல்லது தெய்வத்தின் தோற்றத்தை எடுத்து, பல சடங்குகளை மேற்கொள்கிறார்கள். இதற்காக ஆடுபவர்கள் பல மாதங்கள் விரதம் இருந்து தங்கள் உடலையும் உள்ளத்தையும் கடுமையாகத் தயார்படுத்துகிறார்கள்.

தெய்யம் நடனத்தில், பலவகை இருந்தாலும் பெரும்பாலும், புராணக் கதைகள், கடவுளின் வடிவம் அல்லது மூதாதையர்கள் பற்றிய குறிப்புகள் தாங்கி வெளிப்படுகின்றன. தெய்யத்தில் ஏறத்தாழ 400க்கும் மேற்பட்ட தெய்யங்களின் (தெய்வங்கள்) வடிவ வகைகள் உள்ளன. இதில் விஷ்ணு மூர்த்தி தெய்வம், ஸ்ரீ முத்தப்பன் தெய்வம், கதிவனூர் வீரர், கண்டனூர் கேலன், குலிகம், சாமுண்டி, குட்டிச்சாத்தான் எனும் வகையில் தெய்யம் நடன வகைகளில் நீண்ட பட்டியல் கொண்டு, வட்டாரம் சார்ந்த கலை வடிவமாக இன்றளவும் ஆடப்படுகிறது. ஒவ்வொரு தெய்யத்திற்கும் வரையப்படும் ஒப்பனைகள் பாடப்படும் பாடல்கள் நடத்தப்படும் சடங்குகள் என எல்லாவற்றிலும் நிறைய வேறுபாடுகள் உள்ளன. இதில் குறிப்பாக, தேவகூத்து தெய்யம் மட்டும் பெண்களால் நடத்தப்படும் ஒரு தெய்வச் சடங்காகும்.

பெரும்பாலும் தெய்யம் நடனத்தை ஆடுபவர்கள் அம்மனே தம்மை ஆட்டி வைப்பது போன்ற எண்ணத்துடன் ஆடுவார்கள். ஆட்டத்தின்போது ஒரு அசரீரியாக, அருள்வாக்கைக் கூறி, அம்மன் பக்தர்களின் நேர்த்திக்கடன்களை ஏற்றுக்கொள்வதாக, அவர்களை ஆசீர்வதிப்பதும் ஒரு ஆழமான ஆன்மீக அனுபவத்தை அளிக்கிறது.

தெய்யத்தின் துவக்கப் புள்ளிகள் வரலாற்றில் அடர்ந்த பனி மூட்டத்தில் எங்குத் தொடங்கியிருந்தாலும், அதன் சில கூறுகள் சங்க காலப் பாடல்களில் காணக் கிடைப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிஞ்சி நிலத்து மக்களின் பிணி மற்றும் துயரத்தை நீக்க மலை தெய்வமான முருகன், ஒருவர் உடலில் இறங்கி ஆடும் ஆட்டம் "வேலன் வெறியாட்டம்" என்ற பெயரோடு அக்காலத்தில் அறியப்பட்டிருந்தது. அவ்வகையில், தெய்யம் ஆடுபவர் தனது இயல்பான மனநிலையை விட்டு ஒரு கடவுள் அல்லது கதையின் கதாபாத்திரத்தின் மனநிலைக்கு மாறுகிறார். அங்ஙனமே, தெய்யம் கலைஞரானவர், ஒரு மக்களின் கடவுளாகவோ அல்லது நடனக் கடவுளாகவோ சமூகத்தில் பார்க்கப்படுவதாகக் கூறுகிறார்கள்.

தெய்யம் ஆடும் மனிதர்கள் தனது உடலை, மனதை, ஆன்மாவை ஒருங்கிணைத்து, ஒரு புதிய நிலைக்குத் தள்ளப்பட்டு, தன்னிலையில் ஒருவிதமான தூண்டல் ஏற்பட்டு மனவூக்கம் பெறுகிறார்கள். தெய்யம் நடனத்துடன் தொடர்புடைய மிக முக்கியமான அம்சமாக, கடவுளையும் ஆன்மீக சக்தியையும் இயற்கையுடன் இணைப்பது நீண்ட காலமாகப் பின்பற்றப்படுகிறது. இது, வாழ்விற்குத் தேவையானதைச் சிறப்பாக ஏற்றுக்கொள்ளவும், பலனளிக்கவும் உதவுகிறது என இம்மக்களால் நம்பப்படுகிறது.

மனிதனிலிருந்து கடவுளுக்கு மாறுவதற்கான ஒரு கலைஞனின் பயணம் தெய்யம் நடனத்தில் வெளிப்பட்டாலும், பல நூற்றாண்டுகளைக் கடந்து முந்தைய வேர்களைக் கொண்ட "தெய்யம் நடனம்" ஒரு பூர்வீகக் கலை வடிவமாகவும், பழங்குடிக் கலாச்சாரத்தின் முக்கிய கூறுகளைப் பிரதிபலிப்பதாகவும், நம்மிடையே கலையின் பொக்கிஷமாக இவ்விடங்களில் இன்றளவும் பிரதிபலித்து நிற்கின்றது. ■

சிறுகதை

பாண்டிச்செல்வி விஸ்வநாதன்



# இரும்பு மரம்

"யக்கோவ்.. ராசாமணியக்கோவ்.. எங்க ஆளக் காணோம், தட்டியக்கூட அடைக்காம எங்கிட்டுப் போச்சு.. "

விசாலம் வெளித்திண்ணையைக் கடந்து உள் நுழைகையில் வாசலிலேயே படுத்திருந்தது ராசாமணியக்கா.

"ஏக்கா, ஒனக்கு காது கீது கேக்கலையா? எம்புட்டு நேரமா நானும் கூப்பாடு போடுறேன். அப்புடி என்ன ஒறக்கம் ஒனக்கு, கடவாச தட்டியக்கூட அடைக்காம. மாடு கீடு உள்ள வந்துருச்சுன்னா என்ன பண்ணுவ. வெளிய தொட்டி முழுக்க வெரக நெரப்பி வெச்சிருக்க. போகையில வரையில எவனாச்சும் ரெண்டுரெண்டா கைல புடிச்சுக்கிட்டுப் போனான்னா யாருக்குத் தெரியும்."

"விசாலமா.. வா.. வா.." என அசதி முறித்து மெல்ல எழுந்து உட்கார்ந்தது ராசாமணியக்கா.

"என்னா மேலுக்கு எதுவும் முடியலையாக்கா, இப்புடி கெடக்குற, ஆசுபத்திருக்கி போவமா?"

"அதெல்லாம் ஒன்னுமில்லடி."

"சரி, கஞ்சிகிஞ்சி காச்சுனியா, என்ன வெஞ் சனம் வச்ச, இந்தா இந்தக் கிண்ணத்துல எனக்கு ஒல்லத்தி எடுத்துக்கிட்டு வா, பசி எனக்குக் காத அடச்சு வருது."

"அடியாருடியவ, ஆருடி கஞ்சி காச்சுனா, ஓயாம ஒனக்கு வெஞ்ஞனங் குடுக்க, கட்டுமாவடி போய் இந்த வெறக கொண்டாந்து எறக்குனவதான். கிறுகிறுன வர அப்புடியே படுத்துவதே நானு."

"ஏ, ஒம்மக எங்கட்டு போச்சு?"

"வள்ளியா, அது நாட்டரசன் கோட்டைக்குப் போயிருக்கு. அதுவுட்டு மகளப் பாக்க. நாளைக்குதேன் வரும். கிறுகிறுத்துப்போயி உக்காந்திருந்தேன் தண்ணிம் மோந்து குடுக்கக் கூட ஆளில்லாம. அப்பத்தேன் இந்தப் பக்கத்து வீட்டுக் காயிலாங்கடக்காரன் பொண்டாட்டி சொர்ணம் இருக்கால்ல, அந்தப் புண்ணியவதிதே அவுக வீட்ல விருந்தாளு வந்திருக்கு போல, ஒரு கிண்ணியில மீங்கொழம்பும் கொஞ்சம் போல சோறும் குடுத்துச்சு. மீங்கொழம்பெல்லாம் மின்னமாரி சாப்புட முடியல, இப்பல்லாம் ஒரப்பு ஆக மாட்டேங்குது. கொஞ்சம் சோத்த மட்டும் போட்டு மோர ஊத்திக் கரச்சுக் குடிச்சுப்புட்டுப் படுத்துவதான். நீ கூப்பிட்டது எல்லாம் என் காதுல ஒன்னுமே விழுகல.

நீயே பசி காதடச்சு வருதுன்ன சொன்ன,

அங்குன அடுப்புமேல அவ குடுத்த மீங்கொழம்பும் சோறும் இருக்கு பாரு, போட்டு சாப்பிடு முதல்ல, அப்புறம் பேசுவோம்."

ஒரு தட்டில் சோற்றைப் போட்டு மீங்கொழம்பை ஊத்திப் பிசைந்து இரண்டு கை அள்ளி உருண்டை பிடித்து விழுங்கியதும் கையைக் கழுவிவிட்டு "நல்லாதாக்கா பாற மீன போட்டுக் குழம்பு வெச்சிருக்கு," என்றபடி பிளாஸ்டிக் குடத்திலிருந்து ரெண்டு தம்ளர் நீரருந்திவிட்டு முந்தானையில் வாயை ஒத்தியெடுத்தபடி வந்து உட்கார்ந்தாள் விசாலம்.

"நான்தான் விறகு எடுத்தார போயித்துக் கஞ்சி காய்ச்ச முடியாம கிடக்குறேன். நீ எங்குட்டுப் போன, கஞ்சி கூட காச்சிக் குடிக்காம."

"கூப்பங் கடைக்குப் போயிருந்தேக்கா, பொங்க பணம் ஆயிரம் குடுப்பாகனு, அம்புட்டுக் கூட்டத்துல நின்னு கிட்டக்கப் போனா... அரிசி சக்கர கரும்பு வேட்டி சேல மட்டும்தான் கொடுத்தாக, இந்த வருசம் பணங் குடுக்கலையாம். அது இருந்தா ஒரு பொங்கச்செலவுக்காகும், இந்த வருஷம் அதுவும் போச்சு."

"எங்குட்டாச்சும் எவனாச்சும் எதையாச்சும் எனாமா கொடுப்பான்னே திரியுறது."

"ஏ.. நீ கூப்பங்கடையில போய் ஒன்னுமே வாங்க மாட்டியாக்கு.."

"ஏ ஒடம்புல ஓடுறது குடுக்கிற வம்சத்து ரத்தமுடி, ஒருநாளும் கைநீட்டி வாங்க மாட்டேன்."

"ஆமா இந்த வெட்டி வறட்டு வீம்புக்கு ஒன்னும் குறைச்சயில்ல ஒனக்கு."

கருத்த படர்ந்த மேனி, சிறிய கண்களின் மேல் வெள்ளைப் புருவங்கள், கூர்மையான மூக்கு, தலையெங்கும் அடர்ந்து நிறைந்திருந்த வெண்பஞ்சு மயிரை அள்ளி முடிந்தபடி நீட்டி முழக்கிய ராசாமணியக்கா "அந்தக் காலத்துல பர்மால திடீர்னு ராணுவம் ஆச்சிய புடிச்ச ஒடனே தமிழங்க எல்லாரையும் வெரட்டி விட்டுட்டா, டாங்கோலருந்து எட்டு பிள்ளேகளோட எங்க அம்மாவையும் கூட்டிக்கிட்டு எங்க அப்பா யாராவது ஏதாவது கொடுப்பாங்கன்னு எதிர்பாத்தா இந்தியா வந்தாரு. மெட்ராஸ் வந்து அகதிங்க முகாமுல சேர்ரதுக்குள்ள படாதபாடுபட்டுப் போயிட்டோம். அங்கிருந்து எப்படியோ எல்லாத்தையும் தஞ்சாவூரு கூட்டியாந்து கர சேர்த்தாரு. எங்க அப்பாரு கிழிச்ச கோட்ட தாண்ட மாட்டோம். அவரு சொல்லுக்கு எல்லாரும் கட்டுப்பட்டோம். என்னய கொண்டாந்து, பொண்டாட்டி செத்துப் போச்சுன்னு ரெண்டாந்தாரமா ஒ மச்சான் தலையில கட்டுனாரு எங்கப்பாரு.. ஒரு நா கூட ஆனாப்ல வேல வெட்டிக்குன்னு போனதில்ல என்னய கட்டுனவே, குடிச்சே அழிச்சான். இவன் இங்க இருந்தா சரிப்பட்டு வர மாட்டான்னு கல்யாணம் ஆன புதுசுல தஞ்சாவூர் கூட்டிக்கிட்டுப் போயி நானும் என்னென்னமோ பண்ணிப் பார்த்தேன். அத்தோ கட வச்சிருந்தேன். கொஞ்ச நாளு அப்புறம் கவுனி அரிசி களி கிண்டி வித்தேன். அப்ப பர்மால இருந்து வெள்ளக்கவுனி கருப்பு கவுனியரிசின்னு ரெண்டு வகையா வரும், களி கிண்டுனா ரப்பர் மாதிரி இருக்கும். இப்ப எங்க அப்படி எல்லாம் வருது. அப்புறம் சீம்பாலு அவுச்சும் இடியப்பேன் புட்டுக்கடைன்னு நானும் பண்ணாத தொழில் இல்லை. எம்புருசே அக்கிரமம் தஞ்சாவூர்லயும்





தாங்க முடியாம மறுபடியும் இங்கேயே கூட்டிக்கிட்டு வந்துட்டேன். அடுத்தடுத்து அஞ்சு புள்ள ஆகிப்போச்சு. எம்ஜிஆர் செத்த மறுநாள் திடீர்னு, வீட்ல வாங்கி வச்சிருந்த மண்ணெண்ணெய்ய மேல ஊத்திக்கிட்டுக் கொளுத்திக்கிட்டான் மனுசே. சர்க்காரு ஆசுருபத்துல பதுனைஞ்சு நாளு கெடந்து தோலெல்லாம் உறுஞ்சு செத்துப்போனாரு, முப்பத்தியெட்டு வருசமாச்சு. யாருகிட்ட கையேந்துனே. ஏ மாமனாரு செஞ்ச விறகுத் தொழிலைத்தான் நான் பாத்துக்கிட்டு இவ்வளவு காலமா கஞ்சி குடிச்சிட்டு வாரேன். வெறகு ஏவாரம் மட்டும் என்ன வாழுது? யார் இந்தக் காலத்துல விறகு வாங்கி எரிக்கிறாய்ங்க, இந்தப் பொராட்டாக் கடைக்காரைய்ங்க மட்டுந்தான் வாங்குறாய்ங்க. ஏவாரம் மந்தந்தான். நான் பெத்துப் போட்ட ரெண்டு பயலுவலும் அவுகப்பன மாதிரியே குடிச்சுச் சீரழியுறானுக. அவிங்கனாலயும் ஒரு பிரயோசனமில்ல, ஏதோ பொம்பள புள்ளேயதான் வந்து அப்பப்ப பாத்துட்டுக் கைல கிடைச்சத கொடுத்துட்டுப் போகுதுக. இன்னவர ஒரு பயகிட்ட கைய நீட்டிக் காசு வாங்கிருப்பனா.."

"சரி அத விடு, இந்தக் கதையெல்லாம் எனக்குத் தெரியாதா, நீயும் எத்தனை தடந்தான் சொல்லுவ, நானும் எத்தன தடந்தான் புதுசா கேக்கன கேக்க. அந்தக் காலத்துல ரெண்டு வேள கஞ்சியூத்துனா போதும். பத்துப்புள்ள வளத்தாக. இந்தக் காலத்துல ரெண்டு பிள்ளை வளக்குறதே பெரும்பாடாயிருக்கு. ரெண்டு காசு சேக்குறதுக்குள்ள நாக்குத் தள்ளிப் போகுது. பணம், சேர்ர எடத்துலதான் சேர்ந்துக்கிட்டே போகுது. கஷ்டப்படுறவன் என்னைக்கும் கஷ்டப்பட்டுக்கிட்டுத்தான் இருக்கான்.

பக்கத்து வீட்டுக் காயிலாங்கடக்காரன பாத்தியா.. இப்ப நாலாவது மாடி கட்டிக்கிட்டு இருக்கான். முருங்கை மரத்துப் பழுப்பு கொட்டுது வாது நீளமா வளந்து வீட்ட மறைக்குதுன்னு ஒனக்கும் அவருக்கும் அக்கப்போரா இருக்கும், இப்ப என்ன ராசியா போயிட்டியளா, அவரு பொண்டாட்டி சொர்ணக்கா என்னமோ ஒனக்கு மீங் குழம்பு குடுக்குது, நீ அவள புண்ணியவதிங்குற, ஒன்னுமே புரிஞ்சுக்க முடியலையே."

"அட, நீ என்ன அந்தக் கிறுக்குப்பய மாதிரியே பேசுற, வீடுன்னு இருந்தா ரெண்டு மரம் வைக்கத்தான் வேணும். மரம்னு இருந்தா ரெண்டு சருகு பழுப்பு கொட்டத்தான் செய்யும். அதுலயும் முருங்கை வச்சா கையில காசு இல்லன்னாக் கூட ரெண்டு கீரையை உருவிப் போட்டுப் பொரிக்கலாம், வைக்கலாம். ரெண்டு காயப் போட்டுக் கொழம்பு வச்சா ஒரு வாரங்கூட ஒப்பேத்திரலாம். அது சாமி மாரி உசுரக் காப்பாத்தும்.

இவன் என்னமோ ஊர்ல இல்லாத பொல்லாத மாடி வீடு கட்டுறானாம். அதை மறைக்குதாம் ஏ வூட்டு மரம். எனக்குத் தெரிஞ்சு சைக்கிள்ல பழைய பேப்பர எடைக்கு வாங்கிக்கிட்டு ஈயம் பித்தளைக்குப் பேரிச்சம்பழம்னு கூவிக்கிட்டுத் திரிஞ்ச பயதேன், வேகாத வெய்யல்ல வீடு வீடாப் போய் பிளாஸ்டிக் இரும்புன்னு பெறக்கிக்கிட்டுத் திரிஞ்ச பயதேன். இன்னைக்கு என்னமோ நேரம் நல்லாருக்கு பெரியாளா

வந்துட்டான்.

சம்பாரிச்சியா, நல்லா வீட்டைக் கட்டிக்கிட்டு இருவே, சந்தோசமா. ஆரு வேண்டாம்ணா, அத வுட்டுப்புட்டு எந்நேரமும், பொழுது போனா பொழுது வந்தா ஒமுட்டு முருங்கையில இருந்து பழுப்பு கொட்டுது வாது வூட்ட மறைக்குதுன்னு எப்பப்பாரு ஏழ்ரைய கௌப்புறான். நீச்சப்பய, இருபத்தஞ்சு வருசத்துக்கு முன்னாடி எதுத்த வீட்டுக் கோமதி அக்கா, அதுவுட்டுத் தோட்டத்துல தென்னங்கன்னும் தேக்குக் கண்ணும் போடணும்னு புளியங்குடியிருப்புக்குக் கண்ணு வாங்க என்னைய கூட்டிக்கிட்டுப் போச்சு. அப்ப அங்க வாங்கிட்டு வந்தேன், ரெண்டு முருங்கை கண்ணு. வலது பக்கம் ஒன்னு இடது பக்கம் ஒன்னுன்னு வச்சு விட்டேன். வீட்டுக்கு சாமியா நிக்குது. இதுவரைக்கும் எம்புட்டோ சடை சடையா காச்சுத் தொங்கி இருக்கும். ஒரு காய வித்துருப்பனா, ஊர்ல உள்ளவங்களுக்கு எல்லாம் எனாமாத்தா கொடுத்திருப்பேன். ஏன் சொர்ணங் கூட என்னா என்ன கேட்டுக்கிட்டா மரத்துல காய் பறிக்கிறாவோ, அவ எப்ப வேணும்னாலும் பரிச்சுக்குவா. நான் அதெல்லாம் ஒண்ணுமே சொல்லக் கெடையாது. உனக்கு வீட்டை மறைக்குதா எப்ப வேணாலும் நீயே வாத கழிச்சுக்கன்னுதான் சொல்லுறேன்."

"அத விடுக்கா, சொர்ணத்தக்கா ரெண்டாவது மயனுக்கு ரொம்ப நாளா குழந்தை இல்லாம இருந்துச்சுல்ல, இப்ப டாக்டர்கிட்டலாம் போயி என்னமோ வைத்தியம் பண்ணி இப்ப உண்டாயி இருந்தாள்ள.. இங்குட்டுதான் ஆளையே காணாமே அவங்க அம்மா வீட்டிலேயேதான் இருக்கா. இப்ப வளகாப்பு பண்ணப் போறாங்களாம்கா. அதுக்குத்தான் சம்பந்தபொரத்துல இருந்து ஆராச்சும் வந்திருப்பாக. விருந்தாளு மீங்கொழம்புன்னு தடபுடலாயிருக்கு. சரி நேரமாச்சுக்கா நாளைக்கு வாரேன்" எனப் புறப்பட்டாள் விசாலம்.

மறுநாள் காலையிலேயே ராசாமணியக்காவின் மகள் வள்ளி நாட்டரசங் கோட்டையில் இருந்து வந்த கையோடு வாசலில் கொட்டிக்கிடந்த முருங்கை பழுப்புகளைக் கூட்டி அள்ளி மரத்தோடு குவிந்திருந்த மண்மேட்டைக் கொஞ்சம் கலைத்துச் சரி செய்து தண்ணீரை வாசல் எங்கும் தெளித்துக்கொண்டிருந்தாள்.

"ஏ வள்ளி உனக்கு என்ன அம்புட்டு அவசரம், காலையில இருந்து கரண்ட் இல்லாம தண்ணி இல்லாம கிடக்கு. கொஞ்சம் போலக் கெடந்த தண்ணிய கோரி வாசலெல்லாம் தெளிக்கணுமா, கரண்டு வர லேட் ஆனா என்ன பண்றது. இப்பதான ஊர்லருந்து வந்த, வந்த கையோட இதெல்லாம் செய்யணுமா, சாயந்திரமா செஞ்சா என்னா குடியா முழுகிப்போது."

"பக்கத்து வூட்ல வளகாப்பு வைக்கப் போறதா கேள்விப்பட்டேம்மா. பக்கத்து வூட்டுக்காரன் சும்மாவே ஒவ்வொரு நாளும் ஒங்கிட்ட சண்டைக்கு வாரான். அதனால பழுப்பு கூட்டிச் சுத்தம் பண்ணுனேன்.." என்று பேசிக்கொண்டிருக்கையிலே கைகளைக் குடைவதாகவும் ஒரு கையால் மறு கையை அமுக்கிக்கொண்டே பேசினாள் வள்ளி.

சற்று நேரத்திற்கெல்லாம் உள்ளங்கை இரண்டும் வீங்கி வலிப்பதாகக் கூறிப் படுத்தவளை ராசாமணியக்கா தொட்டுப் பார்க்கக் காய்ச்சல் நெருப்பாய்க் கொளுத்தியது.

ஐந்து நாட்கள் காய்ச்சல் விடவில்லை. ஆறாவது நாள் கொஞ்சம் காய்ச்சல் தணிந்த பின் தன் மகளுக்கு வீரமாகாளி கோவிலில் இருந்து தீர்த்தம் வாங்கி வந்து கொடுத்தாள் ராசாமணியக்கா.

"நீதான் என்னமோ அந்த மரத்துக்குப் பண்ணி வச்சிருக்கியோ இல்ல ஆரு பண்ணி வச்சாங்களோ தெரியல, மண்ண சரிச்சு ஒழுங்கு பண்ணதுக்குக் கையெல்லாம் கடுத்து காய்ச்ச வந்து ஒரு வழியாயிருச்சு."

"நீ யார வேணா கோலுச் சொல்லு வள்ளி, மரத்தை மட்டும் ஒன்னும் சொல்லாதே," என்று இளம் முருங்கைக் கொழுந்து தளிர்களை உடைத்து வந்து ஒரு முறத்தில் போட்டு அமர்ந்தபடி ஒவ்வொரு இலையாக ஒரு குழந்தையைக் கொஞ்சுவது போல ஆய்ந்துகொண்டு இருந்தாள் ராசாமணியக்கா.

திடுமெனப் பெருங்குரலெடுத்துக் கூப்பிட்ட பக்கத்து வீட்டுக் காயிலாங்கடைக்கார ராமையா பிள்ளை, "இந்தாரு ராசாமணியக்கா, உனக்கு எத்தனையோ தடவை சொல்லிட்டேன், இந்த முருங்கை மரத்த வெட்டு, இல்லன்னா இந்த வாதையாவது கழுச்சு விடுணு. நாளைக்கு ஒருநாள் பார்ப்பேன். நீ வாத கழிச்சு வுடலனா மொத்தமா இந்த முருங்கை மரத்தை வெட்டிப்புடுவேன், சொல்லிப்புட்டேன். அப்புறம் நீ என்னை எதுவும் எம்மேல வருத்தப்பட்டோ குத்தஞ் சொல்லியோ பிரயோசனமில்ல. இன்னும் ரெண்டு நாள்ல என் மருமகளுக்கு வளகாப்பு, சொந்தக்காரக எல்லாம் வருவாக, வீட்ட



முழுசா முருங்க வாது மறைக்குது. எப்ப பாரு பழுப்பு கொட்டி வீடே குப்பையாக் கெடக்கு, இதுல கம்புளிப்பூச்சி தொல்ல வேற வெயில் வந்துச்சுன்னா. நல்லபடியா சொல்லுறேன், மரத்தை வெட்டிப்புடு. இல்லனா நான் மனுசனா இருக்க மாட்டேன்" என்று சொல்லிக்கொண்டிருக்கையிலே சொர்ணம் வந்து "கோபப்படாதீங்க, நான் சொல்றேங்க ராசாமணியக்காகிட்ட, வாங்க" என்று அழைத்துச் சென்றாள்.

"இந்தப் பாவி, பட்டுக்கெடப்பானுக்கு, கொல்லையில போவானுக்கு என்ன ஆச்சுன்னு தெரியலயே திடீர்னு நின்னாப்ல வந்து ஆடிட்டுப் போறான். இவன் அக்கப்போரு என்னைக்குத்தான் முடிவுக்கு வருமோ, " என்று ராசாமணியக்கா புலம்பிக்கொண்டிருந்தது.

"காலாகாலத்துக்கும் பக்கத்து வீட்டுக்காரனுக்கும் நமக்கும் இந்த முருங்கை மரத்தாலேதான் சண்டை வருது. அத வெட்டித்தான் தொலையேன்னா நீயும் வெட்ட மாட்டேங்குற" என்றாள் வள்ளி.

"வள்ளி, ஒனக்கு ஒன்னும் தெரியாது, வாய மூடு. செத்துப்போன ஏ மூத்த மகதான் அதுக்குள்ள அணஞ்சு என்ன காவ காத்துக்கிட்டு இருக்கு. அது வெறும் மரமில்ல."

"சொன்னா கேக்கமாட்ட, என்னமோ பண்ணு" என அலுத்துக்கொண்டு தேநீர் தயாரித்த பாத்திரங்களைக் கழுவச் சென்றாள் வள்ளி.

மறுநாள் வளைகாப்பிற்காக ராமையா பிள்ளை வீட்டு வாசலில் முதல் நாளே பந்தல் கட்டிக்கொண்டிருந்தார்கள்.

முருங்கைப் பழுப்புகளும் குச்சிகளும் வாசலில் விழுவதைக் கண்டு மேலும் எரிச்சலான இராமையாப் பிள்ளை ஒரு அருவாளை எடுத்துக்கொண்டு மாடி ஏறினார்.

அப்போது இன்னோவா காரில் வந்து இறங்கினார் அவரது கார் ஓட்டுநர்.

"யோவ் அப்படியே மேல வாயா, இந்த வாத வெட்டுறதுக்கு."

"ஐயா புள்ளேகள ஸ்கூல்ல விட்டுட்டு வந்துடுறேயா" என்றவன் ராமையா பிள்ளையின் பேத்தியைப் பள்ளிக்கூடத்தில் விட்டுவிட்டுப் பத்து நிமிடத்தில் திரும்பி வந்தான்.

பலவந்தமாக ஒரு வாதைப் பிடித்து வெட்டிக்கொண்டிருந்த ராமய்யா பிள்ளையிடம் அருவாளை வாங்கிக்கொண்டு வெட்ட ஆரம்பித்தான் டிரைவர் முருகன். வெட்டுப்பட்ட வாது மரத்திலிருந்து கீழே விழாமல் தொங்கிக்கொண்டிருந்தது. சற்று நேரத்தில் கீழே இறங்கிச் சென்று, தொங்கிக்கொண்டிருந்த வாதை இழுத்துவிட்டார் ராமையா பிள்ளை. அது நச்சென அவர் தலையின் நடுப்பகுதியில்

விழுந்து தலையைப் பிளந்தது. மூளையிலிருந்து ரத்தம் கசிய ராசாமணியக்கா வீட்டின் வாசலிலே மயங்கி விழுந்தார். சொர்ணமும் கடைக்குட்டி மகன் வெங்கட்டும் ஓடி வந்து தூக்கி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். டாக்டர்கள் பரிசோதித்துவிட்டு அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துவிட்டதாகக் கூறிவிட்டனர்.

'முருங்கை மரம் விழுந்து ஒருத்தன் சாவானா' ஊரே ஆச்சரியமாய்ப் பேசியது. அவனுக்கு நேரம் முடுஞ்சுபோச்சு, அதான் அதப்போயித் தொட்ருக்கான் என்றும் அக்கம்பக்கத்தில் பேசிக்கொண்டனர்.

மருத்துவமனைக்குக் கொண்டு சென்ற இராமையா பிள்ளையின் உடலைச் சற்று நேரத்திற்கெல்லாம் வீட்டுக்கு எடுத்து வந்தனர். ராசாமணியக்கா அதிர்ச்சியில் இருந்து மீளாமல் தலையிலும் வாயிலும் அடித்துக்கொண்டு சவத்தைப் பார்க்க ஓடியது.

ராமையா பிள்ளையின் கடைசி மகன் வெங்கடேசன் ராசாமணியக்காவைப் பார்த்ததும் ஆத்திரத்தில் யாரும் சற்றும் எதிர்பாராத தருணத்தில் ராசாமணியக்காவின் கன்னத்தில் ஓங்கி அறைந்தான். காதிலும் மூக்கிலும் ரத்தம் சொட்ட அந்த இடத்திலேயே விழுந்தது ராசாமணியக்கா.

ஓடி வந்த விசாலமும் அதன் கணவரும் வள்ளியும் சேர்ந்து ராசாமணியக்காவைத் தூக்கிச்சென்று மருத்துவமனையில் அனுமதித்தனர்.

ஒரு வாரம் கழித்துச் சற்று காது கேட்கும் திறன் மங்கிய நிலையில் வீடு வந்து சேர்ந்தபோது வாசலில் முருங்கை மரம் அடியோடு வெட்டப்பட்டு இருந்தது. நீரகன்ற மீன் துடிப்பது போல ராசாமணியக்காவின் நெஞ்சம் துடிதுடித்தது. கண்கள் கசியவில்லை. வெட்டுண்ட மரத்தை வெகு நேரம் வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றது. மீண்டும் தன் மூத்த மகள் இறந்துவிட்டதாய் உணர்ந்த ராசாமணியக்காவின் துயரைச் சொல்ல வார்த்தையில்லை. ஒரு மாதமாக வீட்டுக்குள்ளேயே முடங்கிப் படுத்த படுக்கையாக இருந்தது.

விசாலமும் வள்ளியும் ஆறுதல் சொல்லியபடி இருந்தார்கள். எதற்கும் சமாதானமாகாத ராசாமணியக்கா "நாலாவது மாடி கட்டுனானே, கட்டி வாழ்ந்தானா? மருமகளுக்கு வளகாப்பு பண்ணத் துடுச்சானே, பேரப்புள்ளயப் பாத்தானா, தேவ்வுடியாப் பய நேத்து மொளச்ச பொடிப்பய, என்னா நெஞ்சழுத்தம் இருந்தா எம் மேல கைய வச்சிருப்பான்" என இராமையா பிள்ளையின் மகனை ஏசிக்கொண்டும் அனத்திக்கொண்டும் படுத்திருந்தது. "அது மரமில்ல, எஞ்சாமி. எனக்கொன்னுனா தச்சுருவா வந்து நிக்கும்" எனப் பலவாறாகப் புலம்பிக்கொண்டிருந்தது.

நாளுக்கு நாள் ராசாமணியக்காவின் உடல்நிலை மோசமடைந்துகொண்டே வந்தது. வள்ளியும் விசாலமும் அவ்வப்போது பாலில் நனைத்த ரொட்டித் துண்டுகளை மட்டுமே கொடுத்து வந்தனர்.

ஊருக்கெல்லாம் தருமஞ் செஞ்ச ஏ இரும்பு மரம் ஏ கொலசாமி என அனத்திக்கொண்டே கண்களை மூடி உறங்கிப்போனது.

இராமையா பிள்ளையின் கருமாதி முடிந்து பின்னொரு நாள் பிள்ளைகளுக்குத் தெரியாமல் சொர்ணம் வந்து ராசாமணியக்காவிடம் மன்னிப்பு கேட்டாள்.

"ஒரு உசுரு தங்குறதும் போறதும் நம்ம யாரு கைலயும் இல்லக்கா.. அறியாத பய. அவுக அப்பா எழப்ப தாங்க முடியாம ஒமேல கைய வச்சுட்டான். நான் மனசார மன்னிப்பு கேக்குறேன். மன்னிச்சிருக்கா" என ராசாமணியக்காவின் கைகளைப் பிடித்து அழுதாள் சொர்ணம்.

ஒரு வாரம் கழித்துச் சொர்ணத்தின் மருமகளுக்கு சிசேரியன் மூலம் ஆண் குழந்தை பிறந்ததாகத் தகவல் வந்தது.

வெகு நாட்கள் கழித்து உடல் தேறி வெளியில் வந்த ராசாமணியக்காவின் கன்னங்களை யாரோ தடவிக் கொடுப்பது போன்ற உணர்வில் கண்களை மூடி நீண்ட நெடிய பெருமூச்சை இழுத்து மெள்ள கண்களைத் திறந்தபோது வெட்டுப்பட்ட தூரிலிருந்து இரு கரங்கள் போல நீண்டு துளிர்த்திருந்தது இரும்புத் தளிர். ■

## படைப்புலகம்

மழையில் நனைகின்றது
என் வீட்டு
வாசல் மரம்
அதன் கீழே
குறுகியபடி கோழி
அதன் கீழே
ஓர் இறகு
அதன் கீழே
நானிட்ட கோலம்
அதில்தான் நனைந்து கொண்டிருக்கிறது
பல மணி நேரமாய் இம்மழை

**- சரண்யா சத்தியநாராயணன்**

நீங்க எவ்ளோ நீளம்?
எனக் கேட்டுக் கைகளால்
முழம் வைத்து
என்னை அளக்கிறாள்
குட்டிம்மா
பூவாகிறேன் நான்

**- ஷெண்பா**



அம்மாவுக்கு எல்லாம் தெரியும்
என்று முதன்முதலில்
நினைக்கும்போது
மிகச் சின்னவர்களாய் இருக்கிறோம்
அம்மாவுக்கு ஏன் ஒன்னும்
தெரியவில்லை
என்று நினைக்கும்போது
கல்லூரிக்குள் நுழைந்திருக்கிறோம்
அப்பா பேசிய வார்த்தைகள்
அம்மாவுடையவை
என்று நினைக்கும்போது
அம்மாவுக்கு வயதாகிவிடுகிறது
அம்மாவுக்கு எல்லாம் தெரியும்
என்று மறுபடியும் நினைக்கும்போது
மிக வயதானவர்களாய் இருக்கிறோம்

**- ஜே.மஞ்சுளாதேவி**

நந்தினி ஜெயபாரதி

# பெண் குழந்தைகளும் பெண்களுமே சமூகத்தின் எதிர்காலம்!



பெண் குழந்தைகள் ஒரு சமூகத்தின் வளமான எதிர்காலத்திற்கான அடிப்படையாக இருக்கின்றனர். அவர்கள் இல்லையெனில், சமூகவியல் மற்றும் பொருளாதார முன்னேற்றம் என்பது சாத்தியமில்லை. ஆனால் வரலாற்றுரீதியாக, பெண் குழந்தைகள் பின்தள்ளப்பட்டு, கல்வியற்ற நிலையில் வளர்க்கப்பட்டு, வேலைவாய்ப்புகள் மறுக்கப்பட்டு, இன்றளவும் பல இடங்களில் சமூக அடிமைகளாகவே வைக்கப்பட்டுள்ளனர். அறிவியல், அரசியல், விளையாட்டு, தொழில், மற்றும் சமூக மாற்றங்களில் பெண்கள் முக்கியப் பங்காற்றினாலும், இன்னும் பல இடங்களில் அவர்களுக்கு எதிரான துன்பங்கள் அரங்கேறிக்கொண்டேயிருக்கின்றன. இதை மாற்ற, அனைவரும் இணைந்து பெண்களுக்கு சம உரிமைகளை வழங்க வேண்டும். பெண்கள் வளர்ச்சி என்பதைச் சமூகத்தின் வளர்ச்சியாக எண்ண வேண்டும்.

ஒரு பெண் குழந்தை வளர்ச்சியடைந்து ஒரு குடும்பத்தை நடத்துபவளாகவும், சமூக முன்னேற்றத்திற்கு வித்திடுபவளாகவும் மாறுகிறாள். ஒரு பெண் கல்வி பெற்றால், ஒரு தலைமுறை கல்வியறிந்து வளர்ச்சி அடையும். பெண்கள் அனைத்துத் துறைகளிலும் முன்னேறினாலும், இன்னும் சில

சமூகங்கள் பெண்களை இரண்டாம் நிலை குடிமக்களாகப் பார்க்கின்றன.

"A society that does not respect women cannot prosper" – என்றார் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர்.

பெண் குழந்தைகள் எதிர்கொள்ளும் முக்கியப் பிரச்சனைகளில் முதலாக, பாலினப் பாகுபாடு (Gender Discrimination) இருக்கிறது. சில சமூகங்களில் எவ்வளவு உயர் பதவியில் இருந்தாலும் இன்னும் பெண்கள் ஆண்களை விடக் குறைவாக மதிக்கப்படுகிறார்கள். வேலைவாய்ப்புகளிலும், சம்பளத்திலும் சம உரிமை கிடைக்காமல் உள்ளனர். அடுத்து பெண் குழந்தை கொலை (Female Infanticide



& Foeticide). சில இடங்களில் இன்றளவும் பெண் குழந்தைகளைப் பிறப்பதற்கும் முன்பே கருக்கலைப்பு செய்வது நடந்துகொண்டிருக்கிறது. இந்தியாவில் பெண் குழந்தைகளின் பாலின விகிதம் சரிவடைந்து வருகிறது.

குழந்தைத் திருமணம் (Child Marriage). 18 வயதிற்கு முன்பு திருமணம் செய்வது ஒரு சட்ட விரோதச் செயலாக இருந்தாலும், பல கிராமப்புறங்களில் இது இன்னும் நடக்கிறது. குழந்தைத் திருமணம் அவர்கள் கல்வி மற்றும் ஆரோக்கியத்தைப் பாதிக்கிறது. பெண்களுக்கு எதிரான பாலியல் தொல்லைகள் (Sexual Violence – Harassment), குடும்ப வன்முறைகள் தொடர்ந்து அதிகரித்துவருகின்றன. பெண்கள் பொது இடங்களில் பயணிக்கும்போது கூட முழுமையான பாதுகாப்பு எங்கும் கிடைப்பதில்லை.

தேசியக் குற்றப் பதிவுகள் பணியகம் (NCRB) அறிக்கைகள்படி குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 2022ஆம் ஆண்டில் 1,62,449 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இது 2021ஆம் ஆண்டுடன் (1,49,404 வழக்குகள்) ஒப்பிடும்போது 8.7% அதிகரிப்பு. குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் 45.7% கடத்தல் மற்றும் 39.7% பாலியல் குற்றங்கள் ஆகும். தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தைகள் மீதான பாலியல் குற்றங்கள் பல மடங்கு அதிகரித்துள்ளதாகத் தகவல் அறியும் உரிமை சட்டம் (RTI) மூலம் தெரியவந்துள்ளது. இந்தப் புள்ளிவிவரங்கள், இந்தியாவில் பெண் குழந்தைகள் மீது நடைபெறும் பாலியல் வன்முறைகளின் அளவைக் காட்டுகின்றன. இதைத் தடுக்க, அரசு, சமூக அமைப்புகள், பெற்றோர், கல்வி நிறுவனங்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து செயல்பட வேண்டும். சட்டங்களைக் கடுமையாக அமல்படுத்தி, விழிப்புணர்வை அதிகரிப்பதன் மூலம், நாம் பெண் குழந்தைகளுக்குப் பாதுகாப்பான சூழலை உருவாக்க முடியும்.

இன்றைய சூழலில் பெண்கள் பல துறைகளில் சாதித்தும் வருகின்றனர். பல துறைகளில் சாதிக்க இச்சமூகம் ஒத்துழைத்தாலும் உச்சத்தை எட்டியவர்கள் ஒரு சிலரே. இன்னமும் கடைக்கோடி கிராமங்களில் தினமும் வன்முறைகளுக்கு ஆளாகும் பெண்களும் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகும் பெண் குழந்தைகளின் எண்ணிக்கையும் எண்ணிலடங்கா!

பெண்கள் கல்வி என்பது ஒவ்வொரு சமூகத்திற்கும் தேசத்திற்கும் வளர்ச்சியின் முக்கிய விசையாகச் செயல்படுகிறது. நாம் அனைவரும் பெண்கள் கல்வியை ஊக்குவிக்க முன்வர வேண்டும்.

கல்வி பெற்ற பெண்கள் சுயநினைவு மற்றும் சமூகப் பொறுப்பு பெற்றவர்களாக வளருகிறார்கள். கல்வி இல்லாத பெண்கள் பல்வேறு மூடநம்பிக்கைகளில் முடங்கிவிடும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது. கல்வியின்மை காரணமாக பெண்கள் குடும்பத்திலும், சமூகத்திலும் அடக்குமுறைக்கு உள்ளாவதற்கான வாய்ப்பு அதிகம். பெண்கள் கல்வி பெற்றால் பாலியல் வன்முறை, வேலை இடங்களில் உள்ள சமத்துவமின்மை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்வதற்கான துணிச்சல் கிடைக்கும். எடுத்துக்காட்டாக கேரளா மாநிலம் இந்தியாவில் பெண்கள் அதிகம் கல்வி பெற்ற மாநிலம், பெண்கள் மீதான குற்றங்கள் குறைந்த மாநிலங்களில் ஒன்றாக உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பெண்கள் கல்வி என்பது ஒரு சமூகத்தின் வளர்ச்சிக்கான முக்கிய சக்தியாகும். கல்வியின்மையால் பெண்கள் பல துன்பங்களை அனுபவிக்க நேரிடுகிறது. இது பெரிய பொருளாதாரப் பின்னடைவை உருவாக்கும். எனவே, பெண்கள் கல்வி முக்கியத்துவம் அடைய, அரசு, சமூகம், குடும்பம் ஆகிய மூன்றும் இணைந்து செயல்பட வேண்டிய அவசியம் உள்ளது.

பெண் குழந்தைகளை வளர்த்தெழுப்புவது ஒரு சமூக வளர்ச்சிக்கான முதலீடு என்பது மறுக்க முடியாத ஒன்று! அவர்களுக்கு உரிய உரிமைகள், கல்வி, பாதுகாப்பு, சமத்துவம் வழங்கப்பட்டால் மட்டுமே, நமது சமூகம் முன்னேற்றத்தை நோக்கிச் செல்லும். "ஒரு பெண் குழந்தையை வளர்த்தால், ஒரு தலைமுறை வளமானதாக இருக்கும்!" எனவே, பெண்களையும் பெண் குழந்தைகளையும் ஆதரித்து, புதிய சமூக மாற்றத்தை உருவாக்குவோம்!

இன்றைய சமூகத்தில் பெண்கள் கல்வியை ஊக்குவிப்பது என்பது சுமையல்ல, மாறாக ஒரு தேசத்தின் கடமையாகும்! கல்வி கற்பது மட்டும் போதுமானதல்ல இச்சமூகத்தில் சுயமரியாதையுடன் வாழ! சமூகம், குடும்பம் என இதற்குள்ளே அடைப்பட்டிருக்கும் பெண்கள் முதலில் சுயமாக இயங்கவும், சிந்திக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். தனக்கென்று தனி அடையாளத்தை உருவாக்கிக்கொள்ள வேண்டும். தனக்கு நேரிடும் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுக்க வேண்டும். துணிந்து எதையும் போராடி வெல்லக் கற்றுக்கொள்ள வேண்டும். இந்தியாவில் பெண்களின் பாதுகாப்பு, உரிமைகள், சமத்துவம் ஆகியவற்றை உறுதி செய்வதற்காகப் பல்வேறு சட்டங்கள் உள்ளன. பெண்களுக்கும் பெண் குழந்தைகளுக்கும் எதிராக நடைபெறும் குற்றங்களுக்கான சட்டங்களை அவர்கள் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இவற்றைப் பற்றிய விழிப்புணர்வு குறைவாக இருப்பதால், பல பெண்கள் தங்கள் உரிமைகளைப் பாதுகாக்க முடியாமல் உள்ளனர். எனவே, ஒவ்வொரு பெண்ணும் தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய சட்டங்களை நான் இங்கு குறிப்பிடுகிறேன்.

பெண்கள் பாதுகாப்பு மற்றும் பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டங்கள். இந்திய தண்டனைச் சட்டம் (IPC) பாலியல் குற்றங்களைத் தடுக்கும் பிரிவுகள் IPC *354* (A-D) – பெண்கள் மீதான தாக்குதல். *354*(A) – பாலியல் தொந்தரவு (Sexual harassment). *354*(B) – ஒரு பெண்ணை வலுக்கட்டாயமாக நிர்வாணமாக்குதல். *354*(C) – ஒளிந்து பார்த்தல் (Voyeurism). *354*(D) – தொடர்ச்சியாகப் பின்தொடர்தல் (Stalking). IPC *375, 376* – பாலியல் வன்முறை (Rape) தொடர்பான சட்டங்கள். *376* – குற்றவாளிக்குப் பத்து ஆண்டுகள் முதல் ஆயுள் தண்டனை வரை வழங்கப்படும். IPC *509* – பெண்களைத் துன்புறுத்தும் வார்த்தைகள் மற்றும் செயல்கள். ஒரு பெண்ணின் கௌரவத்தைக் குலைக்கும் வகையில் வார்த்தை பேசுவது, செயல்படுவது குற்றமாகும்.

வீதி, வேலை மற்றும் பொது இடங்களில் பெண்களைப் பாதுகாக்கும் சட்டங்கள். பெண்களைப் பணியிடங்களில் பாதுகாக்கும் சட்டம் (POSH Act, 2013). இது பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் தொந்தரவுகளைத் தடுக்க உருவாக்கப்பட்ட சட்டம். ஏதாவது ஒரு பணியிடத்தில் பெண்கள் பாலியல் தொந்தரவு

அனுபவித்தால், அதனை Internal Complaints Committee (ICC) யிடம் புகார் அளிக்கலாம்.

வெளிநடப்பில் பாதுகாப்பு – மெட்ரோ, பேருந்து, பொது இடங்களில் நிகழும் குற்றங்களுக்கு, சீட்டா Act (The Criminal Law Amendment Act, 2013) - பெண்களுக்கு எதிரான குற்றங்களை விரைவாக விசாரித்துத் தீர்ப்பளிக்க உதவும். ஃபஸ்ட் ட்ராக் நீதிமன்றங்கள் – பாலியல் குற்றங்கள் மீது விரைவாக தீர்ப்பு வழங்க சட்டம்.

திருமணம், குடும்பம், குழந்தைகள் தொடர்பான சட்டங்கள். குழந்தைத் திருமணம் தடுப்பு சட்டம் (The Prohibition of Child Marriage Act, 2006). 18 வயதுக்குக் குறைவான பெண்களைத் திருமணம் செய்ய வேண்டாம். குழந்தைத் திருமணம் நடந்தால், அது சட்டத்தால் செல்லாது. திருமணத்தில் பெண்களுக்கு உரிமைகள் – Hindu Marriage Act, 1955. திருமணத்தில் பெண்களுக்குச் சம உரிமை, ஆதாயங்கள், குடும்பச் சொத்தில் பங்கு, விவாகரத்துக்குச் சட்டப் பாதுகாப்பு வழங்கும் சட்டம். Maternity Benefit Act, 1961. கர்ப்பிணிப் பெண்களுக்கு 26 வாரங்கள் ஊதியத்துடன் கூடிய விடுப்பு வழங்கப்பட வேண்டும். நிறுவனங்கள் இது வழங்கத் தவறினால், பெண்கள் புகார் அளிக்கலாம்.

சொத்து உரிமைகள் மற்றும் நிதி பாதுகாப்புச் சட்டம். பெண்களுக்குச் சொத்து உரிமை – Hindu Succession Act, 1956. பெண்கள் குடும்பச் சொத்தில் சம உரிமை பெறுவர். அவரது கணவர் இறந்தாலும், பிள்ளைகள் மற்றும் தாய்க்குச் சொத்து உரிமை வழங்கப்படும்.

வங்கிக் கணக்குகள் மற்றும் சொத்துப் பாதுகாப்பு. பெண்கள் தனியாக வங்கியில் கணக்குகள் தொடங்கலாம். பெண்களுக்குத் தனிச் சொத்து உரிமை உள்ளது (அவரது சம்பளம், வாங்கிய வீடு, நிலம்).



ஆணவக் கொலை, விபச்சாரம் மற்றும் பெண்களை விற்கும் பிரச்சினைகள் தொடர்பான சட்டங்கள். நவஜோதி சட்டம் (Dowry Prohibition Act, 1961). திருமணத்திற்கு முன்பும், பிறகும், மணமகளிடமிருந்து பந்தனி (Dowry) வாங்குவது சட்டவிரோதம். பெண்களை விற்கும் மற்றும் தொழில்வழி பலாத்காரம் – Immoral Traffic Prevention Act, 1956. பெண்களை விற்பனை செய்வது, விபச்சாரத்திற்குப் பலவந்தமாக ஈடுபடுத்துவது குற்றம்.

பெண்கள் தொழில் வாய்ப்புகள் பெற சட்டம் உறுதிப்படுத்துகிறது. பெண்களுக்கு அரசாங்க உதவிகள் வழங்கும் சட்டங்கள்-பெண்களுக்கு இலவசக் கல்வி மற்றும் வேலைவாய்ப்புத் திட்டங்கள். பெண்கள் கல்விக்காக 'பேட்டிக்கப் பயிற்சி திட்டம்'. மகளிர் உதவித் தொகை திட்டங்கள் – தனியாக வாழும் பெண்களுக்கு உதவித்தொகை. முப்பது நாட்களுக்கு வேலை வழங்கும் சட்டம் – MGNREGA Act, 2005. பெண்களுக்குக் கிராமப்புற வேலைவாய்ப்பில் 33% இடஒதுக்கீடு. குறைந்தபட்ச ஊதியத்துடன் வேலை கிடைக்க இது உதவும்.

பெண்கள் சட்ட உதவி பெறுவது எப்படி? 1091 – மகளிர் உதவி மைய தொலைபேசி எண். 181 – பெண்கள் பாதுகாப்பு மைய உதவி எண். 112 – அனைத்து அவசர சேவை எண்கள் (Police, Ambulance, Fire). POSH Act - ஐப் பாதுகாக்க 1441 என்ற எண்.

பெண்களுக்கு அவர்களது உரிமைகள், பாதுகாப்பு மற்றும் சமத்துவம் குறித்து விழிப்புணர்வு அதிகமாக இருந்தால், அவர்களுக்கான நீதி, பாதுகாப்பு மற்றும் சமநிலையான சமூகத்தை உருவாக்க முடியும். ஒவ்வொரு பெண்ணும் இந்தச் சட்டங்களைப் பற்றித் தெரிந்துகொண்டு, தன்னைக் காத்துக்கொள்ள வேண்டும்.

"A woman who knows her rights is a woman who can fight for her freedom!"




# பயணம்

ரயில் புறப்பட ஐந்தே நிமிடங்கள் இருந்த நிலையில் ஓடிச் சென்று ஏறினேன். நல்லவேளை செகண்ட் ஏஸி என்பதால் முன்னாலேயே வந்துவிட்டது. நான் ஏறும்போது மட்டும் ரயில் சரியான நேரத்துக்குக் கிளம்புகிறது என்று நினைத்தபடி லேசான பதற்றத்துடன் எனது இருக்கையைத் தேடி அமர்வதற்கும் நீண்ட ஹார்ன் அடித்து ரயில் புறப்படுவதற்கும் சரியாக இருந்தது.

எனக்கு எதிரே ஒரு வடக்கத்திப்பெண். நடுத்தர வயதிருக்கும். சிநேகமற்ற புன்னகை. நானும் ஒரு அரைப் புன்னகையை அவளுக்குப் பதிலாகத் தந்துவிட்டு என்னுடைய பெட்டியையும், லாப் டாப் பேகையும் ஒரு ஓரமாக வைத்துவிட்டுத் தண்ணீர் எடுத்துக் குடித்தேன். தண்ணீர் பாட்டிலை வாய் வைத்துக் குடித்ததைப் பார்த்து அந்தப் பெண் முகத்தில் தெரிந்த அதிருப்தியைப் பார்த்து எனக்குத் திருப்தியாக இருந்தது. 'பிருந்தா எத்தனை தடவை சொல்றது, தண்ணியைத் தூக்கிக் குடின்னு' அம்மாவின் குரலை அந்தப் பெண்ணின் முகத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தேன். அம்மா.. அவளை நினைக்கும்போதே முன்பெல்லாம் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தோடும். அவளது உருவத்தை, வயதையொத்த யாரைப் பார்த்தாலும் மனம் பரிதவிக்கும். இதோ என் எதிரில் அமர்ந்திருக்கும் இந்தப் பெண்ணுக்குக் கூட எங்கேயோ என் அம்மாவின் சாயல் உள்ளது. உண்மையில் அப்படி இல்லையென்றாலும் அப்படி நினைப்பதில் ஒரு ஆறுதல் கிடைக்கும் எனக்கு.

அவள் என் பதினாறாவது வயதில் ஒரேயடியாக விட்டுவிட்டுப் போவாள் என்று தெரிந்திருந்தால் அவளுக்குப் பிடித்த வகையில் சொல் பேச்சு கேட்டு இருந்திருக்கலாம். மன திருப்தியுடனாவது போயிருப்பாள். எதற்கெடுத்தாலும் சண்டை போட்டும், எதிர் வாதம் புரிந்தும் சில சமயம் தெரியாமலும் பல சமயம் தெரிந்தேயும் அவளது மனதைக் கஷ்டப்படுத்தியிருக்கிறேன். என்னுடைய பிரச்சனையாக அம்மா குறிப்பிடுவது எனது திமிரை. அம்மாவுடனான வாக்குவாதத்திற்குப் பிறகு பேசாமல் கூட சில நாட்கள் வீம்பாக இருப்பேன். இத்தனை அகம்பாவம் கூடாதுடி என்று அவள்தான் கீழிறங்கி வருவாள். அந்தக் காலக்கட்டத்தில் எனக்கு ஏன் இத்தனை கோபம், இவ்வளவு ஆவேசம் என்று இன்றுவரை புரிந்ததில்லை.

அம்மாவின் நினைவு இப்போதெல்லாம் வரும்போது கண்ணீர் பெருக்கெடுப்பதில்லை. மாறாக, நீள் நினைவுகளுக்குள் மனம் சிக்குண்டு அவள் சார்ந்த சிறிய விஷயங்களையும் மனம் அகழ்வாராய்ச்சி செய்ய ஆரம்பிக்கிறது. இரண்டு தினங்களுக்கு முன்னால் நள்ளிரவு இருக்கும். உறக்கத்தின் பிடியில் இருந்து லேசான விழிப்பு ஏற்பட்டது. இருள் சூழ்ந்த எனதறையில்

என் கால்மாட்டருகே யாரோ நின்றபடி என்னையே பார்த்துக்கொண்டிருப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. ஒரு நொடிதான். உடல் முழுக்கச் சிலிர்த்துவிட்டது.

தலைமாட்டில் வைத்திருந்த அலைபேசியைத் தடவி எடுத்து அதிலுள்ள விளக்கைப் போட்டுப் பார்த்தேன். கட்டிலில் அமர்ந்திருந்த என்னுடைய நிழல் விட்டம் வரை நீண்டு என்னையே பார்த்துக் கேலி செய்தது போலிருந்தது. விளக்கைப் போட்டு பாத்ரூம் சென்றுவிட்டுத் திரும்பத் தூங்க எத்தனித்தேன். புரண்டு புரண்டு படுத்து வெகுநேரம் கழித்துத்தான் உறங்கினேன்.

அம்மா இறந்து பதினெட்டு வருடங்களாகிவிட்ட நிலையில் அவள் வந்திருப்பாள் என்று நினைப்பது அபத்தம். மேலும் ஆவி ஆன்மா போன்ற விஷயங்களில் எனக்கு நம்பிக்கை இருந்ததில்லை. அப்பாவிடம் இதுபற்றிப் பேசினால் அவர் மனம் வருந்தக்கூடும் என்று நினைத்ததால் பேசாமல் இருந்துவிட்டேன்.



அம்மா அப்பாவை திருமணம் செய்துகொண்ட கதையைப் பலமுறை கூறியிருக்கிறாள். அவள் படித்த கல்லூரியில் அவர் விரிவுரையாளர். அம்மா கணிதப் பாடம் எடுத்திருந்தாலும், வேதியியல் துறை பேராசிரியரான சந்திரசேகரை எப்படி நேசித்தாள் என்பதை இருவரும் ஒருசேரச் சொல்லும்போது அந்தக் கதை ஒவ்வொரு சமயமும் சுவாரஸ்யம் கூடிக்கொண்டேயிருக்கும். இவர் பாடம் எடுக்கும் பாங்கை எட்ட இருந்து பார்த்த அம்மாவுக்கு அவரிடம் பேச ஆசை. ஆனால் தயக்கமும் பயமும் இருந்ததால் பார்ப்பதுடன் நிறுத்திக்கொண்டார். ஆனால் ஒருகட்டத்தில் இருவிழிகள் நான்காயின. இருவருக்கும் கெமிஸ்ட்ரி ஒத்துப்போனதால் பேசிப் பழக ஆரம்பித்துத் திருமணத்தில் தொடர்ந்தது. நான் எவ்வளவு நினைத்துப் பார்த்தாலும் இருவருக்கும் பெரிய சண்டை எதுவும் வந்ததில்லை. சின்ன சின்ன ஊடல்கள், குரல் உயராத வாக்குவாதங்கள் அவ்வளவே.

அம்மாவை நினைத்ததும் அவளது காதல் கதை மட்டுமல்ல, அவளது வாசனையும் சட்டென்று நினைவுக்கு வந்து போனது. பச்சை மருதாணி இலையை அரைத்து அதில் சற்று மஞ்சள், ஜவ்வாது மற்றும் கற்பூரத்தைக் கலந்தால் எப்படியொரு வாசம் இருக்கும்? அப்படியொரு விசித்திரக் கலவையான மணம் அவளிடமிருந்து எழும். இப்படித்தான் நான் நினைவின் சுகந்தத்தில் சிலசமயம் நிஜத்தை இழப்பதுண்டு. எதிர் சீட்டில் ஒரு இளைஞன் இருந்திருந்தால் எப்படி இருந்திருக்கும். பேசியிருப்பேன். குறைந்தபட்சம் அவனது கவனத்தைத் திசை திருப்ப முயற்சித்திருப்பேன்.

சிவப்பு நிற சுடிதாரும் மஞ்சள் நிறத் துப்பட்டாவும் அணிந்திருந்த எதிர் இருக்கைக்காரி எழுந்து ரெஸ்ட்ரூம் சென்றாள். இவளிடம் பேசினால் நிச்சயம் பதில் வராது என்று அனுமானித்ததால் நான் அவள் திரும்பி வந்ததைக் கண்டுகொள்ளாதவள் போல் இருந்துவிட்டேன். என்னுடைய இடத்தில் வசதியாக அமர்ந்து ஐபாடில் நெட்ஃப்ளிக்ஸைத் திறந்தேன். பட்டியலில் சேமித்திருந்த ஆங்கிலப் படத்தைப் பார்க்கலாம் என்று அதைத் தொட்டதும், உள்ளே செல்லாமல் திரும்பி வந்தது. விபின் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

சதாசர்வ காலம் எதாவது அனிமே பார்த்து விழிகள் சிவக்க அரைத் தூக்கத்துடன் குட் நைட் எது குட் மார்னிங் எது என்று தெரியாமல் வாழ்ந்துகொண்டிருக்கும்

புத்துலகப் பிள்ளை அவன். அவனுடைய உலகம் மிக எளிமையானது. ஒரு ஐஃபோன், ஐபேட் எப்போதும் பொழுதுபோக்க அனிமே திரைப்படங்கள், அவ்வப்போது வரும் எக்ஸாம்கள். எட்டாம் வகுப்பு படிப்பவன். ஆனால் பேச்சைப் பார்த்தால் நூற்றுக் கிழவன் தோற்பான். எல்லாவற்றிலும் ஒரு அவநம்பிக்கை, எதிலும் அவசரம் என்று அவன் போன்ற பையன்களைப் பார்க்கையில் அடுத்த தலைமுறையை நினைத்தால் கொஞ்சம் பகீரென்றுதான் இருக்கும்.

மகள் இளையவள், அவளுக்கு இவனே பரவாயில்லை என்று தோன்றும்படியாக அவள் அப்பாவுடன் சேர்ந்து போடும் டாட்ஸ் பிரின்சஸ் ரீல்கள். இன்ஸ்டாகிராமில் யாரும் பார்க்கவில்லையென்றாலும் விடாப்பிடியாகப் போட்டுக் குவிப்பவள்.

இவர்களைச் சொல்லிக் குற்றமில்லை, அந்த மெடா ஏஐதான் எல்லாவற்றுக்கும் காரணம். தெரிய வேண்டிய விஷயங்கள் இவர்களுக்குத் தெரிவதில்லை. சொந்தக்காரர்கள், பக்கத்து வீட்டார்கள் தேவையில்லை. நல்ல உணவு பிடிப்பதில்லை. அரைவேக்காட்டுப் புரிதல்கள், தேடல் ரசனை என எதுவும் இல்லாமல் இரவல் அறிவில் சவாரி செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். இவர்களைச் சொல்வானேன், எனக்கும் சட்டென்று ஒரு ரிப்போர்ட் தயார் செய்ய ஏஐ எனும் கலியுகத் தெய்வம் தேவைப்படுகிறது. ஒருவேளை கல்கி அவதாரம் என்பது இந்த டெக்னாலஜிதானோ என்று எதை எதையோ யோசித்தபடி, நான் மெல்ல எழுந்து ரெஸ்ட்ரூம் சென்றேன்.

ரயில் பயணங்களை எந்தளவுக்கு நான் விரும்புகிறேனோ அதை விட அதிகளவு வெறுப்பு அதன் டாய்லெட்டைப் பயன்படுத்தும்போது ஏற்படுகிறது. கார், பஸ் பயணங்களில் கூட சுத்தமான கழிப்பறைகள் கிடைப்பதுண்டு. ஆனால் இந்த ரயில்களில் இருக்கும் கழிப்பறைகள் சுத்தமாக இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி வெறுப்பேற்றும்.

எரிச்சலுடன் உள்ளே நுழைந்ததும் குப்பென்று சிகரெட் வாடை வீசியது. எதிர் இருக்கைப் பெண் சென்றுவிட்டுச் சற்று நேரத்திலேயே நான் வந்துவிட்டேன். அப்படியென்றால், அவள்தான் புகைத்திருக்கிறாள். அவளைப் பார்த்தால் நாலாயிரத் திவ்யப் பிரபந்தத்தைத் தலைகீழாகச் சொல்பவள் போல் இருக்கிறாள். டோன்ட் ஜட்ஜ் எ புக் பை இட்ஸ் கவர் என்று சும்மாவா சொல்கிறார்கள்.

நான் வேலையை முடித்துவிட்டு என் இருக்கைக்கு வந்து பொத்தென்று அமர்ந்தேன். அவளைப் பார்ப்பதைத் தவிர்க்கவே முடியவில்லை. அதே சிரிப்பற்ற முகத்துடன் தன் பையில் எதையோ தேடிக்கொண்டிருந்தாள். இன்னொரு சிகரெட்டைத் தேடுகிறாள் போலும். அவள் உதடுகளைக் கவனித்தேன். ரோஜா நிறத்தில் நன்றாகத்தான் இருந்தது.

திரையரங்கில் படம் போடுவதற்கு முன் போடும் புகை பிடிக்காதீர்கள் என்ற விளம்பரம் நினைவுக்கு வந்தது. முதல் நாள் முதல் காட்சி திரைப்படங்களைப் பார்க்கும்போது ஆசையாகப் படத்தின் பெயரை ஃபோட்டோ எடுக்கலாம் என்று நினைத்து அலைபேசியைக் கையில் பிடித்தபடி இருக்க, இவர்தான் என்று ஒரு குரல் ஒலிக்க பின்னணியில் படு பயங்கரமான பாதிப்புடன் ஒருவர் தோன்றுவார். அடுத்த நொடி என் செல்ஃபோனைப் பையில் வைத்துவிட்டுக் கண்களை இறுக்க மூடிக்கொள்வேன். படம் தொடங்கியவுடன்தான் கண்களைத் திறப்பேன்.

எதிர் சீட் பெண் இப்போது தேடிக்கொண்டிருந்த பொருளைக் கண்டுபிடித்து வெளியே எடுத்துவிட்டாள். அதுவொரு கத்தி. அதைப் பார்த்ததும் எனக்குப் பதறியது. அடிப்பாதகி இதை எதுக்கு எடுக்கிறாள் என்று நினைத்தேன். கவரிலிருந்து இரண்டு ஆப்பிள்களை எடுத்து அழகாக வெட்டினாள். தனது சாப்பாட்டுப் பையைத் திறந்தாள். மணக்க மணக்க சப்ஜி மற்றும் நெய்யில் சுட்ட பூரி. எப்படி நெய் என்று கண்டுபிடித்தேன் என்றால் என் மூக்கு அப்படிப்பட்டது.

சின்ன வயதில் பள்ளி முடிந்து வீடு திரும்பும்போது தினமும் மாலை அம்மா ஏதாவது ஒரு பண்டம் செய்து வைத்திருப்பாள்.

வீட்டருகே வரும்போதே சொல்லிவிடுவேன், இன்னிக்கு உக்காரை, இன்னிக்குத் திரட்டுப்பால், இன்னிக்கு பஜ்ஜி என்று. உடன் வரும் தோழி சுதாவுக்கு என்னைப்பற்றித் தெரியும். எனவே பேசாமல் வருவாள். எதிர் இருக்கைப் பெண் இப்போது என் முகத்தைப் பார்த்து லேசாகப் புன்னகைத்தாள்.

'கொஞ்சம் சாப்பிடறீங்களா?' என்றாள் அழகான ஆங்கிலத்தில்.

'கேட்டதே சாப்பிட்ட மாதிரி இருக்கு, நன்றி' என்று என் உதடு புன்முறுவலுடன் மறுத்தாலும், மூளை வெட்கம் பார்க்காமல் வாங்கிக்கோ என்றது. அவளே ஒரு சிறிய தட்டில் இரண்டு அழகான அளவான பூரிகளை வைத்து அதன் நடுவே உருளைக்கிழங்கு மசாலாவை வைத்தாள், ஓரத்தில் சப்ஜியும் வைத்து, இரண்டு துண்டு ஆப்பிளை வைத்துவிட்டு, 'பரவால்ல சாப்பிடுங்க' என்றாள்.

எனக்குள் ஏதோவொன்று உடைந்து லேசாகக் கண்ணில் நீர் துளிர்த்தது. அன்புடன் உணவு தரும் யாருமே அம்மாக்கள்தான். சூரியகோமதியை ஒரு நொடி நினைத்தேன். அம்மாவின் அழகான பெயர் அது.

வாயில் போட்டதும் பாகாய்க் கரைந்தது. அவள் இன்னும் இரண்டு பூரிகளை என் தட்டில் வைத்தாள். அவளும் சாப்பிட்டு முடித்துக் கையைக் கழுவினாள். அந்தத் தட்டைக் கழுவ எழுந்த என் கைகளைப் பிடித்து உட்கார வைத்து அதை வாங்கிக்கொண்டாள்.

மறுபடியும் எனக்குள் ஏதோ ஒன்று உடைந்தது. நான் இவ்வளவு இளகியவளாக இன்னும் இருக்கிறேன், என் மென்மனதை மற்றும் மென் உணர்வுகளைத் தக்க வைத்துக்கொண்டுள்ளேன் என்பதை நினைத்ததும் சந்தோஷமாக இருந்தது. அதே சமயம் எப்போதும் ஈ என்று பல்லைக் காட்டிச் சிரிக்கும் என் இயல்பினால் சச்சின் பட நாயகி ஜெனிலியாவைப் போல என்று யாரும் நினைத்துவிடக் கூடாது என்பதிலும் அக்கறையுடன் இருப்பேன்.

'லைட் தேவையா?' என்று கேட்டாள் எதிர் இருக்கைப் பெண், அவள் பெயர் பிரியங்காவாம். பிரியமாக இருக்கிறாள், பொருத்தமான பெயர்தான். 'ஆஃப் பண்ணிடலாம்' என்று சொன்னேன். விரைவாகத் தன் படுக்கையைத் தயார் செய்தவள் சட்டென்று ஒரே நொடியில் பாக்ஸர் டீஷர்ட்டுக்கு மாறினாள். கழற்றிய ஆடைகளை ஒரு பையில் திணித்துவிட்டுப் படுக்கையில் விழுந்தாள்.

அவளுடைய செய்கைகள் எல்லாம் இயல்பாக, சற்று நளினமாக இருந்தன. இதே அவள் எனக்கு உணவு பரிமாறும் முன் செய்திருந்தால் என் மனம் என்ன நினைத்திருக்கும், வெட்கம் கெட்டவள் என் எதிரே உடை மாற்றுகிறாள், அதுவும் பாக்ஸர் என்று நினைத்திருப்பேன். ஒரு மனிதரைப் பற்றிய நமது பார்வைகள் எதை வைத்துத் தீர்மானிக்கப்படுகின்றன! எவ்வளவு எளிதாக ஒருவரை நாம் எடை போட்டுவிடுகிறோம் என்று நினைத்தேன்.

இது ஒரு நோய்க்கூறு. ஒருவிதமான ஆதிகாலப் பழக்கம். காலம் காலமாக பெண்கள் மேல் சுமத்தப்பட்ட ஒரு செயல், புரணி பேசுதல் - காஸிப்பிங், பொழுதுபோகவென்று ஆரம்பிக்கும் அந்தப் பேச்சு சுவாரஸ்யம் உனக்கு அவளப் பத்தி தெரியாது, அவிசாரி, எத்தனை பேர வைச்சிருக்கா தெரியுமா என்று தொடங்கி அவள் வம்சாவளி மொத்தத்தையும் வசைபாடித் தீர்க்கும் ஒரு குரூரம். உண்மையா பொய்யா என்று தெரியாமலேயே வார்த்தைகளால் குழிதோண்டி உயிருடன் புதைப்பதைப் போன்றது. வீடு, திருமணக் கூடம், கோயில், அலுவலகம் என்று நீண்டிருக்கும் தளங்கள் இப்போது சோஷியல் மீடியாவில் தொடர்கின்றன. பேட் மவுத்திங் பரவால்ல, எல்லாரும் பண்றதுதானே என்று அங்கீகாரம் வேறு. ஃபேஸ்புக்கில் வம்பளக்கும் கூட்டத்தில் பெரும்பான்மையானவர்கள் ஆண்களும் என்பது வேடிக்கையான விஷயம். யார் பேசினால் என்ன, இதில் என்ன ஜெண்டர் வேண்டிக் கிடக்கிறது.

அவள் பெயரைத் தவிர வேறு எந்த விஷயத்தையும் கேட்கக் கூடாது என்று நான் முடிவெடுத்த தருணத்தில் பிரியங்காவிடமிருந்து மெல்லிய குறட்டையொலி கேட்டது.

■

சுயம் வெறுத்த நாளின்
இறுதியில்
மனம்
உடைந்து சிதறுகின்றன
சிறு துண்டுகளாக
இறப்பு மட்டுமே வாழும்
பூமியைத் தேடி அலையும்
பிம்பத்தின் முகத்தில்
மௌன அழுகையின் ரேகைகள்
சமாதானங்களும்
ஆறுதல்களுமின்றி
காற்றுவெளியில்
உயிர் உருகும் சத்தம்
எனக்கு மட்டுமே கேட்கிறது
அது நான் இல்லை
என் ஆன்மா
என்பது யாருக்கும் தெரியவில்லை

– லக்ஷ்மி

பகல் முழுதும்
சளசளத்து ஓய்ந்த
சொற்கள்
குவிந்து கிடக்கின்றன..
யாமத்தின் நிசப்தத்தில்
நிலவின் மௌனமும்
கடலலையின் இரைச்சலும்
தவிர..
நாவு ஓய்வெடுக்கையிலும்
மனம் மட்டும்
புரண்டு புரண்டு படுக்கிறது
கர்ப்பிணி போல..
உதிர்த்துப் போட்டவையும்
பெற்றுக் கொண்டவையும்
மாறி மாறி உரசிப் பார்க்க
தனக்கான தராசில்
நிறுத்துக் கூர்தீட்டி
மீண்டும் உத்வேகமாய்
மறுநாள் வீரியமாய்
எழுந்து கொள்கின்றன.

– மதுரா

விஜயராணி மீனாட்சி





# நினைவுகளை மீட்கும் கவிதைகள்

நூல் : கொஞ்சம் பக்கத்தில் நில்

ஆசிரியர் : வி.வி.கலைச்செல்வி

தலைப்பே சொல்லுகிறது, கவிஞரின் நேச மனதை. மிக மிக மென்மையான வார்த்தைகளால் கோர்த்தெடுத்த பெரும்பாலான கவிதைகள் நிறைவுச் சொல்லில் ஆணியடித்தாற்போல அதிர்வு ஏற்படுத்துகின்றன.

கவிஞர்களுக்கே உரித்தான முறையில் எல்லாவிதமான வாழ்வியல் உணர்வுகளும் வரிசைகட்டி வருகின்றன. பறவைகளும் கடவுளும் பூனையும் தேநீரும் என்று அவற்றையும் விட்டுவைக்கவில்லை. பக்கத்தில் நிறுத்தி வைத்துக்கொள்கிறார்.

அம்மாச்சியோடு பால்யத்தைக் கழிக்கக் கொடுத்து வைத்த எழுபதுகளின் அல்லது எண்பதுகளின் பிள்ளைகள் அந்த நினைவுகளைப் பொக்கிஷம் போல மீட்க இவ்விதமான கவிதைகளால்தான் முடிகிறது.

ஒவ்வொரு கவிதையுமே நாமும் கடந்து வந்த பாதையையோ வாழ்க்கையையோ நினைவுக்குக் கொண்டுவருகின்றன. இதில் முறுக்கிப் பிழியும் கடின மொழியெல்லாம் இல்லை. கல்யாண்ஜி கவிதைகள் போல இயல்பாக இருக்கின்றன. அதனாலேயே மனதுக்குப் பக்கத்தில் வந்து நின்றுகொள்கிறது.

சின்னஞ்சிறு உயிரின் மீது கட்டவிழ்க்கப்படும் வன்முறையை இரண்டு கவிதைகளில் சொல்கிறார். அவற்றின் கடைசிப் பத்தி இப்படி காறி உமிழ்கிறது..

ஒருத்தி வீட்டிலுள்ள எல்லோருக்கும்
வேண்டிய டீயை வாங்கச் சென்றவள்...
ஐந்தாறு பேரில்
ஒருத்தியாய்த் தூக்கு நீட்ட

அத்தனை பேரையும்
அனுப்பிவிட்டு
கடைசியாய்க் கை தடவி
முதுகு நீவி
தூக்கு கொடுக்கிற சாக்கில்
உள்ளங்கை அழுத்தும் நாயரை
துப்பத்தான் தோணுகிறது
எனக்கு
ஆனாலும் டீ வேண்டும்
அப்பாவிற்கும்
அம்மாவிற்கும்
அண்ணனுக்கும்
தூ டீயாம் டீ.

இப்படி முடிகிறது கவிதை.

அடுத்ததாக,

வன்மத்தின் குழியில்
சறுக்கிச் சாய்ந்த
அம்முக்குட்டியின்
அம்மாவென்ற ஈனஸ்வரம்
கல்பாறை தொட்டு நசுங்கி
அனாதையாய்த் திரும்புகிறது
பொத்தலாகிவிட்ட வாழ்வு
இனி எப்போதும்
சாபம்தான்...

மறதி பற்றி ஒரு கவிதையில் மறதிக்காக அது நல்லனவற்றின் பொருட்டு அம்மா விசனப்பட்டாள் என்றால், நல்லன அல்லாதவற்றுக்கு (எனக் கொள்ளவேண்டும்) மறதி ஒரு மருந்து உனக்கு வாய்த்திருக்கிறது, ஏற்றுக்கொள் என்கிறாள் அம்மம்மா. மேலும் மறதி நல்லது இன்னொரு நேசித்தலுக்கு.

ஆசீர்வாதம் கிடைக்கப்பெற்ற இரண்டு கவிதைகள்...

ஒன்றில்,

எடைக்கும் கூடுதலாய்
இரண்டு கனிகளிட்டு
கன்னம் வழித்து
"நல்லாயிரு தாயி" என்கிறாள்
நிறை மனசாய்
கருணையின் ஆசீர்வாதம்
இப்படி லேசாகிப்போகிறது..


ஆனால் இதில் பார்த்தால்,

சட்டென்று
நெற்றி வகிட்டில் கைவைத்து
ஆசீர்வதித்துவிடுகிறாள்
அந்தத் திருநங்கை
ஆசீர்வதித்துவிட்டு
காசு கேட்க வேண்டும்
ஆசீர்வதித்தால்
காசு தர வேண்டும்
பொதுவாகப் போதிக்கப்பட்டது
இப்படித்தான்
இரண்டுமே நடக்கவில்லை
இப்போது ஓர் ஆசீர்வாதத்திற்கு
கடன்காரி நான்.

இந்த வரிகளில் கனம்கூடிப் பாரமேற்றுகிறதல்லவா?

மழை பற்றிய சில கவிதைகளில், மண்ணுக்குப் போனதை மண்ணாகிப் போனதை மறுபடி வரும் என்கிற பக்குவம் தெரிந்துவைத்திருக்கிறார். அப்படியே மதில்மேல் அமர்ந்திருக்கிற பூனையொன்றைக் கொஞ்சிப்போகும் மழை






விட்டுவிட்டு நனைப்பதைக் கவிதையாக்கிப் போகிறார்.

மழையில் நனைந்து வரும் மகள் சுடிதாரின் முனை சுருட்டி இடக்கையால் பிழிகையில் வீட்டுக்குள் மழை கொண்டு வருகிறாள். மகளெனும் தேவதை மழை மட்டுமா கொண்டு வருவாள்? கைப்பிடி மணல் அள்ளிவந்து அலையடிக்கும் கடலையும் அல்லவா கொண்டு வருகிறாள்.

புதுவீட்டுக்குக் குடிபோன தோழி ஒருத்தியின் இடம்பெயர்தலுக்கான முகத்திலறைகின்ற நிஜம் இப்படிப் பதிவாகிறது ஒரு கவிதையில்..

தயங்கித் தயங்கிச் சொன்னாள்
என்னை மட்டும் எடுத்து வர
கொஞ்ச நாளாகும் என்று

அம்மம்மா கடனுக்காகப் போடும் முடிச்சு கடைசிவரை கிடையில் கிடக்கையிலும் அவிழாமல் இருக்கும் நிதர்சனத்தைச் சொல்லும்போது முடிச்சு போல மனமும் இறுக்கிக்கொள்கிறது.

பேருந்துப் பயணத்தில் நிகழும் அத்துமீறலை மூன்று தலைமுறை நடவடிக்கையாய்க் கடத்துகிறார் கவிஞர் கலை. மூன்றாவது தலைமுறையான மகளுக்கு இப்படி அறிவுறுத்துகிறார்..

முதல் முறையிலேயே
அறைந்து
முகத்திரை கிழித்து
புறந்தள்ளிவிடு..

இதே வரிகளை இன்னொரு கவிதையின் நாயகி காளிக்கும் சொல்ல வேண்டும் போலத் தோன்றுகிறது.. எப்போதும் சிரிப்பே வராத உக்கிரம் கொண்ட காளி பெண்ணாக ஆசைகொண்டு வெளியே நடக்கிறாளாம்.

உதிர்கிறது காளி என்பதும்
காளியாகி நின்றதும்
காளிதான் என்பதும்
வாசற்படி தாண்டியவளுக்கு
முதன்முறையாக பயம் வருகிறது.

என்ன சொல்ல சமூகத்தை? காளிக்கே இந்த கதியா? என்று சலிப்பேற்படுகிறது.

மூன்று தலைமுறையாய்ப் பெண்பிள்ளை இல்லாத வீட்டில் உருவாகும் அல்லது உருமாறும் மூன்றாம் பாலினப் பெண்ணாகியவளை ஏற்றுக்கொள்ளும் நிலை இங்கு இயல்பாகிப்போனால் எவ்வளவு நன்றாக இருக்கும்?!


"பக்கத்திலும் பக்கத்திற்குக் கொஞ்சம் தூரத்திலும்" எனும் தலைப்பிட்ட ஒரு கவிதையில் மலையை நோக்கிச் செல்லும் பயணம் பற்றி வாசிக்கையில் உமா மகேஸ்வரி அவர்களின் மலையேற்றம் என்ற சிறுகதையொன்றின், சிகரமென்பது உயர்ந்த புள்ளியன்று; அனைத்தையும் தாழ்த்துகிற உன்னத நிலையுமல்ல, அது சமதளம் என்ற வரிகள் நினைவில் வந்துபோயின.

இப்படியாக எல்லாக் கவிதைகளுமே கொஞ்சம் பக்கத்தில் நின்று மனதை மென்மையாக வருடுகின்றன.

■

கட்டுரை

கனி விஜய்



# அடுத்து என்ன?

"To write is human, to receive a letter : Divine!" - Susan Lendroth.

நவீனமயமாக்கப்பட்ட இன்றைய சூழலில், தொலைத்தொடர்பு என்பதெல்லாம், ஒரு பொருட்டே இல்லாமல் போனது! நினைத்தவுடன் பார்த்துக்கொள்ளலாம், வீடியோ கால் பேசலாம், மணிக்கணக்கில் ஆடியோ கால் பேசலாம், எதுவும் சாத்தியம்தான்.

அறிவியல் வளர்ந்திருக்கிறது! விஞ்ஞானம் மாபெரும் படையெடுத்திருக்கிறது! என்ன வந்த போதிலும் ஒரு சுவாரஸ்யம் குறைந்துகொண்டே போவதை எத்தனை பேர் கவனித்திருக்கிறீர்கள்!

இப்பொழுது அலைபேசி வைத்திருக்கிறீர்கள். ஒரு குறுந்தகவல் வாட்ஸ்அப்பில் அனுப்புகிறோம். அந்தத் தகவல் போய்ச் சேர்ந்தால் இரண்டு டிக்குகள், அதைப் படித்துவிட்டால் ப்ளூ டிக்குகள், ஒருவேளை அவர் திரும்பத் தகவல் அனுப்புவதாக இருந்தால் டைப்பிங் என்று வரும். இப்படி உடனுக்குடன், அடுத்தடுத்து நடக்கப்போகும், நடக்கும், அத்தனையும் தெரிந்துகொண்டோம். சரி இதில் அடுத்த நிமிடத்திற்கான சுவாரசியம் எங்கே?

எதிர்காலத்தை நோக்கியே ஓடிக்கொண்டிருக்கிறோமே, நிகழ்காலத்தில் என்ன செய்கிறோம்? அப்படி அவசரமாக எதிர்காலத்தைத் தெரிந்துகொண்டு என்னதான் செய்யப்போகிறோம்? நிச்சயம் தெரியவில்லை.

அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகிறது என்று தெரியாமல் இருப்பதுதானே வாழ்வின் உச்சபட்ச "சுவாரஸ்யமே". அதனால்தானே நிகழ்காலத்திற்கு, "present" என்று சொல்கிறோம். உண்மையில் அது வரம்தானே!

வாட்ஸ்அப், ஜிமெயில், திரெட்ஸ், ஃபேஸ்புக், இன்ஸ்டாகிராம் என எத்தனை வந்தாலும் கடிதத்திற்கு இணையான ஒன்று இந்த உலகில் இருக்க முடியுமா? நிச்சயமாக இல்லை. 60's, 70's, 80's, 90's கிட்ஸ்களுக்குத்தான் அதன் அருமை புரியும்.

இன்றைய வாட்ஸ்அப் குறுந்தகவல்களைப் பாருங்கள்.

Hi there?

S!

Meet?

Yup!

கார்ப்பரேட் மெயில்களைப் பாருங்கள்..

Hi j/ Hi k/ Hi S,

This is for your attention.

PFA (please find the attachment என்பதையும் கூட சுருக்கமாக).

குறுந்தகவல்கள்தான், இவ்வளவு குறுக்க வேண்டுமா?

இதில் தகவல் பரிமாற்றம் மட்டுமே நிகழ்கிறது. ஒரு உணர்வுப் பரிமாற்றம் இருக்கிறதா? நிச்சயம் இல்லை.

"ஒரு கடிதம் பாதி சந்திப்புக்குச் சமம்" என்று ஒரு கூற்று இருக்கிறது. அது அத்தனை பெரிய உண்மை. பொங்கல், தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ் எனப் பண்டிகை நாட்களில் குவியும் வாழ்த்து மடல்களுக்கு இணையானது இந்த உலகில் எதுவுமே இல்லை. எவ்வளவு பெரிய ஆடம்பரமான பரிசும் கொடுக்காத மகிழ்ச்சியை ஒற்றைக் கடிதம் நமக்கு நிச்சயம் கொடுக்கும்.

கையால் எழுதி, உணர்வெல்லாம் ஒன்றாக்கி, சிந்தனையை ஒருமுகப்படுத்தி, ஒரு எழுத்தை, ஒரு சொல்லை, நாம் எழுதும்பொழுது நம்மை நாமே அங்கு கடத்துகிறோம். ஒரு கடிதம் ஏன் மிக முக்கியம் என்றால், ஒவ்வொரு கடிதத்திற்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அதுதான் "கையெழுத்து!" பிடித்த நபரின் கையெழுத்துக்கென ஒரு உணர்வுண்டு.

இன்னும் சொல்லப்போனால், நமக்குப் பிடித்தவர் எழுதும் கடிதத்தை, படிக்கும்பொழுது, அவர் குரலே கேட்பது போல் இருக்கும். அந்தச் சிறப்பு கடிதத்திற்குத்தான் உண்டு.

ஒரு கடிதம் நிச்சயம் உங்களிடம் பொய்யே சொல்லாது. ஏனெனில் கையெழுத்திற்கு நம் நிலையைச் சொல்லும் பலம் உண்டு. உங்கள்



மகிழ்ச்சியை, அன்பை, போலவே கோபத்தை, சோகத்தை, அப்படியே பிரதிபலிக்கும் சக்தி கடிதத்திற்கு உண்டு.

பெறுபவரை நினைத்து, அவர் எப்படி இதை படிப்பார்? எப்படி உணர்வார்?! இப்படியாக மகிழ்வார் என்று கற்பனை செய்து, அன்பே! உயிரே! நட்பே! என ஆரம்பித்து தங்கள் அன்புள்ள, உண்மையுள்ள, என்று கையொப்பமிடும் அந்த நொடிக்கு இணையேது? முடிவில், உறைமேல் முகவரி என்று பிடித்த நபரின் மனப்பாடமாக வைத்திருக்கும் முகவரியை எழுதிய பின், ஒரு பசை போட்டு ஒட்டி, தபால் பெட்டியில் போட்டுவிட்டுத் திரும்புகையில் வருமே ஒரு ஆனந்தம்!! ஆஹா!!!

தபால்காரர் மணி அடித்ததும் நமக்குத்தான் யாரோ தபால் அனுப்பி இருக்கிறார்கள், என்று ஓடிவரும் அந்த பால்யம் எல்லாம் அற்புதமானவை. இன்னும் அன்றைய காதலர்களுக்குச் சொல்லவா வேண்டும்??

வைரமுத்து சொல்லியது போல "தபால்காரர் தெய்வமாவான்" சங்கதிதான்.

ஒரு கடிதத்தைப் பிரித்து, அதைத் தொட்டுப் படிக்கையில், அவரின் அருகாமையை நாம் உணர்வோம். இன்று பக்கத்தில்தான் இருக்கிறோம், ஆனால் தொலைந்துபோய் இருக்கிறோம். ஒரே வீட்டில் இருந்துகொண்டு போனில் பேசிக்கொண்டிருக்கிறோம்.

ஒரு தொலைதூரக் கடிதம் வந்து தீண்டும் அந்தத் தீண்டலை இன்றைய வாட்ஸ்அப் தகவல் செய்வதில்லை. ஏனெனில் அது சொல்வது வெறும் செய்தியைத்தான். உங்கள் அன்பை, பரஸ்பரத்தை நிச்சயம் ஒரு வாட்ஸ்அப் செய்தியால் கடத்தவே முடியாது. ஆனால் ஒரு கடிதம் நிச்சயம் அதைச் செய்யும்.

கடிதம் என்பது வெற்றுத் தாளல்ல, இரண்டு இதயங்களில் உரையாடல். அது எதுவாகவும் இருக்கட்டும்.. நட்பு, காதல், பாசம் என்னவென்றாலும் அது சொல்ல வந்த பொருளை, மிக நெருக்கமாக நம் இதயத்திடம் சென்று சேர்க்கும்.

கடிதம் என்பது வெறும் தாள் அல்ல, உனக்காக, உன்னை நினைத்து, உனக்கான



நேரத்தைச் செலவிட நான் இருக்கிறேன் என்று சொல்லும் ஒரு உறுதிமொழி! உலகின் ஏதோ ஒரு மூலையில் இருந்தாலும் உனக்காக இருக்கிறேன் என்று உணர்த்தும் ஒரு அன்பு.

கடிதம் என்பது வெறும் வாழ்த்து அல்ல, இந்த நல்ல நாளில், உன் வாழ்வில் எல்லாச் சிறப்பும் பெற்று, நீ வாழ, அதை மனதார வாழ்த்த, எப்போதும் இங்கே ஒரு உள்ளம் உண்டு என்பதன் அடையாளம்.

கடிதம் என்பது, வெறும் சொல்லைக் கடத்துவது அல்ல. அந்தச் சொல் உன்னிடம் வந்து விழுந்து, விதையாகி, முளைத்து, வெடிக்கும், ஒரு புரட்சி! ஆம் மாபெரும் புரட்சிகள் எல்லாம் ஒரு கடிதத்தில் இருந்துதான் துவங்கின.

ஒரு கடிதம் என்பது வெறும் கையெழுத்தல்ல, உலகில் மாபெரும் மாற்றங்கள் நிகழ்த்தக்கூடும் அரசாணை.

ஒரு கடிதம் என்பது வெறும் தாளல்ல, அது நம்மை ஆற்றுப்படுத்தும் ஒரு இளைப்பாறல்!

ஒரு மெல்லிய மயிலிறகின் வருடல்!

ஒரு சினேகிதனின் அருகாமை!

ஒரு காதலனின் வருகை!

ஒரு மனசாட்சி!

ஒரு மக்களின் புரட்சி! ஒரு தலைவனின் கொள்கை!

ஒரு தகப்பனின் பலம்! ஒரு தாயின் மடி.

பண்டப்பு
சமூகத்தின் இணைப்பு

# சிறை வாசிகளுக்கு

# புத்தக தானம் செய்வீர்...!



“ஒரு எழுத்து மனிதனின் வாழ்வை மாற்றி அமைக்கும் என்ற உயரியஎண்ணத்தோடு புத்தகங்களை திரட்டிக் கொண்டிருக்கும் சிறைத்துறையின்ஒப்புதலோடு இலக்கிய படைப்பு குழுமம் தமிழ்நாட்டில் உள்ள அனைத்துசிறைச்சாலை நூலகங்களுக்கும் நூல்களை சேகரித்துக்கொண்டிருக்கிறது.”

## புத்தகங்கள் அனுப்ப வேண்டிய முகவரி

---


இலக்கிய படைப்பு குழுமம்

3, அஜந்தா டவர்ஸ், தரைத்தனம், கார்ப்பரேஷன் காலனி தெரு.கோடம்பாக்கம், சென்னை 600 024. Ph: +91 73388 97788

padaippu admin@padaippu.com www.padaippu.com